கல்கி

விட்டல் புகழ் பாடும்
விவசாயி!



KALKI 21.12.2003 ரூ.6.00



ஒருதி சேர்ந்து போச்சு டோய்!

கலைவிழாச் சிறப்பிதழ்



everest/2003/PP/17 tm



உள்ளே
தில்லாலங்கடியா இருக்கே! 20
நெருப்பில் தோன்றிய நடனம்! 81
அமெரிக்கக் கோவலன்! 24
பஞ்சாயத்துப் பொறுப்பு! 4
கல்கி
21.12.2003



சென்னை மியூசிக் அகாடமியில் பாட வாய்ப்புக் கிடைத்தால், ஒரு பாடகருக்கு டாக்டரேட் கிடைத்த மாதிரி, என்று கலைத் துறை இன்னமும் போற்றுகிறது. அகாடமியில் கச்சேரி கேட்கவென்றே ரசிகர்கள் இன்னமும் அமெரிக்காவிலிருந்து வருகிறார்கள்... ஆனால், அகாடமி நிர்வாகம் சட்டச் சிக்கல்களில் மாட்டிக் கொண்டு விழி பிதுங்குகிறது. என்ன, ஏது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா...? அகாடமி பக்கம் தலை வைத்துப் படுக்காதவர்களுக்கு, இதோ அன்புடன் அந்த வம்பு:

வெகு காலமாக உள்ளுக்குள்ளேயே புகைந்து கொண்டிருந்த விவகாரங்கள், கடந்த இரண்டு, மூன்று வருடங்களாகச் சூடுபிடித்தன. ஆண்டுதோறும் அகாடமியில் தேர்தல் நடத்தி, தலைவர், செயலர், செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு வந்தார்கள். இடைப்பட்ட காலத்தில் நியமன டிரஸ்டிகள் குழு என்பதாக ஒன்று அமைக்கப்பட்டு, சில அதிகாரங்களைச் சுவீகரித்துக் கொண்டது. காலம் செல்லச் செல்ல, இந்தக் குழுவின் செல்வாக்கு, ஜனநாயக ரீதியாகத் தேர்வான செயற்குழுவின் அதிகாரங்களை விஞ்சிவிட்டது. ஒரு கட்டத்தில், இந்தப் போக்கை எதிர்த்தவர்களுக்குத் தேர்தலில் நிற்க அனுமதி மறுக்கப்பட்டபோது, அவர்கள் அகாடமியின் விதிமுறைகளைத் தூசி தட்டி எடுத்து ஆராய ஆரம்பித்தார்கள்.

விதிமுறைகளின் பிரதிகளைக்கூட பெரும் போராட்டத்துக்குப் பின்னரே பெற முடிந்தது. ஆனால், அந்த விதிமுறைகளுக்கும், சொஸைடிகள் சட்டப்படி மியூஸிக் அகாடமி பதிவு செய்யப்பட்டபோது சமர்ப்பிக்கப்பட்ட விதிமுறைகளுக்கும், ஏகப்பட்ட வித்தியாசங்கள். ஒரிஜினல் விதிமுறைகள் எப்படி, எதற்காக மாற்றப் பட்டன என்பதற்குச் சரியான பதில் இல்லை. இந்த மாற்றங்களை அகாடமியின் பொதுக்குழு எப்போது அங்கீகரித்தது என்பதற்கும் விளக்கமில்லை.

செயற்குழுவிலும் ஏகப்பட்ட விசித்திரங்கள். தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலத்தைவிட, நியமன டிரஸ்டிகள் பதவிக்காலம் அதிகமாயிருந்தது. டிரஸ்டிகள் தனியே கூடி எடுக்கும் முடிவுகளை, செயற்குழு மீது திணிப்பது மரபாகிவிட்டிருந்தது. செயற்குழுவில் பொருளாளர் என்கிற பதவியே இல்லை.

‘சொஸைடி சட்டப்படி பதிவு செய்யப்பட்ட மியூஸிக் அகாடமி, சொஸைடி சட்ட விதிகளுக்கு முரணாக நிர்வகிக்கப்படுகிறது’ என்று பாதிக்கப்பட்டவர்கள் புகார் செய்தார்கள். இதைத் தொடர்ந்து, ரெஜிஸ்டிரேஷன் டிபார்ட்மெண்ட்டின் ஐ.ஜி. விசாரணைக்கு உத்தரவிட்டார். அதன்படி, மாவட்ட ரிஜிஸ்



தப்புத் தாளங்கள்!

திரார் ஒருவர் மியூஸிக் அகாடமி குறித்து, விசாரணையை மேற்கொண்டு, விரிவான தமது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தார்.

அவரது விசாரணை அறிக்கையின் முக்கிய அம்சங்கள்:

- மியூஸிக் அகாடமி, சொசைடிகள் சட்டப்படி நடத்தப்படவில்லை.
- அதன் விதிமுறைகள் (bye-laws) சொசைடி சட்டவிதிகளுக்கு முரணாக இருக்கின்றன.
- ஒரிஜினல், பை-லாக்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் எதுவும் பதிவுத் துறைக்குத் தெரிவிக்கப்படவில்லை, பதிவுத் துறையின் அங்கீகாரத்தையும் பெறவில்லை.
- அகாடமியின் நிதி விஷயத்திலும் ஒழுங்கீனங்கள் காணப்படுகின்றன.

எனவே, மியூஸிக் அகாடமியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொது மக்கள் நலன் கருதி, அகாடமிக்குச் சொந்தமான மதிப்பு மிகுந்த அசையும் மற்றும் அசையா சொத்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, உரிய நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது.

அரசும் நிர்வாக குழுவை கலைத்துவிட்டு ஏன் தனி அதிகாரியை நியமிக்க கூடாது என்று நோட்டீசையும் அனுப்பியது. அது பற்றிய வழக்கு இறுதி விசாரணை பிப்ரவரி (2004)யில் வர உள்ளது.

ஒரு சிலரது செல்வாக்கு ஓங்குவதால் ஒரு நிறுவனத்தில் பொதுவாக விளையும் அனைத்துத் தவறுகளும் அகாடமியிலும் நிகழ்ந்துள்ளதாகத் தகவல்கள் கிடைக்கின்றன... கச்சேரி ஒலிப்பதிவு உரிமைகளை, முறையான ஒப்பந்தமின்றி ஒரு நிறுவனத்துக்கு அடிமாட்டு விலைக்கு வழங்கியது; அவசியமில்லாததாகக் கருதப்படும் ஒலிப் பதிவு இயந்திரங்களை வாங்கியது; எழுத்து வடிவ ஒப்பந்தம் இன்றி, அகாடமி வளாகத்திலுள்ள 'ஆர்ட் காலரி'யை வாடகைக்கு அளித்தது... என்று ஒரு பட்டியல் நீள்கிறது.

அகாடமி நிர்வாகத்துக்குள் நுழைய முற்படும் புதியவர்களும் அந்தப் பதவிகளின் செல்வாக்கு கருதிதான் வருகிறார்கள்... யாருக்குத்தான் நிறுவன நலன் குறித்த மெய்யான அக்கறை இருக்கிறது?' என்று பல உறுப்பினர்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

மியூஸிக் அகாடமி விருதும், மத்திய அரசின் பத்மபூஷன் விருதும் ஒரு சேரப் பெற்ற ஒரு கலைஞர் பிரதமரைச் சந்தித்து, தமது இரட்டிப்பு சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டபோது, பிரதமர், ''மியூஸிக் அகாடமியில் ஏகப்பட்ட முறைகேடுகளாமே?'' என்று கேட்க, இவர் திகைத்துப் போனாராம். உடனே சென்னை நண்பருக்குப் ஃபோன் செய்து, 'என்ன விவகாரம்?' என்று கேட்க, சென்னை நண்பர் சொன்னாராம்: "ஃபோனில் சொல்லக் கூடிய சிறிய விஷயமில்லை அது; சீசனுக்கு வரும்போது சாவகாசமாகப் பேச வேண்டிய விஷயம்!"

— நமது நிருபர்
படம் :। ஸ்ரீஹரி

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

பஞ்சாயத்துப் பொறுப்பு!



கல்லடை போட்டுத் தேடினேன்' எனும்படி அமைந்த ஒரு சம்பவத்தைச் சொல்லுங்கள்.

வீடு கிரகப்பிரவேசம். உற்சாகமாக பங்கு கொண்டேன். மதியம் தற்செயலாக கழுத்தைத் தொட்டுப் பார்த்தால் நெக்லஸைக் காணோம். எங்கு தேடியும் கிடைக்கவில்லை. யாரைக் கேட்க? யாரைச் சந்தேகப்பட? என் கல்யாணத்திற்காகச் செய்த நெக்லஸ் என்பதால் சென்டிமென்டாகவும் அதன் மீது பற்று. அம்மா வேறு, "நல்ல நாளும் அதுவுமா தொலைச்சிட்டு நிக்கிறியே" என்று திட்ட, அழுதுவிட்டேன். ஒரு வேளை கிளம்பும் போதே அணிந்து கொள்ளவில்லையோ என்ற சின்ன நப்பாசை. இல்லை, விழா நடந்த இடத்தில்தான் தொலைந்திருக்கும் என்ற எண்ணம். மாறி மாறித் தேடியபடியே இருந்தேன். அப்போதுதான் ஏனோ அந்த எண்ணம் தோன்றியது. புடைவையை நன்கு உதறிப்பார்த்தேன். மடிப்புக்குள்ளேயே மாட்டிக் கொண்டிருந்தது அந்த நெக்லஸ்.



• கணவர் • குழந்தைகளுடன் காயத்ரி கிரீஷ்

ரிப்பன் கட்டிக் கொண்ட பருவத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி?

ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது 'அகர்வால் நலசங்கம்' என்ற அமைப்பு நடத்திய பஜனைப் போட்டியில் கலந்து கொண்டேன். தொடர்ந்து மூன்று வருடங்கள் இந்தப் போட்டியில் முதல் பரிசு பெற்றதற்காக ஒரு சிறப்புப் பரிசு எனக்கு அளித்தார்கள். ரிப்பன் கட்டிய இரட்டை ஜடையோடு நான் காணப்படும் அந்தப் புகைப்படத்தை, ஒரு பொக்கிஷமாகப் பாதுகாத்து வருகிறேன். காரணம், அதை வழங்கியவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனாச்சே!

கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்ட அனுபவம்?

மிகவும் சின்ன வயதில் பெங்



களூரில்தான் வாசம். அப்பா அங்கு ஐ.பி.எம். நிறுவனத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். பக்கத்தில் "காயனசமாஜ்" என்ற அமைப்பு ஏற்பாடு செய்யும் கச்சேரிகளுக்கு என்னை என் பெற்றோர் மறக்காமல் அழைத்துச் செல்வார்கள். மேடைப் பாடகர் கல்யாணி, ரேவாணி என்று பாடும்போது "இது என்ன ராகம்?" என்று என்னைக் கேள்விகேட்டு, ஒவ்வொரு சரியான பதிலுக்கும் சாக்லெட் கொடுத்து உற்சாகப் படுத்துவார்கள். ஆக என் இசையறிவு தொடங்கியது பெங்களூரில்தான்.

மத்தியஸ்தம் செய்த விஷயங்கள்?

என் ஐந்து வயது மகள் விஷ்ருதிக்கும், ஒன்றரை வயது மகன் விஷ்வக்குக்கு மிடையே தினமும் பலமுறை மத்தியஸ்தம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரே மாதிரியான இரண்டு பொருள்களை ஆளுக்கு ஒன்றாக வாங்கிக் கொடுத்தால்கூட இவளுடையதுதான் அவனுக்கு வேண்டும். அவனுடையதுதான் இவளுக்கு வேண்டும் என்று பிடிவாதம். இன்னும் சில வருடங்களில் இந்தப் பஞ்சாயத்துப் பொறுப்பு அதிகமாகிவிடுமோ என்று பயமாக இருக்கிறது.

பட்டுப்புடவை கலெக்‌ஷன் எந்த அளவில் இருக்கிறது?

எனக்குப் பட்டுப்புடவை என்றால் ரொம்ப இஷ்டம். முதன் முதலில் வாங்கியது, கணவர் வாங்கிக் கொடுத்தது, முதல் கச்சேரியில் அணிந்து கொண்டது என்று பலவித பட்டுப்புடைவைகளைப் பாதுகாத்து வருகிறேன். ஒவ்வொரு தீபாவளிக்கும் என் அம்மாவும் மாமியாரும் பட்டுப்புடவை வாங்கிக் கொடுப்பார்கள். ஒருமுறை புட்டபர்த்தியில் பாபா எதிரில் பாடியபோது, அவர் கையால் எனக்குக் கொடுத்த பிங்க்கும், நீலமும் கலந்த டபுள்ஷேட் பட்டுப் புடவை எனக்கு ரொம்ப ஸ்பெஷலானது.

தள்ளிப் போட்டுக் கொண்டே வரும் விஷயம்?

சங்கீதம் சொல்லிக் கொடுக்கணும் என்ற ஆசை உண்டு. பலரும் நான் இதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். இதற்குத் தேவைப்படும் பொறுமையும் எனக்கு நிச்சயமாக உண்டு. என்றாலும், இதைச் செயல்படுத்துவது தள்ளிக் கொண்டே போகிறது. ஒரு வேளை வெளியூர்க் கச்சேரிகள் அதிகமாக இருப்பதும் ஒரு காரணமாக இருக்கக் கூடும்.

நினைத்தாலே சிரிப்பு வருகிறது எனும்படியான நிகழ்ச்சி ஒன்று!

பி.எஸ்.ஸியில் கணிதத்தை முக்கியப் பாடமாக எடுத்து, திருப்திகரமாக இறுதித் தேர்வை முடித்திருந்தேன். முக்கியப் பாடங்கள் எல்லாவற்றிலும் நூற்றுக்கு நூறு என்பதால், பல்கலைக்கழக ரேங்க் வாங்கியதாகவும் அறிவித்தார்கள். சந்தோஷம் தலைக்கேற உடனே வீட்டுக்கு ஃபோன் செய்து விஷயத்தைச் சொன்னேன். வீட்டுக்குள் நுழைந்தவுடன் எனக்கு எப்படிப்பட்ட வரவேற்பு கிடைக்கும் என்று விதவிதமாக யோசித்தபடி கதவைத் திறந்தால், அங்கே கையில் பிரம்போடு என் தம்பி நின்று கொண்டிருக்கிறான்! 'எதுக்காக என் பிழைப்பைக் கெடுக்கற? இப்ப எல்லாரும் நீ வாங்கின அளவு மார்க்கை, நானும் வாங்கணும்னு எதிர்பார்ப்பாங்க' என்றான் பல்லைக் கடித்துக் கொண்டு பிரம்பை ஓங்கியபடி. இப்போது நினைத்தாலும் சிரிப்பு வந்துவிடும் நிகழ்ச்சி அது.

— ஜி.எஸ்.எஸ்.

• இசைப் பேரொளி பட்டம் பெற்றபோது...



● ஆர். அப்துல் சலாம், திருச்சி - 21

? ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய சத்தீஸ்கர் வேட்பாளர் ஜுதேவ், தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் குற்றச்சாட்டிலிருந்து தப்பிவிட்டாரே?

! தேர்தல் வெற்றி என்பது மக்களின் அங்கீகாரமாக இருக்கலாம். ஆனால், சட்டத்தின் ஆய்ந்த தீர்ப்பு அல்ல. ஜுதேவ் மீது சி.பி.ஐ. விசாரணைக்குப் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். இப்படிப் பட்ட நிலையில் மக்கள் அவரை ஆதரித்துப் பதவியில் அமர்த்தியிருப்பது, நமது வாக்காளர்கள் உணர்ச்சி வசப்பட்டு வாக்களிக்கிறார்களே தவிர, சிந்தித்து வாக்களிப்பதில்லை என்பதற்கு மற்றொரு சான்று.

● ஆர்.ஜெஸ்மின் ரமேஷ், மதுரை - 20


? வீ வை வி வீழ்த்துவாரா...?

! அதற்குமுன் 'வி' சின்னம் காட்டுகிறவரால் வீ. வீழ்த்தப்படுவார்!

● கார்த்திக் அமர்த்தியா, மயிலாடுதுறை

? அரசியலில் தார்மிகப் பொறுப்பு, கடமை என்பதற்கு இன்றைய அடையாளம் எது...?

! தார்மிகப் பொறுப்பு: திக்விஜய் சிங்கை முந்திக் கொண்டு சோனியா நாலு மாநிலங்களிலும் காங்கிரஸ் தோல்விக்குத் தாமே பொறுப்பேற்பதாகக் கூறியது; கடமை: நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடரில் பங்கேற்க என்னை அனுமதியுங்கள், என்று வைகோ பொடா நீதிமன்றத்தில் கோரிக்கை வைத்தது.



• மேலை நாகரிகம்!



• தார்மிகப் பொறுப்பு

● கே. முரளிதரன், மதுரை - 10

? மேல் சபை கூட்டங்களில் லதா மங்கேஷ்கர், ஹேமமாலினி, தாராசிங் சரிவரக் கலந்து கொள்ளாதது பற்றி..?

! கௌரவ அங்கத்தினர் பதவி என்பதால் கௌரவமாக விலகியே இருக்காங்க போல!

● எம். சிவகுருநாதன், தஞ்சாவூர்.

! அகில இந்திய அளவில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மூன்றாவது அணி அமைக்க முயன்றால், அதனை ஆதரிப்போம் என்று விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் அசோக் சிங்கால் தெரிவித்திருப்பது பற்றி..?

! மிக்க மகிழ்ச்சி. மூன்றாவது அணியில் வி.எச்.பி. என்றால், பி.ஜே.பியை விட்டு விடுவார்கள் என்றல்லவா அர்த்தம்! நாட்டுக்கு இதைவிட நல்லது ஏதும் இராது. ஆனால், அப்படி நடக்கும் என்று தோன்றவில்லை. சிங்கால் இன்று ஒன்று சொல்லுவார். நாளை வேறு மாதிரி நடந்து கொள்ளுவார்.

கமல் படத்தின் புதிய தலைப்பு பற்றி...?



• ஓசைப் பொருத்தம்!

● இ. கஸ்தூரி, அகஸ்தியர்பட்டி.
? தமிழ்நாடு காங்கிரஸின் தற்போதைய சூழலுக்கு ஒன் லைன் கமெண்ட்...
! நாய் வாலை நிமிர்த்தவும் முடியாது; தமிழக காங்கிரஸைத் திருத்தவும் முடியாது!

● என்.சண்முகம், திருவண்ணாமலை.
? தமிழக மீனவர்களைக் கடத்துவது புலிகள்தான் என்கிறாரே முதல்வர்...?
! அப்படித்தான் செய்திகளும் வருகின்றன. இந்தியாவும் ஸ்ரீலங்காவும் சேர்ந்து ரோந்துப்பணிகள் ஆற்ற வேண்டும் என்ற 'ஜெ'யின் கோரிக்கையும் நியாயமானதுதான். ஆனால் இதை மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு நாசூக்காக சாதிக்க வேண்டுமே தவிர, அறிக்கை விடுவதென்பது முத்தரப்புக்கும் இவர் சவால் விட்டது போலாகிறது. ராஜதந்திரம் அல்ல. அது சரி, இலங்கையிலிருந்து வந்த அகதிகள் பலர் கைதாகி, வழக்கு நடத்தப்படாமலேயே சிறையில் நீண்ட காலமாக வாடுகிறார்களே... அதை உடனே முதல்வர் கவனிக்கலாமே!

● என். பாலசுப்ரமணியன், திருச்சி - 2
? அரசு வழக்குத் தொடுக்காத பத்திரிகைகளின் பெயர்களைச் சொல்ல வேண்டுகிறேன்...?
! கல்யாணப் பத்திரிகைகள்!

● என். மாணிக்கம், அரக்கோணம்
? நெல்சன் மண்டேலா தன் தகுதியை, வயதைக் கூடப் பாராமல், அமெரிக்க பாப் பாடகியை முத்தமிட்டிருக்கிறாரே...?
! மேலை நாகரிகத்தை நம்ம தராசுல எடை போடக் கூடாதுங்க. அங்கே இது ஏற்கப் படுகிற மரியாதை.

● ஏ. ராஜேந்திரன், செங்கல்பட்டு. ❒
? ஐந்து மாநிலங்களில் ஐந்து பெண்கள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பது வரவேற்கத்தக்கதுதானே...?
! அரசியலில் பெண்களுக்கு மக்களின் அங்கீகாரம் கிடைக்கிறது என்ற அளவில் வரவேற்கத்தக்கதுதான். ஆனால், திறமையையும் தகுதியையும் இவர்கள் நிரூபிக்காவிட்டால் 'பெண்களே இப்படித்தான்' என்ற அவப்பெயர்தான் வந்து சேரும்!

● பறம்பை இரா.சு.பிரகாசம், திருச்சி - 102
? சிந்தனையின்றி வேகமாகச் செயல்படுவது நல்லதா? சிந்தித்து மெதுவாகச் செயல்படுவது நல்லதா...? சிந்தனை இழையோடும் பதிலாகச் சொல்லுங்கள்...
! நிதானமாகச் சிந்தித்து, திட்டம் வரையறுத்து, வேகமாகச் செயல்படுவது நல்லது!



• கடமை உணர்வு

● வீ.பா. கிருஷ்ணன், மதுரை - 4.
? ஜெ.யை டான்ஸி வழக்கில் சிக்க வைத்த சு.சுவாமி, இப்போது அ.தி.மு.கவோடு கூட்டுச்சேரத் தயார் என்கிறாரே...?
! ஒரு வேளை, நள்ளிரவுக் கைதை தவிர்ப்பதற்காகச் சொல்லி வைத்திருக்கலாம். ஆனால், சு.சுவாமியின் கோரிக்கையை ஏற்க, ஜெ. ஒன்றும் அசடு அல்ல...!



• தேர்வும் தீர்ப்பும்...

● சு.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.
? கமலின் புதிய படத்துக்கான தலைப்பு 'விருமாண்டி' — எப்படியிருக்கிறது...?
! உறுமுகிறது — அவரைப் போலவே!

❒ ரூ.100/- பரிசு பெறுபவர்:
ஏ. ராஜேந்திரன்,
6, ஏகாம்பரனார் தெரு,
வேதாசலம் நகர், செங்கல்பட்டு

● ரூ. 50/- பரிசு பெறுபவர்:
எம். சிவகுருநாதன்,
1, ஆதிசேஷன் நகர், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் - 613 004

ராஜாஜிக்கு அஞ்சலி செய்யும் காற்றாடிகள்!

ராஜாஜியின் 125வது பிறந்த நாள் விழாவையொட்டிப் பேசிய தமிழக ஆளுனர், "ராஜாஜியின் பணி குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது; அது மறு ஆய்வுக்கு உட்பட்டு சரியான முறையில் கணிக்கப் படவேண்டும்" என்றார். "குறைத்து மதிப் பிட்டாலும் தேவலாம்; பொய்யான அவ தூறுகளைச் சொல்லி அவருக்குக் களங்கம் ஏற்படுத்த முயற்சி செய்கிறார்களே" என்று அங்கலாய்க்கிறார் கல்கி நேயர் டாக்டர் எஸ்.எஸ். ராஜகோபாலன். இவர் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் பேச்சாளர் ஒருவர், "மதுவிலக்கை அமல்படுத்தியதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய, ராஜாஜி மூவாயிரம் பள்ளிக் கூடங்களை இழுத்து மூட ஆணையிட்டார்" என்று சொன்னாராம்!

இப்படி அண்டப்புளுகு ஆகாசப்புளுகளைக் கட்டவிழ்த்து விடுவது ஏன்? இதற்கு ராஜாஜியின் ஒரு கடிதத்தையே பதிலாகத் தருகிறார், மற்றொரு கல்கி வாசகர், ஆர். ராமசுப்பிரமணியன். முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் ராஜாஜியின் சுதந்திரா கட்சியைச் சேர்ந்த ஒருவர் மேடை ஏறி, எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரை அநாகரிகமாக விமர்சித்தாராம். இதனால் வருத்தமடைந்த ராம சுப்பிரமணியன், ராஜாஜிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதற்கு ராஜாஜியின் பதில்:

16.12.67

அன்புடையீர்,

கடிதம் பார்த்து வருத்தமடைந்தேன். இதற்கெல்லாம் காரணம் மேடைப் பேச்சுக் கூட்டத்தில் தெய்வ பக்தி இல்லாதது தான்.


– இராஜகோபாலாச்சாரி

ராஜாஜி குறிப்பிடுவது மெய்யான தெய்வ பக்தியை. இன்றைய அரசியல்வாதிகள் தெய்வத்தையே அரசியலுக்கு இழுத்து வந்து, கட்சி சாயங்கள் பூசிக் கொண்டிருக்கிறார்கள். "நான் தான் முழுமுதற்கடவுள்"; "பராசக்தியின் அவதாரமே நான்தான்" என்றெல்லாம் கூட நமது அரசியல்வாதிகள் சீக்கிரமே பேசக் கூடும்!

ராஜாஜி ஒரு தீர்க்கதரிசி என்பதற்கு அவரது 125வது பிறந்த தினத்தில் சில எடுத்துக்காட்டுக்கள் கூறப்பட்டன. (ஜெயில் டயரிக் குறிப்பு; பாகிஸ்தான் பிரிவினை; சுதந்திரப் பொருளாதாரம்). அவற்றிலெல்லாம் சிகரமானது அணு மின்நிலையங்கள், அணு ஆயுதக் குவிப்பு ஆகியவை பற்றி தெளிவாகவும் உறுதியாகவும் ராஜாஜி எதிர்ப்புத் தெரிவித்துப் பேசியதும், எழுதியதும், உலக அமைதிக்காக அமெரிக்க அதிபரிடம் தூது போனதும் ஆகும். சமீபத்தில் ஈரோடு அருகே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தைச் சேர்ந்த ஒரு கதிரியக்கப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. விஷயம் கேள்விப்பட்டதும், சம்பந்தப்பட்டவர்கள் அந்த ஆபத்தான பொருளைப் பாதுகாப்பாகத் திரும்பவும் எடுத்துப் போயிருக்கலாம். ஆனால் கல்பாக்கத்தைச் சேர்ந்த கதிரியக்கப் பொருள், ஈரோடு பக்கம் எப்படி வந்தது? இதுவரை பதில் இல்லை. கல்பாக்கத்திலேயே கூட அந்தக் கதிரியக்கப் பொருள் பாதுகாப்பாக கான்கிரீட் பெட்டகங்களில் சீல் வைக்கப்பட்டு, ஆழப் புதையுண்டிருக்க வேண்டாமோ? "அணு மின் நிலையங்களால் ஆபத்து ஏதும் இல்லை" என்ற அறிக்கை மட்டும் அவ்வப்போது வந்து கொண்டிருக்கும். அமெரிக்காவில் லாங் ஐலண்ட் விபத்துக்குப் பிறகும், ருஷ்யாவின் செர்னோபைல் விபத்துக்குப் பிறகும் "அணு மின் நிலையங்களால் ஆபத்தே இல்லை" என்று கிளிப்பிள்ளை மாதிரி சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி நம்புவது?

போபாலில் யூனியன் கார்பைட் ஆலையில் விஷ வாயுக் கசிவு ஏற்பட்டு, அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் இருக்கிறார்கள். நஷ்ட ஈடு கூட கிடைக்காதவர்கள் உண்டு. 'நடந்து முடிந்து போன கதை' என்று எண்ண வேண்டாம். அந்த ரசாயன ஆலையில் ஏற்பட்ட கசிவு தாற்காலிகமாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு நிரந்தரத் தீர்வை இன்றுவரை அந்த நிறுவனம் மேற் கொள்ளவில்லை. மறுபடியும் எந்த நிமிஷத்திலும் அங்கே உயிராபத்தான

ரசாயனக் கசிவுகள் ஏற்படலாம்! ஒரு 'டைம் பாம்' மாதிரி தான். எப்போது வெடிக்குமோ தெரியாது! நமது நாட்டில் மனித உயிர் என்பது அவ்



அமெரிக்காவில் காற்றாடி மின் நிலையங்கள்



வளவு மலிவானதாகி விட்டது. அதனால்தான், ருஷ்ய உதவியுடன் இன்னொரு அணுமின் நிலையம் கூடங்குளத்தில் உருவாகி வருகிறது.

மேல்நாடுகளில் ஆபத்து மிக்க ரசாயன ஆலைகள், அணுமின் நிலையங்கள் ஆகியவற்றுக்கு எதிர்ப்பு அதிகமாகி வருகிறது. அதனால் அங்கே வேறு திசைகளில் ஆராய்ச்சிகள் திரும்புகின்றன. சமீபத்திய முன்னேற்றம் காற்றாடிகள் உதவியுடன் மின் உற்பத்தி. நல்ல காற்று வீசும் கடற்கரைப் பகுதிகள், கணவாய்ப் பகுதிகளில் பனை மரங்கள் போல் ஏராளமான காற்றாடிகளை நிறுவுகிறார்கள். காற்றின் விசையால் காற்றாடி சுழலும் போது, ஜெனரேட்டர் இயங்கி மின் உற்பத்தி நடக்கிறது. இதில் மூன்று குறைபாடுகளைக் கண்டார்கள். 1. நிலப்பரப்பின் ஏராளமான விஸ்தீரணத்தை காற்றாடிகள் ஆக்கிரமித்துக் கொண்டன. 2. காற்றின் வேகம் சில சமயம் அதிகரித்து புயலாக மாறினால், காற்றாடிகள் சேதமுற்றன. 3. கட்டுப்படியாகும் விலையில் விநியோகிக்க முடியவில்லை.

தீவிர ஆராய்ச்சி நடந்தது. இப்போது காற்றின் வேகத்துக்கு ஏற்ப, தன் வடிவத்தைத் தானே மாற்றிக் கொள்கிற காற்றாடி அலகுகளை உருவாக்கியுள்ளனர். இதனால் காற்றாடி சேதமடைவதில்லை. நிலப்பரப்புக்குப் பதில், கரையோரமாக கடற்பரப்பிலேயே மிதக்கும் காற்றாடிகளை உருவாக்கி வருகிறார்கள். இதனாலெல்லாம் உற்பத்தி அதிகரிக்க, மின்சாரத்தின் யூனிட் விலையும் குறைகிறது. ஏற்கெனவே அமெரிக்காவில் லட்சக்கணக்கான வீடுகளுக்கு, காற்றாடி மின் நிலையங்கள் மின்சாரம் சப்ளை செய்து வருகின்றன. டென்மார்க்கில் உலகிலேயே மிகப்பெரியதான காற்றாடி மின் நிலையம் 245 மில்லியன் டாலர் முதலீட்டில் உருவாகி வருகிறது! விஞ்ஞானிகளுக்கு இன்று ஒரே பிரச்னை, காற்றாடி மின் நிலையங்களில் மிக அதிக அளவில் மின் உற்பத்தி நடக்கும் போது, அதை உடனுக்குடன் சேதமின்றி, எப்படித் தொலைவான இடங்களுக்குக் கொண்டு போய் விநியோகிப்பது என்பதுதான். ஆக, உற்பத்தி பற்றிய ஆய்வு, இன்று விநியோக ஆய்வாக மாறியுள்ளது!

***

"ஆளுக்கொரு பனை ஓலை விசிறியை எடுத்துக்கிட்டு சாரி சாரியாக ஜனங்க எங்கே போறாங்க...?"

"நம்ம தமிழக அரசு காற்று மின் நிலையம் அமைச்சிருக்கில்ல... இப்ப காற்றே வீசலையாம்! அதனால செயற்கைக் காற்றை உருவாக்கப் போறாங்க!"

செம்பியன்

அஞ்சலி



பி.ராமமூர்த்தி

"ஹரித்வார் சென்றிருந்தேன். ஏதோ மளிகை சாமான்கள் வாங்கி வரும்படி அனுப்பி வைத்தார்கள். கடைக்காரர், ஒரு செய்தித்தாளில் சாமான்களைச் சுற்றிக் கொடுத்தார். வருகிற வழியில் அந்தப் பேப்பரில் இருந்ததைப் படித்துக் கொண்டே வந்தேன். வீட்டுக்கு வந்தவுடன் கையில் பேப்பர் மட்டும் இருந்தது. சாமான்களைக் காணோம். திரும்பவும் கடைக்குப் போய்ச் சாமான்களை வாங்கிக் கொண்டு வந்தேன்."

– படிப்பதில் தமக்கு எப்போதுமே சுவாரசியம் உண்டு என்று சொல்கிறபோது இந்தச் சம்பவத்தை நினைவு கூறுவார் அண்மையில் மறைந்த பிரபல நரம்பியல் நிபுணர் டாக்டர் பி.ராமமூர்த்தி.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி துவக்கப்பட்ட ஆண்டில், அதில் அட்மிஷன் தரப்பட்ட முதல் பாட்ச் மருத்துவ மாணவர்களில் பி.ராமமூர்த்தியும் ஒருவர்.

பழைய கட்டடம், ஆர்வமூட்டாத சுற்றுச்சூழல் இவை காரணமாக, அங்கே படிக்க அவருக்கு விருப்பமில்லை. அப்போதைய நல்வாழ்வு அமைச்சரை (குடும்ப நண்பர்தான்) நேரே சந்தித்து, "மாநிலத்திலேயே இரண்டாவது ரேங்க் வாங்கியிருக்கிறேன். சென்னை மருத்துவக் கல்லூரியில் படித்து டாக்டராகவேண்டும் என்பதுதான் கனவு. சிறந்த மாணவனுக்கு, தான் படிக்க விரும்பும் கல்லூரியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தரக்கூடாதா?" என்று வாதாடி, எம்.எம்.சி.க்கு மாற்றிக் கொண்டார். அதனால், பத்து நாட்களே படித்தாலும், முன்னாள் மாணவர் என்ற முறையில் எம்.எம்.சி., ஸ்டான்லி ஆகிய இரு கல்லூரி விழாக்களிலும் ஆர்வமாய்க் கலந்து கொள்ளுவார் ராமமூர்த்தி.

ராமமூர்த்திக்கும் அவரது மனைவி இந்திராவுக்கும் இடையே மலர்ந்த காதல் சுவாரசியமானது.

"1944ல் மார்ச் இறுதியில் ஒரு நாள். நான் ஜி.ஹெச்சில் மன்றோ வார்டில், ஒரு நோயாளிக்கு குளுகோஸ் ஏற்றப் போராடிக் கொண்டிருந்தேன். அப்போது தேவதை போல ஒரு பெண், வார்டுக்குள் நுழைந்தார். அவள் இந்திரா லட்சுமிபதி. அவளைப் பார்த்தவுடன், ஏற்கெனவே குளுக்கோஸ் ஏற்றத் தடுமாறிக் கொண்டிருந்த நான் மேலும் தடுமாறிப் போனேன். என்னை அமைதிப்படுத்தி குளுகோஸ் ஏற்ற உதவினார். நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தோம். சில நாட்களில் நான் இந்திராவைக் காதலிப்பதை உணர்ந் தேன். அவருக்கும் அதே நிலை.


மூன்று மாதம் கழித்து அம்மா, மற்றும் சகோதரிக்கு இந்திராவை அறிமுகப்படுத்தினேன். ஆரம்பத்தில் இலேசான தயக்கம். இந்திராவுக்கும், எனக்கும் திருமணம் செய்து வைக்காவிட்டால், நான் ராணுவத்தில் சேர்ந்து விடுவேன் என்று ஓர் அஸ்திரத்தைவிட, கொஞ்ச நஞ்ச எதிர்ப்பும் கரைந்தது. 1945ல் திருமணம்.

என் காதல் கதையைச் சொன்னால் பலர் நம்புவதில்லை.

டாக்டர் பி. ராமமூர்த்தியின் 75வது பிறந்த நாள் 97 ஜனவரியில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. அதன் பின்னும், ஓய்வில்லாமல் தன் பணியைத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தார். ஓய்வு பெறுவது பற்றிப் பேசினால், அவர் பிரபல எழுத்தாளர் பார்பரா கார்ட்லண்டின் வரிகளை மேற்கோள் காட்டுவார். "உயிரோடு இருக்கும் வரை நான் செய்ய வேண்டியவை ஏராளமாக இருக்கின்றனவே!"

'தடைகள் பல தாண்டி' நூலிலிருந்து:

மௌலி



ஆஹா! ரூ.10,000 பரிசு!

ஆஹா! ரூ.10,000 பரிசு!

குவிஸ் போட்டி (2) முடிவுகள்

ஆஹா! ரூ.10000 - இரண்டாவது போட்டிக்கும் எக்கச்சக்கக் கூப்பன்களை அனுப்பி அசத்திட்டீங்க, போங்க. சரியான விடைகளே நூற்றுக்கும் மேல்.

குலுக்கல் முறையில் பரிசை வென்ற வாசகர்:

எஸ்.ஏ. விஜயலக்ஷ்மி,
19/52, ராஜன் ரோடு,
சீனிவாசபுரம்,
தஞ்சாவூர் 613009.

அப்படியே குலுக்கலில் இருபது பேரைத் தேர்ந்தெடுத்து, ஆறு மாதங்களுக்கு கல்கி இதழ் அனுப்பி வைக்கிறோம்.

வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்!

குவிஸ் போட்டி(2)க்கான விடைகள்:

1) பிரம்மபுத்ரா நதி உற்பத்தியாவது **மானஸரோவர்** ஏரியில்.

2) 2002ல் ஆஸ்கர் விருதுக்காக அனுப்பப்பட்ட இந்தியத் திரைப்படம் **லகான்.**


3) ஐக்கிய நாடுகள் சபையின் சின்னத்தில் இருப்பது **ஆலிவ் மரக்கிளை.**

4) சமீபத்தில் தமது 100வது புத்தகத்தை வெளியிட்ட உலக சாதனைப் புத்தக நிறுவனம் **கின்னஸ் புக் ஆப் வேர்ல்ட் ரிக்கார்ட்ஸ்.**

5) பின்பக்கமாகப் பறக்கக்கூடிய ஒரே பறவையின் பெயர் **ஹம்மிங் பேர்ட்** (ஆங்கிலத்தில்)

6) இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா இறுதியாகப் பயணித்த அமெரிக்க விண்கலத்தின் பெயர் **கொலம்பியா.**

வாழ்த்துகள்



பா.ஜ.க. கையாண்ட ராஜதந்திரம்!

மூன்று வடமாநிலத் தேர்தல்களில் பா.ஜ.க. பெற்ற அபரிமித வெற்றி, அக்கட்சியினரையே கூட ஆச்சர்யத்தில் ஆழ்த்தியிருக்கிறது. 'விஞ்ஞான பூர்வமான' தேர்தல் கணிப்புகள் மீண்டும் தோல்வி அடைந்தன.

வெற்றிக்குக் காரணம், மத்திய அரசின் பி.ஜே.பி. நிகழ்த்தியுள்ள சாதனைகள்தான் என்று கூறியிருக்கிறார் உமாபாரதி. இதை ஏற்பதற்கில்லை.

மாநிலத் தேர்தல்களில் வாக்களிக்கும் மக்கள், மத்திய அரசின் செயல்பாடுகளை நினைத்துக் கொண்டு தங்கள் வாக்குரிமையைப் பிரயோகிக்க மாட்டார்கள். மாநில அரசையும், மத்திய அரசையும் வெவ்வேறு அமைப்புகளாக இனங்காணும் அளவுக்கு, இன்றைய இந்திய வாக்காளர்களுக்கு அனுபவம் உண்டு.

அப்படியானால், பா.ஜ.கவின் அபரிமித வெற்றிக்குக் காரணம் என்ன...?

முதல் காரணம், காங்கிரஸ் கட்சியின் மிதமிஞ்சிய தன்னம்பிக்கை; அதன் விளைவான அலட்சியப் போக்கு. தங்கள் கட்சி ஜெயிக்க வேண்டும் என்ற ஆர்வத்துக்குப் பதில், தங்கள் கட்சி ஜெயித்து விடும் என்ற முன் தீர்மானத்துடன் இயங்கியது தவறாகிவிட்டது. இதனால்தான், காங்கிரஸ் ஆட்சியை ஓரளவு போற்றுகிற வகையில் அமைந்திருந்த ராஜஸ்தானில்கூட கடும் தோல்வி. பா.ஜ.கவின் மத அடிப்




கல்கி

2003 டிசம்பர் 21
சுபானு மார்கழி 6
மலர் : 62
இதழ் : 21



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




படைவாதத்துக்கு மாற்றாக, ராஜஸ்தானில் காங்கிரஸ், ஜாதி அடிப்படையிலான பிரிவினை வாதத்தை, அரசியல் நோக்குடன் சில்லறைத்தனமாகத் தூண்டிவிட்டது. இது காங்கிரஸுக்கு உதவுவதற்குப் பதிலாக 'பூமராங்' ஆகி, அக்கட்சியையே வீழ்த்திவிட்டது. மத்திய பிரதேசத்திலும், சத்திஸ்கரிலும் காங்கிரஸ் ஆட்சி மெச்சிக் கொள்ளும்படி நடைபெறவில்லை.

இந்தியாவின் மூத்த கட்சியான காங்கிரஸில், உட்கட்சித் தேர்தல்கள் நடந்து எத்தனை காலம் ஆகிறது! வாரிசுத் தலைமையும் நியமனத் தலைவர்களும், ஒரு கட்சியை ரொம்ப காலத்துக்குக் கட்டிக் காக்க முடியாது என்பது தெளிவாகியிருக்கிறது. உட்கட்சிப் பூசல்கள், பிளவுகள், மாநிலம்தோறும் காங்கிரஸின் 'அசையாச் சொத்தாக' அபிவிருத்தி ஆகி, அக்கட்சியைக் கலகலத்துப் போகச் செய்திருக்கின்றன. அடிமட்டத் தொண்டர்கள் அதிருப்தியில் இருக்கும்போது, எந்த ஒரு கட்சியாலும் தேர்தலில் ஜெயிக்கவே முடியாது.

காங்கிரஸை ஜனநாயக அடிப்படையிலான அமைப்பாகப் புனருத்தாரணம் செய்தாலன்றி, அது சக்தி வாய்ந்த மாற்றுக் கட்சியாக இயங்க முடியாது. இதை நிகழ்த்துவதற்கு முன் அதன் தலைவி சோனியா காந்தி, நாட்டு நலன் கருதி ஒரு தியாகம் செய்தாக வேண்டும். பிரதமர் பதவியில் தாம் அமரப் போவதில்லை என்ற பகிரங்க அறிவிப்பைச் செய்தாக வேண்டும்.

இன்று சோனியா காந்தி காங்கிரஸ் தலைவி என்ற அந்தஸ்தைப் பெற்றிருப்பது, ராஜீவ் காந்தியின் மனைவி என்கிற ஒரே தகுதியில்தான். இந்தத் தகுதியை, அடி மட்டத்திலிருந்து உழைத்து வரும் கட்சியினர் முழு மனத்துடன் ஏற்கமாட்டார்கள். வாக்காளர்களோ, அன்னிய நாட்டவரான சோனியாவை, பிரதமராக ஏற்க மாட்டார்கள். சோனியா சட்டபூர்வமாக இந்தியப் பிரஜைதான் என்று வாதாடலாம். ஆனால் உணர்வுபூர்வமாக வாக்களிக்கும் மக்களிடையே அது எடுபடாது.

சோனியா காந்தி மட்டும் 'தமக்குப் பிரதமர் பதவியில் விருப்பம் இல்லை' என்று அறிவிப்பாரேயானால், அத்தனை காங்கிரஸ் தொண்டர்களின் நன்மதிப்பையும் ஒரே கணத்தில் பெற முடியும். காங்கிரஸிலிருந்து பிரிந்து போனவர்கள் திரும்பி வருவார்கள். கட்சி பலப்படும்.



தொடர்ந்து உட்கட்சித் தேர்தல்களை நடத்தி, உருப்படியான ஒரு தேர்தல் அறிக்கையையும் தயாரித்துத் தந்தால், வாக்காளர்களின் நம்பிக்கையை காங்கிரஸ் கணிசமாகப் பெற்று விடும். வரும் நாடாளுமன்றத் தேர்தலைக் கருதி மேற்படிக் காரியங்களைச் செய்தாக வேண்டும்.

இப்போதைய நிலைமை என்ன...? "பா.ஜ.க. முன்பு ஹிந்துத்வா பிரசாரம் செய்து தோற்றது. அதே இடங்களில் இப்போது ஹிந்துத்வா பிரசாரம் செய்யாததால் ஜெயித்தது" என்று சொல்கிறார்கள். உண்மை அதுவல்ல. ஹிந்துத்வா பிரசாரம் இல்லாவிட்டாலும் பி.ஜே.பிக்கு வோட்டு கிடைத்திருக்கும். காங்கிரஸ் வோட்டுக்களைத் தங்கள் பக்கம் திருப்ப, அக்கட்சியினர் ஹிந்துத்வாவை அடக்கி வாசித்தார்கள். காங்கிரஸ் ஆட்சி மீது அதிருப்தியும் சேரவே, பா.ஜ.கவுக்கு வோட்டு மழை. இது பா.ஜ.க. கையாண்ட ராஜதந்திரம்.

உமாபாரதி, வசுந்தரா ராஜே சிந்தியா போன்றோரின் பேச்சும் மூச்சும் ஹிந்துத்வாதான் என்பது ஊரறிந்த ரகசியம். பெண்கள் என்பதாலும் இவர்கள் கணிசமான வோட்டுகளைப் பெற்றிருக்கக் கூடும்.

இந்திய - குறிப்பாக வட மாநில - வாக்காளர்கள், ஹிந்து அடிப்படைவாதத்தை ஆதரிக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பது தெளிவு. இதன் காரணமாக அரசியல் சாசனம் உறுதி செய்யும் மதச்சார்பின்மை அச்சுறுத்தப்படுகிறது. இது நாட்டுக்கு நல்லதல்ல.

இந்தச் சூழலில், மாற்றுக் கட்சியான காங்கிரஸின் பொறுப்பு அதிகரிக்கிறது. சோனியா, தோல்விக்குத் தார்மிகப் பொறுப்பேற்றால் போதாது. வெற்றிக்கும் பாதை போட வேண்டும். 'நாமும் அடிப்படை வாதம் பேசி வோட்டு அள்ளலாம்' என்று குறுக்கு வழியைத் தேர்வு செய்யவே தோன்றும். அடக்கி வாசிக்கப்படும் ஹிந்துத்வாவை, அடித்துப் பேசும் ஹிந்துத்வாவாக மாற்றக்கூட யோசனை பிறக்கும். ஆனால் அது அழிவுக்கான குறுக்கு வழி. அதைத் தவிர்ப்பதோடு, காங்கிரஸை ஒரு மெய்யான ஜனநாயக அமைப்பாக்கி, புதிய தலைவர்கள் வளர வழி வகுத்து, மக்களின் நம்பிக்கையைப் பெற, சோனியா உடனே முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு அவர் செய்வாரேயானால், நேரு குடும்பத்தினர் அனைவரும் நாட்டுக்குச் செய்த அத்தனை தியாகங்களைக் காட்டிலும் உயர்ந்த தியாகமாக அது அமையும். ○

வட்டமேஜை

✉ ஒருவரின் அனுபவம் மற்றவருக்குப் பாடம். எம்.ஆர்.ராதாவின் சிறப்பியல்புகளை, நாகேஷ் சிரித்துக் கொண்டே சொன்னாலும், சிந்திக்க வேண்டியவை.

அ. சின்னசாமி
சேலம் - 3,

✉ "ஒரு கூட்டுப் பறவைகள்" சிறுகதை பாசப் பிணைப்பில் பரவசத்தை ஏற்படுத்தியது.

டி.என். சத்யாமுருகவேல்
ஈரோடு,

✉ "சாயாசிங்கிடம் மொக்கராசுத்தனமாக கேள்வி ஏன் கேட்பானேன்? அதுக்கு 'மன்மத ராணி' மமதையா பதில் அடிப்பானேன்? இது ரவுண்ட்ஸ்பாய்க்குத் தேவையா?"

பா.து.பிரகாஷ்
தஞ்சாவூர் -1,

✉ 'டான்ஸி தீர்ப்பு ஜெயின் வெற்றியா...?' தலையங்கம் படித்தேன். டான்ஸி வழக்கில் உச்சநீதி மன்றம் ஜெயலலிதாவை விடுவித்தது, ஏதோ இமாலய வெற்றி போல் அ.தி.மு.க.வினர் கொண்டாடுவது அறியாமையால் தான். நீதிமன்றக் கண்டனங்களையும், அறிவுரைகளையும் முதல்வர் ஏற்று செயல்படுத்த வேண்டும். அதுதான் அந்தப் பதவிக்கு அழகு.

இரா.வி.சௌந்தர்யாவிசாலினி
மொரட்டுப்பாளையம்,

✉ மாறனின் சாதனை மகத்தானது. மூன்றாம் உலக நாடுகளுக்கு இந்தியாவை தலைமை தாங்க வைத்தவர் முரசொலி மாறன். வாதங்களை, வாய்ப்பு வந்தபொழுதெல்லாம் எடுத்துரைத்து பல சலுகைகளை இந்தியாவிற்குப் பெற்றுத் தந்தவர். அவரது சேவை குடத்தில் வைத்த விளக்குபோல, பெரும்பாலான மக்களுக்குத் தெரியாமலேயே போய்விட்டது வருத்தமே. வளரும் நாடுகளுக்காக அவர் கொட்டிய முரசு, உலக அரங்கில் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும்.

ஆர். நாகராஜன்
சென்னை - 61,



✉ 'புளியோதரை சாப்பிடும் புள்ளிமான்கள்', கட்டுரை சம்பந்தப்பட்டவர்களைத் தட்டி எழுப்பி விடும் என நம்புகிறோம்!"

ஆர்.பிரகாஷ்
பொன்மலை,

✉ டைடல் பார்க் பற்றிய கவர் ஸ்டோரி கண்டோம். இன்று தமிழக அரசு தகவல் தொழில்நுட்ப நெடுஞ்சாலையில் விரைந்து பயணிக்கிறது என்றால், அந்த நெடுஞ்சாலையைச் செவ்வனே அமைத்து அடித்தளமிட்டவர் கலைஞர்... கட்டுரையாளர் இதை மறந்தது (மறைத்தது!) ஏனோ?

புளியரை கணேசன்
நெல்லை,

✉ முப்பதடி நடப்பதற்குள்ளேயே மூச்சுவாங்கும் இளைஞர்கள் மத்தியில், எழுபத்தேழு வயது(!) இளைஞர் கேசவன் கம்பீரமாக மனத்தில் நிற்கிறார்!

டி.என்.சத்யா முருகவேல்
சூரம்பட்டி,

✉ 23.11.2003 இதழில் வெளியான எனது பேட்டியில் பி.எஸ்சி. படிப்பை பாதியில் விட்டுவிட்டு, திரைப்படக் கல்லூரியில் சேர்ந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள். நான் டிகிரியை முடித்துவிட்டுதான் சேர்ந்தேன்.

- ரத்னவேலு,
ஒளிப்பதிவாளர்.

ரவுண்ட்ஸ்பாய்க்குத் தேவையா?

தேரில் பெருமாள் உசேன்!

"**யா**ருக்கு வோட்டுப் போட்டு என்னதான் பிரயோஜனம், ஒண்ணும் நடக்காது" திருவல்லிக் கேணித் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் உசேன் வோட்டு கேட்டு வந்தபோது, நாகோஜி ராவ் தெருவில் ஒரு வயதான பெண்மணி சொன்னது இது.

அந்தத் தெருவாசிகளின் பிரச்னை குடிநீர். தெருவில் ஸின்டெக்ஸ் தொட்டி வைத்திருந்தும், லாரியில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்ற முடியாத நிலை. காரணம், தெரு மிகக் குறுகலானது. தெருவாசிகள் குடங்களை எடுத்துக் கொண்டு அடுத்தத் தெருவுக்கு ஓட வேண்டியதாகிவிட்டது. உசேன் வெற்றி பெற்றதும், தெரு முனையிலிருந்து தொட்டிக்குப் பெரிய பி.வி.சி. பைப்புகள் மூலம் இணைப்பு ஏற்படுத்தினார். பிரச்னை தீர்ந்தது. தொகுதி நிதியிலிருந்து உசேன் முதலில் ஆறு லட்சம் ரூபாய் அனுமதித்தது பார்த்தசாரதி கோயிலுக்குத்தான்.



• பி.வி.சி. பைப்புகள் இணைப்பு


கோயில் வாசலில், உயர் மின் விளக்கு கோபுரங்கள் அமைக்கப்பட்டன. அடுத்தபடியாக, கோயில் நிலத்தில் கல்யாண சத்திரம் ஒன்று கட்டிக் கொடுக்க, துவக்க வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எண்பத்தொன்பதாவது வார்டு மக்கள் (பார்த்தசாரதி பெருமாள் கோயில் உள்ள பகுதி) உசேனுக்குப் பாராட்டு மழை பொழிகிறார்கள்.

"பெருமாள் உலா வரும் தேரில் என்னை ஏற்றி மரியாதை செய்தார்கள்" என்று மகிழ்ச்சி பொங்கச் சொல்கிறார் உசேன்.

"என்னுடைய தொகுதி நிதியிலிருந்து அ.தி.மு.க. கவுன்சிலர்கள் வட்டத்திற்கும் செய்திருக்கிறேன்" என்று சொல்லும் உசேன், பல வேலைகள் முடங்கிப் போவதை வருத்தமுடன் குறிப்பிடுகிறார்.

"வெலிங்டன் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறை கட்ட 19.1.02 அன்று தொகுதி நிதியிலிருந்து ஐந்து லட்சம் கொடுத்தேன். பொதுப்பணித்துறை இன்னமும் வேலையைத் துவக்கவில்லை. ப்ளஸ் ஒன், ப்ளஸ் டூ படிக்கும் பெண்கள் மிகச் சிரமப்படுகிறார்கள்" என்கிறார் உசேன்.

கடன்பட்டு வாங்கிய கார் இருந்தாலும், தொகுதியெங்கும் கைனடிக் ஹோண்டாவில் வலம் வருகிறார். மிகக் குறுகலான சந்துகளைக் கொண்ட தொகுதியாயிற்றே!



— கௌசி

படம்: ராஜன்



• உசேன் எம்.எல்.ஏ.



* 'நேருக்கு நேர்...'

'டீவியோ, சினிமாவோ, நாடகங்களுக்கு நிஜமான மாற்றாக இருக்க முடியாது!'' என்று ரசிகர் ஒருவர் குறிப்பிட்டபோது பலத்த கைதட்டல். ''நாடகக் கலை இன்னும் நீண்ட காலம் வாழும்!'' என்றார் அவர் ஆவேசமாக.

'அடேயப்பா, தமிழ்நாட்டில் நாடகக் கலை மீண்டெழுந்து விட்டதா?' என்று அவசரமாக ஆச்சர்யப்பட்டு வைக்காதீர்கள்... இச் சம்பவம் நடந்தது மும்பையில்...

சொன்னால் நம்ப மாட்டீர்கள்! கிட்டத்தட்ட மூவாயிரம் பேர் அரங்கத்தில். நாடகம் முடிந்ததும் நடிகர்களிடமும், இயக்குநர் - கதாசிரியரிடமும் கேள்விகளாகக் கேட்டுத் துளைத்தெடுக்கிறார்கள்!

நவம்பர் 28, 29, 30 தேதிகளில் மும்பை சண்முகானந்தா ஹாலில், சென்னை 'கலா நிலையம்' வழங்கிய 'வி.ஆர்.எஸ். ஓ.. வி.ஆர்.எஸ்', 'சொந்தமில்லாத பந்தங்கள்', 'நேருக்கு நேர்' ஆகிய மூன்று நாடகங்களுக்கும்தான் இந்த வரவேற்பு.

ஒவ்வொரு நாளும், நாடகம் முடிந்தவுடன், சில நூறு பேராவது இருந்து, கேள்வி - பதில் பகுதியை களை கட்டச் செய்தார்கள். இந்தக் கேள்வி - பதில் நிகழ்ச்சியை **'கல்கி'** ஏற்பாடு செய்திருந்தது.

வேலையும், பொறுப்பும் மிகுந்த வங்கியின் சீனியர் மானேஜரான சம்பத், ஆபத்துகளையும் டென்ஷனையும் தவிர்க்க, வி.ஆர்.எஸ்.ஸில் ரிட்டயராகிறார். பிறகாவது நிம்மதியாக இருக்க முடிகிறதா? பிரச்னைகள் பிரும்மாண்டமாகின்றன. கிடைத்த லட்சங்கள் எல்லாம், எப்படி சிதறிச் சின்னாபின்னம் ஆகிறதோ, அதே போலப் போகின்றன அவர் எதிர்பார்ப்புகளும்.

'நறுக்' வசனங்கள் வரும்போதெல்லாம் பலத்த கைதட்டல். காட்சி முடிகிறபோது வருகிற 'பஞ்ச் டயலாக்குகளுக்கு 'அப்ளாஸ்' மழை.

இரண்டாம் நாள் 'சொந்தமில்லாத பந்தங்கள்' இன்னும் அதிக ரசிகர்களை ஈர்த்திருந்தது.

அண்ணன் விபத்தில் இறந்துவிட்ட நிலையில், அண்ணியையும் அவள் பிள்ளைகள் இருவரையும் நன்றாகப் படிக்க வைத்து, சொந்த வாழ்க்கையிலும் உயர்கிறார் ராகவன். அதுவரை அந்தக் குடும்பத்தைக் கவனிக்காத மாமா பத்மநாபன், பிறகு அந்தக் குடும்பத்தில் புகுந்து குழப்பம் விளைவிக்க, நண்பர் ஏகாம்பரத்தின் ஆதரவுடன் ராகவன் இறுதியில் மீண்டு

* 'கலா நிலையம்' கே.எஸ். நாகராஜனுக்குப் பொன்னாடை போர்த்தும் ஜெயராம் மணி



முத்தான மும்பை





• ரசிகர்களுடன் உரையாடல்....

வருவதை அப்படி ரசித்தது அரங்கம்.

கேள்விகள் வர வர, இயக்குனரும் கதாசிரியருமான கே.என்.எஸ். சுந்தர், அவற்றுக்கெல்லாம் பொறுமையாகப் பதில் சொன்னார்.

முத்தாய்ப்பாக ஒரு ரசிகர் கூறியதுதான் அழுத்தமான காமெண்ட்:

"ஒவ்வொரு குடும்பத்திலும் யாராவது ஒருவர் தியாகம் செய்கிறபோதுதான், அந்தக் குடும்பத்துக்கு நல்ல கதி கிடைக்கிறது!''

மூன்றாம் நாள் 'நேருக்கு நேர்' நாடகம். ஞாயிறு அன்று நடந்ததால், முதல் இரண்டு நாட்களைவிடக் கூட்டம் இன்னும் அதிகம்.

முரண்டு பிடித்து ஒதுங்கியிருக்கும் மாமனார் குடவாசல் ராகவாச்சாரி. இவருக்கும் மாப்பிள்ளை வரதராஜனுக்கும் இடையே சமாதானம் செய்யும் பேரன் மாதவன்; அவனுக்கு உதவும் டெல்லி நரசிம்மன்.

யதார்த்தமான நடிப்பில் 'கலா நிலையம்' குழுவைச் சேர்ந்தவர்களுக்கு அசாத்திய பலம். நாசூக்கான நடிகர் 'கலைமாமணி' கே.எஸ். நாகராஜன் என்பதால், நாடகம் ஏதோ அடுத்த வீட்டில் நடப்பது போன்ற உணர்வை உண்டாக்கி விட்டது.

சுந்தர், அக்ஷய், ரவிக்குமார், கரூர் ரங்கராஜ், கார்த்திக், எஸ்.பி.ஸ்ரீமதி, ஹேமலதா என்று நடிக - நடிகையர் போட்டி போட்டுக் கொண்டு தங்கள் திறமையைக் காட்ட வேண்டியிருந்தது. பின்னணி இசையில் 'கலை' ரவி பொருத்தமாகச் செயல்பட்டார்.

"ஸ்டார் வேல்யூவை விட, ஸ்டோரி வேல்யூ இருந்தால்தான், நாடகம் வெற்றி பெறும்!'' என்று பலர் அறிவித்தார்கள்.

"நானும் கொல்கத்தா, மும்பை, தில்லி, பரோடா என்று எல்லா இடங்களிலும் நாடகம் நடத்தியிருக்கிறேன். ஆனால் மும்பை ரசிகர்கள்தான் நிஜமான ரசிகர்கள்!'' என்று நெகிழ்ந்து போய்விட்டார், கே.எஸ். நாகராஜன்.

ரசிகர்கள்!

- சாருகேசி

'கில்லி'யை இயக்கி வருகிறார் தரணி. தெலுங்கில் பட்டையைக் கிளப்பிய 'ஒக்குடு' (ஒருவன்)தான் கில்லி. கதை உரிமைக்கு மட்டும், தயாரிப்பாளர் ஒரு கோடி ரூபாய் கொடுத்திருப்பதாகத் தகவல். ஒரு தெலுங்குப் படத்தின் கதைக்கு இத்தனைப் பெரிய

தில்லாலங்கடியா இருக்கே!

விலையா?

ஒரு ஏழைக் குடும்பத்து இளைஞனுக்கு வருகிற பொல்லாத கோபம்தான் கதை. திருவல்லிக்கேணி, குடிசைப் பகுதியைச் சேர்ந்த கபடி வீரராக நடிக்கும் விஜய்தான் அந்தப் பொல்லாத ஆளாம்! படத்திற்காக திருவல்லிக்கேணி, சாந்தோம் பகுதியை அப்படியே பெயர்த்துக் கொண்டு போய் வைத்த மாதிரி, மகாபலிபுரத்தில் கலை நிர்மாணம் செய்திருக்கிறார்கள். எல்லாம் ஓகேதான், 'படத்துக்கு 'கில்லி' என்று பெயர் வைத்திருக்கிறீர்களே' என இயக்குனரிடம் கேட்டால், "சட்டிக்கு ஒரு முனை தான் கூர். கில்லிக்கு இரண்டு முனையிலும் கூர். என்னோட ஹீரோ கூட ஒரு கில்லி தான்" என்று புல்லரிக்க வைக்கிறார்.

இரண்டு வருடத்துக்கு முன்பே தொடங்கப்பட்ட படம் 'நியூ'. இயக்குனர் ப்ளஸ் கதாநாயகன் எஸ்.ஜே.சூர்யா, படத்தில் கதாநாயகிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே செல்கிறார். முதலில் சிம்ரன், பிறகு தேவயானி, இப்போது கிரண். இது போதாதென்று, தம்மை அறிமுகப்படுத்தும் டைட்டில் பாடலில், மேலும் மூன்று ஹீரோயின்களை நடிக்க வைக்கப் போகிறாராம்! என்ன ஒரே 'தில்லாலங்கடியா இருக்கே' என்றால், "நம்ம முகத்தையே மாற்றி மாற்றிக் காட்டிக்கிட்டு இருந்தா யாரு

• 'விருமாண்டி'



பார்க்கிறது? அதனாலதான்" என்று சமாதானம் சொல்லும் எஸ்.ஜே. சூர்யாவின் பெருந்தன்மையைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.



தமிழ் சினிமா போலவே மலையாளத்திலும் ஏகப்பட்ட இளம் ஹீரோக்களின் படையெடுப்பு. இந்த நேரத்தில் நல்ல கதை கிடைக்காமல் தத்தளித்துக் கொண்டிருந்த மம்மூட்டியைத் தூக்கிவிட்ட படம் 'குரோனிக் பேச்சிலர்ஸ்'. அதை இயக்கிய சித்திக்,

'எங்கள் அண்ணா'வாக தமிழில் உருவாக்கி வருகிறார்.

நாற்பத்தைந்து வயது பேச்சிலராக மம்மூட்டி ஏற்ற பாத்திரத்தை விஜய்காந்த் ஏற்று நடிக்க, பிரபுதேவா, பாண்டியராஜன், வடிவேலு மூவரும் அவரை அண்டிப் பிழைக்கும் நண்பர்கள்!



• 'எங்கள் அண்ணா' பாண்டியராஜன், பிரபுதேவா, விஜய்காந்த், வடிவேலு



• கிரணுடன் 'திரு' எஸ்.ஜே. சூர்யா

நம்பினால் நம்புங்கள்! மைல் நீள டயலாக், வானில் பறந்து சண்டை போடுவது உட்பட, தமது எல்லா எக்ஸ்ட்ரா ஹீரோயிசத்தையும், தூக்கித் தூர வைத்துவிட்டு, முழுக்க முழுக்க ஆக்ஷன் காமெடி பண்ணுகிறார் என்கிறார்கள்!



• தினா

'திருடா திருடி', 'அன்பே உன் வசம்' படப் பாடல்களின் ஹிட்டுக்குப் பிறகு இசையமைப்பாளர் தினா காட்டில் இசை மழை!

அஜித்தின் 'ஜனா', பிரவீன் காந்தியின் 'துள்ளல்', சி.ராஜாவின் 'நகுலன்', தெலுங்குப் படங்கள் என்று பிஸியாகி விட்டார்.

"சினிமாவைப் பொறுத்தவரை ரசிகர்கள் ஏற்றுக் கொள்வதுதான் முக்கியம். என்னையும் அவங்க அங்கிகரிச்சிருக்காங்கங்கறது சந்தோஷமா இருக்கு. இந்த அங்கிகாரத்துக்குப் பின்னால பதினைந்து வருட உழைப்பும் இருக்கு" என்கிறார் தினா!

ஒரு வழியாக சண்டியர் 'விருமாண்டி' ஆகிவிட்டார். விருமாண்டி ஒரு தூக்குத் தண்டனைக் கைதி. அவரைச் சந்தித்து ஒரு டாக்குமெண்டரி எடுக்க வருகிறார், சிவில் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்ற ஏஞ்சலா மாரிமுத்து என்ற பெண்மணி. இவரது தந்தை மாரிமுத்துவும் தூக்குத் தண்டனைக்கு ஆளாகி உயிர் துறந்தவர். ஏஞ்சலா தயாரித்த டாக்குமெண்டரி வழியே, விருமாண்டியின் வாழ்க்கை தேசம் முழுக்கப் பரபரப்பை ஏற்படுத்த, தூக்குத் தண்டனைக்கு எதிரான இயக்கம் சூடு பிடிக்கிறது. இறுதியில் விருமாண்டி விடுவிக்கப்பட்டாரா? இல்லையா? இதுதான் கதை!

மரண தண்டனைக்கு எதிரான பிரசாரம், உலகம் முழுதும் தீவிரமாகி இருக்கும் இந்த நேரத்தில், கமல் இது போன்றதொரு சர்வதேச பிரச்னையைக் கையிலெடுத்திருப்பதிலிருந்து ஆஸ்கருக்கான தீவிர முயற்சியைத் தொடங்கி விட்டார் என்றே தோன்றுகிறது. இதற்குக் கட்டியம் கூறுவது போல இருந்தது, 'விருமாண்டி' கேஸட் வெளியீட்டு விழாவில் கே. பாலசந்தரின் பேச்சு.

"உன்னைவிடச் சிறந்த கலைஞன் இந்தியாவிலேயே கிடையாது. தி ஒன் அண்ட் ஒன்லி கமல். நீ ஆஸ்கரை அடையும் நாள் வெகு தொலைவில் இல்லை."

ரவுண்ட்ஸ் பாய்

புக் பேங்க்

Total Quality Management - ஞானகிரிதரன்

மக்களைச் சென்றடைபவை மாறாத தரத்தோடு இருந்தால், மகிழ்வோடு வாங்கிப் பயன்படுத்துவார்கள். அந்தத் தரத்தைக் கூட்டுவதும், நிலை நிறுத்தி வைக்கவுமான வழிமுறைகள், தற்போது ஒரு பட்டப்படிப்பிற்குரிய கல்வியாகவே ஆகி விட்டது. தரக் கல்வியைப் பற்றி படைப்பும், பயனும், மதிப்பும் மிக்க ஆங்கில நூல்.


UBSPD, UBS Publisher Distributors P.Ltd, 60, நெல்சன் மாணிக்கம் சாலை, அமிஞ்சிக்கரை, சென்னை - 29, விலை ரூ. 250/-

ஆனந்த வாழ்வு (தொகுப்பு) ம. பிரேமா

தமக்கும், தம்மால் பிறருக்கும் வளமும் நலமும் பெற வாழ்பவர் சிலரே. சுதந்திரப் போராட்டத்திலும், மகாத்மாவின் சர்வோதயக் கொள்கையிலும் முற்றிலுமாகக் கலந்து, கற்றதையும் பெற்றதையும் மற்றவர்க்குக் கொடுத்து, 'வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்த 'திருமலை'யின் வாழ்வைப் பற்றி சுற்றமாயிருந்தவர்கள் கூறியவற்றின் தொகுப்பு.

காந்தி கல்வி நிலையம், 58. வெங்கட் நாராயணா சாலை, தி.நகர், சென்னை - 17.





நீங்களும் கலெக்டர் ஆகலாம் - நெல்லை கவிநேசன்

நம் இளைஞர்க்கு வழிகாட்டுவது இந்தியாவுக்கு வழி காட்டுவதுதான். 'ஐ.ஏ.எஸ். என்ன எட்டாக் கனியா? கிட்டாத விஷயமா? - இல்லவே இல்லை என்று இளைஞர்களுக்கு நம்பிக்கையையும், உற்சாகத்தையும் தரும் நூல். ஆளுமைத் திறனுக்கு அருமையான வழிகாட்டி. 'தினத் தந்தி'யில் நீங்களும் கலெக்டர் ஆகலாம்' என்று தொடராக வந்தவற்றின் தொகுப்பு.


குமரன் பதிப்பகம், 3. முத்துகிருஷ்ணன் தெரு, தி.நகர், சென்னை - 1, விலை. ரூ.50/-

கம்ப்யூட்டர் படிப்புகள் - மா. ஆண்டோ பீட்டர்

எதிர்காலத்தில் கம்ப்யூட்டரின்றி வாழ்வே நகராது என்ற நிலை வந்து கொண்டிருக்கிறது. அப்படி வரும்போது, எதைக் கற்றால், வாழ்க்கையை வாய்ப்பாக மாற்றிக் கொள்ளலாம் என்று வருகின்ற தலைமுறைக்கு வழி சொல்லும் நூல்.

கற்பகம் புத்தகாலயம், 50/18, ராஜாபாதர் தெரு, தி.நகர், சென்னை - 17, விலை. ரூ.50/-





அக்னி புத்ரி - வித்யா சுப்ரமணியம்

அறிவும், மனமும், உணர்வும், உடலும் ஒன்றி ஆன்மிகத்தை வாழ்க்கை நெறியாக்கி வாழ்ந்து மறைந்த அபூர்வப் பெண்மணிகளின் வரலாறு.

அறிவு நிலையம் பதிப்பகம், 107, கௌடியா மடம் சாலை, ராயப்பேட்டை, சென்னை - 14, விலை: ரூ. 100/- - **விஷ்வக்**

அமெரிக்கக் கோவலன்!



மெரீனா கண்ணகி மியூசியத்தில் இருக்க, மேடையேறுகிறார் ஒரு புதிய கண்ணகி! 'பூம்புகார்' என்ற நாட்டிய நாடகத்தில் இவரைப் பார்க்கலாம். சுதாராணி ரகுபதி அமெரிக்க மாணவிகளை ஈடுபடுத்தித் தயாரித்துள்ளார் இந்நிகழ்ச்சியை.

"அமெரிக்க மாணவிகள் எப்படி பரத நாட்டியம் ஆடக் கற்றுக் கொண்டார்கள்?"

"மூன்று மாதங்கள் கடுமையான பயிற்சி. முக்கியமான அசைவுகள்,



• கால்கேட் பல்கலை மாணவர்களின் இசை...

தேவையான முத்திரைகள் என்று அதிகம் குழப்பமில்லாத அளவுக்கு, பயிற்சி எடுத்துக் கொண்டார்கள். நம்முடைய உடல் அசைவுகளுக்கும், உணர்ச்சி வெளிப்பாடுகளுக்கும் அதிகம் பரிச்சயம் இல்லாத போதும், அவர்கள் ஆர்வத்தோடு பல கேள்விகளை எழுப்பி, தெரிந்து கொண்டார்கள். எனக்கே இது ஒருவகையில் புதிய பயிற்சியாக இருந்தது..." என்கிறார் சுதாராணி.

• சுதாராணி ரகுபதி

நியூயார்க்கில் இருக்கும் கால்கேட் யூனிவர்சிடியைச் சேர்ந்த இசைப் பேராசிரியர் வில்லியம் ஸ்கெல்டன், தமது மாணவ - மாணவிகளை இந்தியாவுக்கு அழைத்து வந்து, இந்தியக் கலைகளில் ஆர்வம் ஏற்படுத்தி வந்திருக்கிறார்.

இவர்களில் பலர் சுதாராணி ரகுபதியிடம் பரத நாட்டியம் பயில்கிறார்கள், என். ரமணியிடம் புல்லாங்குழல் கற்கிறார்கள், கிருஷ்ணமாசார்யா யோக மந்திரத்தில் யோகா பயில்கிறார்கள்.



• கண்ணகியாக ப்ரியா முரளி

ஷாஜி ஜானிடம் களரி கற்கிறார்கள். என்.கோவிந்தராஜனிடம் மிருதங்கம் வாசிக்கக் கற்றுக் கொள்கிறார்

கள்! வீணை, 'பத்திக்' ஓவியம் பயில்கிறார்கள்.

ஏன், பேராசிரியர் ஸ்கெல்டனே அருமையாக நாகஸ்வரம் வாசிப்பார்!

"ஒவ்வொரு முறை இங்கே வரும்போதும் இந்த நாட்டைப் பற்றி இன்னும் கூடுதலாக அறிந்து கொள்ளுகிறேன். சிலப்பதிகாரம் என்னைக் கவர்ந்த காவியம். குறிப்பாக, கண்ணகி பாத்திரம் என்னை ஈர்த்தது!'' என்கிறார் வில்லியம் ஸ்கெல்டன்.



இரண்டு நாட்டு மாணவிகளையும் ஒன்றாக வைத்து ஒரு நிகழ்ச்சி தயாரிக்க வேண்டும் என்று ஸ்கெல்டனும், சுதாராணி ரகுபதியும் நினைத்தபோது, இருவருமே சிலப்பதிகாரத்தைத்தான் தேர்ந்தெடுத்தார்கள்.


பாடல்கள் எல்லாம் சிலப்பதிகாரத்திலிருந்துதான். அவை தமிழில் அமைந்திருக்கும். ஆங்கில வசனங்களுக்கு அபிநயம் செய்வார்கள். கர்நாடக இசையின் ராகங்களை மேற்கத்திய வாத்தியங்களில் கேட்கலாம்! நாட்டிய நாடகத்துக்கான ஆராய்ச்சிகளை, திருவையாறு அரசு இசைக் கல்லூரி முதல்வர் டாக்டர். ராமகௌசல்யா செய்து கொடுத்திருக்கிறார். பாடல்களுக்கு இசை அமைத்திருப்பவர் மதுரை என்.கிருஷ்ணன். நவம்பரில் பேராசிரியர் ஸ்கெல்டன் தம் மாணவர்களுடன் மைசூர், ஊட்டி, மதுரை, தஞ்சாவூர் என்று சுற்றுலா போய் வந்திருக்கிறார். எங்கே போனாலும், நிகழ்ச்சியின் ரிகர்சல் செய்ய மட்டும் தவறவில்லையாம்!

இந்த நாடகத்தில் கண்ணகியாக ப்ரியா முரளியும் மாதவியாக டி.எம்.ஸ்ரீதேவியும் கோவலனாக அமெரிக்காவைச் சேர்ந்த விஜய் பல்பார்ட்டியும் நடித்திருக்கிறார்கள்!

— எஸ்.வி.என்.




• டி.எம். ஸ்ரீதேவி, விஜய் பல்பார்ட்டி



விட்டது.
சென்னை - 4, வெ. முத்துகிருஷ்ணன்.

ஒரு வருடத்திற்கு முன்பு ஸ்ரீ செம்மங்குடியை அவரது இல்லத்தில் பார்க்கவும், பேசுவதைக் கேட்கவும் பாக்கியம் கிடைத்தது. வித்வான் வைரமங்கலம் லெக்ஷ்மி நாராயணன் அங்கிருந்தார். "...உமக்கு பிளாட்டினம் லெக்ஷ்மி நாராயணன்னுதான் பேர் வைக்கணும்!" என்றார் செம்மங்குடி, உற்சாகமாக. இதைக் கேட்டு அவர் பூரித்துப்



* முன்னாள் அமைச்சர் மதியழகனுடன்

* இளவயதில்...

ஒரு கச்சேரியில் ஒரு ரசிகர் 'ஆசைமுகம்' பாடச் சொல்லி உரக்கக் கேட்டார். உடனே செம்மங்குடி, "மறந்து போச்சே" என்று

செம்மங்குடி நினைவுகள்!

அந்தப் பாட்டைத் தொடர்ந்தார்! இப்படி அவர் பாடியதில் அவருக்கு ஹாஸ்ய ரசனையும் உண்டு என்பதை அறிந்து கொள்ள முடிந்தது. அந்த ஆசைமுகம் இனி யாரும் பார்க்க முடியாத சங்கீத ஸ்வர்க்கத்திற்குச் சென்று போனார்.
சென்னை - 90, ரங்கமணி கிருஷ்ணஸ்வாமி

பல வருடங்களுக்கு முன் சாஸ்திரி ஹாலில் கல்யாணராமனின் கச்சேரி. லால்குடி வயலின். சிவராமன் மிருதங்கம். விநாயக் ராம் கடம். அசாத்யமாய்ப் பாடிக் கொண்டிருந்தார். செம்மங்குடி தலைமை தாங்கியிருந்தார். பாட்டு முடிந்ததும் 'நான்கு ராமன்கள் சேர்ந்து கச்சேரியை ஜமாய்த்து விட்டார்கள். ரொம்





கோஷமும் சிரிப்பும்தான்.
சென்னை - 20,
சராதா நாராயணன்.

எங்கள் தாத்தாவின் (அம்மாவின் அப்பா) வீடு கும்பகோணத்தில் இருந்தது. அதில் ஒரு பாதியில் மஹாராஜபுரம் விச்வநாதய்யர் வசித்து வந்தார்.

அப்பொழுது விச்வநாதய்யரிடம் குருகுல வாசம் செய்து வந்தார், சிறு வயது செம்மங்குடி. சீனு சீனு என்று அழைக்கப்பட்ட மாமாவை, எங்கள் பாட்டியும் சீனுவென்றுதான் அழைப்பார். எங்கள் அம்மாவைப் பெண் பார்க்க வந்தபொழுது அவர் பதினான்கு வயதுச் சிறுவன். என்ன பாட்டுப் பாடினார் தெரியுமா, மோஹன ராகத்தில் 'நன்னு பாலிம்ப' என்ற கீர்த்தனம். சீனு சொல்லிக் கொள்ளும்போது



பப் பேர் இந்த ராகம் கேட்டிருக்க மாட்டார்கள். 'பிந்து மாலினி' என்று பெயர். அனாயாசமாய் பிருகாக்களை உதிர்த்து அமர்க்களமாய்ப் பாடினார். கொஞ்சம் வேகத்தைக் குறைத்துக் கொண்டால் இன்னமும் நன்கு ரசிக்கலாம்" என்றார்! சபையில் ஒரே கர



தானும் சொல்லிக் கொண்டார்! கல்யாணக் கச்சேரி யாருடையது? சின்ன வயது வித்வான் சீனுதான்! ஒல்லியாக வந்த சீனுவுக்கு அன்றாடம் எங்கள் தாத்தா ஓவல்டின், ஹார்லிக்ஸ் வாங்கிக் கொடுப்பார்களாம்!


இந்த விவரம் பின்னாளில் செம்மங்குடி மாமா எப்போது எங்கள் வீட்டிற்கு வந்தாலும் சொல்லத் தவறவே மாட்டார்.

சென்னை - 90,
கே. விச்வநாதன் குடும்பத்தினர்.

பிருந்தாவன சாரங்கன்



'கச்சேரி' என்று அந்த நாட்களில் அழைக்கப்பட்ட கோர்ட்டில் முன் சீஃப் பட்சிராஜன் 'ஸாக்ஷி லேதநுசு ஸாதிம்பகே' என்ற பல்லவியை முனகிக் கொண்டு தன் இருக்கையில் வந்து அமர்கிறார். சுருதி சேர்ந்தவுடன் பாகவதர் சமிக்ஞை செய்வது போல, பெஞ்ச் கிளார்க் பஞ்சுவையும், பியூன் கோவிந்தனையும் பார்த்துப் பட்சிராஜன் தலையை அசைத்ததும், வக்கீல் வைத்தியநாதன் எழுந்திருக்கிறார்.



வைத்தி: கனம் கோர்ட்டார் அவர்களே...

பட்சி: கனமா? கனம்னா எனக்கு 'கனம்' கிருஷ்ணையர் தான் ஞாபகத்துக்கு வரும். கனம், நயம், தேசிகம் என்கிறதிலே கடினமான கனமார்க்கத்தை அப்பியாசம் செஞ்ச கிருஷ்ணையரோட குரு, தஞ்சாவூர் பொப்பிலி கேசவைய்யானு தெரியுமா? 'சும்மா சும்மா வருகுமா சுகம்' என்ற அடாணா ராக கீர்த்தனையை ஸ்ரீதியாகய்யரின் ஆக்ஞைப்படி இயற்றியது யாரு? 'கனம்' தான். ஒரு சமயம் உடையார்பாளைய ஜமீன்தார் கச்சிக் கல்யாணரங்க உடையார் என்ன செஞ்சார்னா...

வைத்தி: (இடைமறித்து) கோர்ட்டார் அவர்கள் மன்னிக்கணும். இன்றைய முதல் கேஸ் பிருந்தாவன சாரங்கன் வெர்ஸஸ் ஹார்மோனிய வித்வான் ஆராவமுதன்...

பியூன்: (உரக்க) பிருந்தாவன சாரங்கன்... பிருந்தாவன சாரங்கன்... பிருந்தாவன சாரங்கன்...

பட்சி: அட! பிருந்தாவன சாரங்

கனா? வாட் எ நேம்? பிருந்தாவன சாரங்கானு ஒரு தேஸ்ய ராகம் இருக்கு. இருபத்தியிரண்டாவது மேளகர்த்தா, கரகரப்ரியாவிலேர்ந்து ஜன்யம். அதிலே எம்.எஸ். சுப்பு லக்ஷ்மி, ஸ்ரீரங்கபுர விகாரேன்னு நெக்குருகப் பாடும்போது, சாட்சாத் ராமரே கோதண்டத்தோட சம்மன் இல்லாம ஆஜர் ஆன மாதிரி பிரமை தட்டும். இது சத்தியம். தீட்சிதரோட கிருதியின் அமைப்பும், எம்.எஸ். குரலும்... அட அட அடா...

வைத்தி: (முணுமுணுக்கிறார்) ஹியரிங்'குனா, வக்கீல் பேசறதை முன்சீஃப் கேக்கணும்? இங்கே, 'கிரால் டாக்'கா இருக்கே... (உரக்க) கோர்ட்டார் அவர்கள் மறுபடியும் மன்னிக்கணும். குற்றம் சாட்டப்பட்டுள்ள சாரங்கன் வசிக்கும் வீட்டின் பெயர் பிருந்தாவனம் என்பதால் அவருக்கு அந்தப் பெயர். மற்றபடி அவருக்குச் சங்கீதமும் தெரியாது. இங்கிதமும் தெரியாது.

(எதிர்த்தரப்பு வக்கீல் வாய்தா வரதராஜுலு துள்ளி எழுந்திருக்கிறார்)

வரத: அப்ஜெக்ஷன், யுவர் ஆனர்.

பட்சி: ராஜுகாரு, எதுக்கு



ஜே.எஸ்.ராகவன்

அப்ஜெக்ஷன்னேன்? தியாகப்பிரும்மமே கேக்கிறார், 'ஸங்கீத ஞானமு பக்திவினா'ன்னு. உம் கட்சிக்காரரான பிருந்தாவன சாரங்கனுக்கு, 'நாத தனுமநிசம், சங்கரம்னு' மனஸாலும் சிரஸாலும் வணங்கும் பக்குவம் உண்டா?

வைத்தி: ...யுவர் ஆனர், அப்பேற்பட்ட உன்னத ஞானம் உள்ளவராயிருந்திருந்தால் என் கட்சிக்காரரின் ஹார்மோனியத்தை சூறைத் தேங்காயைப் போலப் போட்டு உடைத்திருப்பாரா? நோட் திஸ் பாய்ண்ட், யுவர் ஆனர்.

பட்சி: அட? ஹார்மோனியம்னு மொட்டையா சொன்னா எப்படி? சிங்கிள் ரீடா? டபுள் ரீடா? கை ஹார்மோனியமா? கால் ஹார்மோனியமா? ஹார்மோனியம்னா ரொம்பப் பேருக்கு அலர்ஜினு தெரியுமா? கமகம் வாசிக்க முடியாதுன்னு அந்த வாத்தியத்தை ஆல் இண்டியா ரேடியோவின் கேட்டுக்குள்ளேயே விடறதில்லே. ஹார்மோனியம் இல்லாட்டி ஸ்பெஷல் நாடகங்கள் ஏது? அகண்ட பஜனைகள் ஏது? பித்துக்குளி முருகதாஸை

ஹார்மோனியம் இல்லாம நினைச்சுப் பார்க்க முடியுமா? ஹார்மோனிய சுயபோதினிங்கற புஸ்தகத்திலே...

வைத்தி: ...யுவர் ஆனர், தயை கூர்ந்து என்னைக் கேஸின் விவரங்களைக் கோர்வையாகச் சொல்ல அனுமதிக்க வேண்டும் என்று மிக்க தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

பட்சி: யெஸ்..யெஸ்.. ப்ரொஸீட். கோர்ட்டின் பொன்னான நேரத்தை வீணடிக்காமல் சுருக்கமாகச் சொல்லணும். உங்கள் வாதத்தை விஸ்தாரமான ராகம், தாளம், பல்லவியா நீட்டாமல், ஒரு துக்கடா மாதிரி, ஒரு விருத்தம் மாதிரி, ஒரு ஜாவளி மாதிரி, ஒரு தில்லானா மாதிரி, ஒரு தும்ரி மாதிரி...

வைத்தி: (தனக்குள்) இவரே ஒரு மாதிரின்னு இப்பதானே தெரியறது. (உரக்க) அப்படியே யுவர் ஆனர். என் கட்சிக்காரர் ஆராவமுதனுக்கு, அவர் சாதகம் செய்யும் ஹார்மோனியம்தான் சாதமும் போடுகிறது. பற்பல ராதா கல்யாணங்களுக்கு வாசித்த அந்த இசைக் கருவிதான், அவரது தாயில்லா மகள் ராதாவின் கல்யாணத்துக்கும் பணத்தை வசூலித்துத் தரவேண்டிய நிலையில் இருக்கிறது.

பட்சி: ஒரு சந்தேகம். ராதா கல்யாணம்னு சொன்னீரே, அது மெலட்டூர் பாணி தானே? ஆரபியிலே 'சரணு வேங்கட நாயகா...', சூர்ணிகை, தலண்டு சோபனை, லக்னாஷ்டகம், ஓடம், டிபன் காஃபி, போஜனம் எல்லாம் உண்டோல்லியோ?

வைத்தி: (பல்லைக் கடித்து) யுவர் ஆனர், சம்பவம் நடந்த சென்ற அக்டோபர் மாதம் பத்தாம் தேதி, காலை, சுமார் எட்டு மணிக்குப் பிரதிவாதி பிருந்தாவன சாரங்கன், என் கட்சிக்காரர் வீட்டில் அத்து மீறிப் பிரவேசம் செய்தார். உறைபோட்டு, சாதுவாக, சப்தம் போடாமல், தெய்வமே என்றிருந்த என் கட்சிக்காரரின் ஜீவ நாடியான ஹார்மோனியத்தை, இரட்டை ரீட் கை ஹார்மோனியத்தை, தலைக்குமேல் தூக்கி, "தலைவலியே ஒழிந்து போ" என்ற தகாத வார்த்தைப் பிரயோகத்துடன், மேற்கூறிய கருவி தெய்வாம்சம் பொருந்தியது என்ற சிந்தனை கிஞ்சித்தும் இல்லாமல், அரக்கத்தனமாக, சாட்சிகள் முன்னால் போட்டுடைத்தார்.

பட்சி: பக்க வாத்தியத்தை உடைத்ததனால் ஏற்பட்ட பக்க விளைவுகளை, இப்போ பக்காவா அனுபவிக்கிறாராக்கும்.

(கோர்ட்டில் குபீர் சிரிப்பு)

வைத்தி: ஆகவே யுவர் ஆனர், நஷ்டஈடாக ஆராவமுதனுக்கு ஆயிரத்தி ஒரு ரூபாயும், மேலும் ஒரு புத்தம் புதிய கல்கத்தா ஹார்மோனியப் பெட்டியையும் பிரதிவாதி தருமாறு தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

பட்சி: ...கல்கத்தான்னவுடனே ரெண்டு ஞாபகத்துக்கு வருது. ஒண்ணு ரொபீந்திர

> "பேப்பர் ரோஸ்ட் சாப்பிட்டீங்களே நல்லாயிருந்ததா சார்?"
>
> "இரண்டாவது பக்கம் கடைசி பத்தி சரியா வேகலை!
>
> - கல்யாணி அருள்

ஷொங்கீத். அது அந்த ஊர் ட்ராம் போல, ஸ்லோ ஸ்பீடில் நகரும். ரெண்டாவது ரஸகுல்லா. அதுவும் சதா, ஜீராவில் ஸ்லோமோஷனில் ஜலக்ரீடை செஞ்சிண்டிருக்கும். ஆனா, கெரோவும், கதவடைப்பும், ஸ்ட்ரைக்கும், ஏகக் கூச்சலுமா இருக்கும் கல்கத்தாவில் ஹார்மோனியங்கள் செய்யப்படும் அளவுக்கு ஹார்மனியும் இருக்குன்னு என்னுடைய லேனார்ட் ஃபிரெண்ட் மூலம் இன்னிக்குத்தான் தெரிஞ்சிண்டேன். அந்தூர்லே சுமங்கலிகள் சங்கு ஊதுவாங்க தெரியுமா?...

வரத: (அவசரமாக எழுந்து) கோர்ட்டார் அவர்களின் பெர்மிஷனுடன் எதிர்தரப்பு வாதத்தைத் தொடங்குகிறேன். என் கட்சிக்காரர் ஹார்மோனியத்தை உடைத்ததை மறுக்கவில்லை. ஆனால் ஏன் உடைத்தார் என்பதின் காரணங்களை இந்த கோர்ட் உணர வேண்டும். யுவர் ஆனர், சாரங்கனின் பக்கத்து வீட்டுக்குக் குடி வந்த ஆராவ

முதன், ராப்பகலாக எழுப்பிய ஆர்மோனிய சப்தங்கள் உயிரற்ற ஒருவரின் உடலையே துடிதுடிக்க வைக்கும். ஆபீஸ் பிரமோஷன் எக்ஸாமுக்காகப் படித்துக் கொண்டிருந்த சாரங்கனை, அது தற்காலிக வெறியனாக்கியது யார் குற்றம்? நவராத்திரி சமயத்தில்...

பட்சி: ஆஹா! நவராத்திரின்னா நினைவுக்கு வருவது பாடல்களும், சுண்டல்களும்தான். அம்பாளைப் பத்தி எவ்வளவு கீர்த்தனைகள்? குரல் ரிப்பேரான சூப்பர் சீனியர் மாமிகள் காலங் காலமாக



அவற்றைச் சின்னாபின்னம் செய்ய முற்பட்டாலும், நாளைக்கும் அவை ஜீவித்து இருப்பது அவற்றிலுள்ள தெய்வாம்சத்தினால்தானே? அடுத்தது சுண்டல்... அடடே லஞ்ச் டைம் வந்துடுத்தே! கேஸ் லஞ்ச்சுக்குப் பிறகு தொடரும்.

(பட்சி ராஜன் விருட்டென்று எழுந்து உள்ளே போகிறார்)

அரை மணி கழித்து வந்து சீட்டில் உட்காரும் பட்சிராஜனின் கோட்டில் ஒட்டிக் கொண்டிருக்கும் தடயங்களிலிருந்து, அவர் அவல் கேசரியும், வெங்காய அடையையும் டிஃபனாக உள்ளே தள்ளி இருக்கிறார் என்பது வெட்ட வெளிச்சமாகிறது. வரதராஜுலுக்குப் பதில் வைத்தியநாதன் பேச எழுந்திருக்கிறார்.

பட்சி: இதென்ன? லஞ்சுக்கு முன்னாலே 'டிஃபன்ஸ் கௌன்ஸி'ல்தானே பேசிண்டிருந்தார். அதுவும் பல்லவியிலேதானே இருந்தார். இன்னும் அனு பல்லவி, சரணம் எல்லாம் இருக்கே. ம். இப்போல்லாம் எல்லா சரணங்களையும் யார் பாடறா? போன முறை ரஸிக ரஞ்சனி சபாலே...

வைத்தி: *(உரக்க)* 'யுவர் ஆனர். என்னுடைய கட்சிக்காரர் கேஸை வாபஸ் பெறுகிறார். ரெண்டு ஸைடும் ராசி ஆகிட்டாங்க. அதற்கான மனுவை தாக்கல் செய்ய அனுமதி கோருகிறேன்.

பட்சி: அப்படியா? வெரி குட். இதே மாதிரி கச்சேரிகளிலேருந்து சில வித்வான்கள் வாபஸ் செஞ்சா சங்கீதம் பிழைக்கும். நான் பப்ளிக்கா பேர் சொல்ல விரும்பாத பாடகர் ஒருத்தர்...

வைத்தி: யுவர் ஆனர், 'மேட்டர் ஸெட்டில்ட் அவுட் ஆஃப் கோர்ட்'. என் கட்சிக்காரர் ஆராவமுதனுக்குப் பிரதிவாதி, பிருந்தாவன சாரங்கன் மாப்பிள்ளை ஆகப்போகிறார். இன்று காலை கோர்ட்டில் கேஸ் நடக்கும் போது, சாரங்கன் தன் எதிரியின் புத்திரியான ரங்கநாயகியை முதல் முறையாகப் பார்த்தார். ரங்கனும் நோக்கினார். ரங்கநாயகியும் நோக்கினாள். கண்டதும் அவள் மேல் மலர்ந்த காதலால் சாரங்கனுக்கு, ஆராவமுதன் மேல் மூண்டிருந்த கடும் வெறுப்பு...

பட்சி: வாதியின் ஹார்மோனியம் போல தூள் தூளாகிவிட்டது இல்லையா?

(கோர்ட்டில் எழுந்த குபீர் சிரிப்பில் பட்சிராஜனும் கலந்து கொள்கிறார்)

வைத்தி: யுவர் ஆனர், லஞ்ச் பிரேக்கில் கல்யாணம் நிச்சயம் செஞ்சுண்டு முகூர்த்த தேதிக்குப் பெற்றோர்களிடமிருந்து வாய்தா வாங்கியிருக்கிறார்கள்.

பட்சி: ...அட? ஜனகரோட வில்லை உடைச்ச ராமர் சீதையைக் கல்யாணம் செஞ்சிண்ட மாதிரி, ஆராவமுதனோட ஹார்மோனியத்தை உடைச்ச சாரங்கன் ராதையைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறாராக்கும்!... அடடே... முக்கியமான ஒண்ணை மறந்துட்டேனே... ராதா கல்யாணத்திலே முத்துக் குத்தல்னு ஒண்ணு உண்டு. அதனுடைய வேதாந்த ரகசியம் என்னன்னா...

(வைத்தியநாதனும், வாய்தா வரதராஜுலுவும் பீதியுடன் கேஸ் கட்டுகளை வாரிக் கொண்டு அடுத்த கோர்ட்டுக்கு ஓடுகின்றனர்) ●



எழுதாத வரி

தள்ளி வைத்துப் பார்த்தேன்
    அந்த எழுதாத வரியை;
வெவ்வேறு ருசிகள், மணங்கள்
    நுழைய விரிந்த அதன் வாசலை
கூண்டின் திறப்பைத்
    தெரிந்து கொள்ளாது
கம்பிகளில் மோதிப்
    படபடக்கும் பறவைகளை;
திமிறித் திரியும்
    நானறியாத குதிரைகளை;
ஒரு நதியை;
    கடலை;
ஒரு போதும் யாரும் காணாத உலகை;
    வனங்களுக்குள் விலங்குகளின் உறுமலை.
கனமான ஒற்றைக் கண்ணீர்த் துளியை.
    கடைசியில் கண்டேன் -
பலவீனமாய் நடுங்கும்
    அதன் ஒடிந்த கால்களை.

உமா மகேஸ்வரி



கார்த்திகையில் மார்கழி!

"மார்கழி மகா உத்சவத்தை 2000ம் ஆண்டு தொடங்கியபோது, இவ்வளவு வெற்றிகரமாக இது அமையும் என்று எதிர்பார்க்கவில்லை. அப்போதெல்லாம் கர்நாடக இசைக் கச்சேரிகளை, ஏதோ போனால் போகிறது என்பது போல், காலை ஆறு மணிக்கு ஒளிபரப்பிக் கொண்டிருந்தார்கள். காரணம், விளம்பரதாரர்களின் கடைக்கண் பார்வை இதுபோன்ற நிகழ்ச்சிகளின் மீது விழாததுதான். இருந்தும் நாங்கள் துணிந்து இறங்கினோம். லாபநோக்கு தேவையில்லை என்பதில் தெளிவாக இருந்ததினால்தான் இது சாத்தியமானது'' என்கிறார் ஜெயா டி.வி.க்காக 'மார்கழி மகா உத்சவத்தை' நடத்தும் சுபஸ்ரீ தணிகாசலம்.

மார்கழி என்ற பெயரை உள்ளடக்கியிருந்தாலும், அந்த வைபவம் நடப்பது கார்த்திகை மாதத்தில்!

தினமும் ஒரு சங்கீத வி.ஐ.பி., கச்சேரியில் கலக்குகிறார். ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட 'தீம்'. இவற்றின் ஒளிபரப்பு மார்கழியில்தான் (டிசம்பரின் பின்பாதி) என்றாலும், கச்சேரிகள் டிசம்பரின் முன்பாதியில் நடைபெறுகின்றன.

"அதிகக் கட்டணம் கொடுத்து பிரபல வித்வான்களின் கச்சேரிகளைக் கேட்க முடியாதவர்களுக்கு, இது ஒரு வரப்பிரசாதம். அற்புதமான அகவுஸ்டிக்ஸ் அமைந்த அரங்கமாக செட்டிநாடு வித்யாஸ்ரமம் அரங்கு இருப்பது கூடுதல் வசதி. டெக்னிகல் லெக்சர் கிடையாது. ஆளாளுக்குப் பேச மாட்டார்கள், சரியாகக் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி, குறிப்பிட்ட நேரத்தில் முடிந்துவிடும் என்பதெல்லாம் போனஸ் மகிழ்ச்சி" என்கிறார் சுபஸ்ரீ.

சமீபகாலமாக பலரது கவனத்தைக் கவர்ந்துள்ளது இந்த நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியான 'நேயர் கேள்வி'. அன்று நிகழ்ச்சியை நடத்தும் முக்கியக் கலைஞரிடம், ரசிகர்கள் ஒரு கேள்வி கேட்கலாம். இந்தக் கேள்விகளை வடிகட்டும் சுபஸ்ரீயின் குழு, சிறந்த மூன்று கேள்விகளைக் கேட்டவர்களுக்குப் பரிசளிக்கிறது.

"ஒருமுறை சஞ்சயிடம் 'கர்நாடக இசை பொது ஜனங்களைச் சென்றடையுமா?' என்று கேட்டிருந்தார் ஒரு ரசிகர். அதற்கு அவர் சட்டென்று 'எதற்காக அப்படி அடைய வேண்டும்? இந்தக் கலை உயர்ந்த ரசனை மிக்க ரசிகர்களுக்கானது. அப்படியே இருக்கட்டுமே' என்று பளிச்சென்று பதிலளித்து அசரடித்தார். இதேபோல் உண்ணிகிருஷ்ணனிடம் ஒருவர் 'கனராகங்களைப் பாடுவதைக் குறைத்துக் கொண்டு, துக்கடாக்களில் அதிகப் பங்களிப்பு செய்யலாமே' என்று கேட்க, அதற்கு அவர் 'எதற்காக இந்தக் கலையை நீர்த்துப் போக வைக்க வேண்டுமென நினைக்கிறீர்கள்?' என்றார். இப்படிப் பல சுவாரசியங்கள் இந்த நிகழ்ச்சியில் உண்டு'' என்கிறார் சுபஸ்ரீ.

— ஜி.எஸ்.எஸ்.
படம் : ஸ்ரீஹரி



• சுபஸ்ரீ

ஆஹா!
ரூ.10,000 பரிசு!

வாராவாரம் ரூ.10,000 பரிசு என்றதும் படு உற்சாகத்துடன் கலந்து கொள்ளும் ஏராள வாசகர்களுக்கு நன்றி!

ஆறே கேள்விகள்... எல்லாமே 'டக் டக்'னு பதில் சொல்ற G.K. கேள்விகள்தாம்... தப்பித் தவறி தெரியலேன்னாலும் கொஞ்சம் யோசிச்சா கண்டுபிடிச்சுடலாம்!

ம்... எடுங்கள் பேனாவை!

காட்டுங்கள் கைவரிசையை!

வாரந்தோறும் பரிசு : ரூ.10,000!

ஆறுதல் பரிசுகளாக, 20 பேருக்கு தலா ரூ.100 ரொக்கப் பரிசு.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்.

ஆஹா! ரூ.10,000 பரிசு!

குவிஸ் போட்டி கூப்பன் - 6

1. செஸ் விளையாட்டில் இந்தியாவின் சப்-ஜுனியர், ஜுனியர், சீனியர், தேசியப் பட்டங்களை இரண்டிரண்டு முறை வென்றவர் ....

2. ஐ.நா. பொதுச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்ற முதல் இந்தியப் பெண்மணி ....

3. இலட்சத் தீவுகளின் தலைநகரம் ....

4. 'கிரேட் மொஹல்' என்ற புகழ் பெற்ற வைரத்தின் பிரபலமான பெயர் ....

5. நோபல் பரிசு பெற்ற இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகம் ....

6. செப்.11ல் தாக்குதலுக்குள்ளான அமெரிக்க உலக வர்த்தக மையக் கட்டடத்திலிருந்த மாடிகள் ....

வாசகர்கள் அனைவருக்குமே



எழுதிய கல்கி வாசகர் ஒருவருக்கு, ரூ.10,000 பரிசு வழங்கப்படும்.

- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதில்களை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது, குலுக்கல் முறை.
- இப்பரிசுத் தொகை வருமானவரி விதிமுறைகளுக்கு உட்பட்டது.
- கல்கி வாசகர்கள் எங்கிருந்தாலும் இதில் பங்கேற்கலாம்.
- உறையின் மீது 'ஆஹா! ரூ.10,000 (6)' என்று குறிப்பிட வேண்டும்.
- விடைகள் 27.12.2003க்கு முன்னதாக கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப் பட மாட்டாது.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

எதிரேயுள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்குப் பதில் எழுதி, டிசம்பர் 27ஆம் தேதிக்குள் அனுப்புங்கள்.

- அனைத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள்

குவிஸ் போட்டி கூப்பன் - 6

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

கையொப்பம் : ....

கல்கி வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி

ஒரு பெண்மணி எவ்வளவு உன்னதமான ஆன்மிக வாழ்வை அடைய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார், புனிதவதி என்ற பொருத்தமான பெயருடைய காரைக்கால் அம்மையார்.

நாகப்பட்டினத்திலிருந்து பத்து மைல் தூரத்தில் இருக்கிறது அம்மையாரின் கோயில். சிறிய கோயில். விநாயகரின் சந்நிதியில் வணங்கி விட்டு அம்மையாரைத் தரிசிக்கிறோம். கோயிலை ஒட்டிச் சிறிய ஈசன் சந்நிதியும் இருக்கிறது. அம்பிகையும் புன்னகையுடன் அருள் புரிகிறார்.

அம்மையாரின் கோயிலுக்கு எதிர்ப்பக்கத்தில் ஒரு சிவன் கோயில் இருக்கிறது. இந்தக் கோயில் சுந்தர சோழர் காலத்தில், செம்பியன் மாதேவியாரால் திருப்பணிகள் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு சமயம் மழை பெய்யாமல் பஞ்சம் வந்த போது, தேவர்கள் ஈசனைப் பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் பார்வதி தேவியை காரை வனத்துக்குச் சென்று தவம் செய்யச் சொன்னார்.

• இறைவன் திருப்பாத நிழலில் அம்மையார்



பராசர முனிவரின் உதவியுடன் அம்பிகை சாகம்பரியாக வந்து சிவபூஜை செய்தார். அம்பிகைக்குக் காட்சி கொடுக்க கைலாயத்திலிருந்து வந்ததால், கைலாயநாதர் என்றே பெயர். மழையும் பெய்தது!.

தேவி சுந்தராம்பிகை திருச்சுற்று வலம் வரும்போது, இரிசிக முனிவர் பூஜித்த காளத்தீச்வரர், கண்வமுனிவர் பூஜித்த அருணாசலேச்வரர், குச மாமுனிவர் பூஜித்த காஞ்சி ஏகாம்பரேச்வரர், அகத்தியர் பூஜித்த அகத்தீச்வரர் என்று பஞ்சலிங்க தரிசனம் செய்யலாம். இதெல்லாம் வெவ்வேறு இடங்களிலிருந்து கொண்டு வந்து 1746 முதல் 1770 வரையில் கோயிலில் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

மாங்கனி விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அம்மையாரின் வாழ்க்கையை அப்படியே' நிகழ்த்திக் காட்டும் விழா. பரமதத்தனுடைய மாப்பிள்ளை அழைப்பில் தொடங்கி, கல்யாணம் முதல், அம்மையாருக்குப் பஞ்சமூர்த்திகளும் தரிசனம் கொடுக்கும் கைலாயக் காட்சி வரை, உற்சவமாக ஆனியில் நடைபெறுகிறது. மூன்றாவது நாள் மாங்கனி விழா. கைலாசநாதர் பிக்ஷாடனராகப் புனிதவதியாரின் இல்லத்துக்கு வருவார். அம்மையார் அமுது செய்வித்து மாங்கனியைத் தருவார். அன்று ஊர் முழுவதும் மாங்கனிகள் சிதறிக் கிடக்கும்.

ஸ்ரீ நடராஜமூர்த்தியின் சந்நிதி அழகாக இருக்கிறது. அம்மையார் அவருடைய நடனத்தைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு, எலும்புந்தோலுமாக பேயுருவில் வீற்றிருக்கிறார். அந்த வடிவில் கூட ஒரு ஸௌந்தர்யத்தைக் காண்கிறோம். ஈசனின் திருநடனத்தை, ஆனந்தக் கூத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பரம ஆனந்த சாந்த நிலை. அமைதி என்பதுதான் ஆனந்தமோ?

எப்போதும் வீணையும் கையுமாகப் பாடிக் கொண்டிருக்கும் தும்புருவின் மகள் சுமதியே, காரைக்காலில் துர்வாச முனிவரின் சாபத்தால் புனிதவதியாகப் பிறந்தாள் என்கிறது தல புராணம். 'ஈசன் வீற்றிருக்கும் கைலாய மலையைக் காலால் மிதிக்க மாட்டேன்'


எம்மை

என்று வைராக்கியம் கொண்டு தலையாலேயே 'நடந்து' கைலாயம் அடைந்தபோது பார்வதி இவரைக் கண்டு நகைத்தாராம். ஈசனோ, 'என் அம்மையே வருக!" என்று வரவேற்றாராம்! ஈசனுக்கே அன்னையானார் அம்மை!

"என்ன வரம் வேண்டும்?" என்று ஈசன் கேட்டார்.

"தங்கள் அடிக்கீழ் இருந்து திருநடனத்தை எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்" என்று வரம் கேட்டார். "திருவாலங்காட்டில் தவம் செய். அங்கே தாண்டவ தரிசனம் தருகிறோம்" என்று வரம் கொடுத்தார். அம்மையார் இயற்றிய அற்புதத் திருவந்தாதியே ஓர் அற்புதம்தான். தேவார மூவர் காலத்துக்கு முற்பட்டவர் என்பதால், இவர் பாடல்களுக்கு மூத்த திருப்பதிகம் என்று பெயர் வழங்குகிறது. பண்ணமைத்துப் பாடும் முறையை அறிமுகப்படுத்தியவர். இருவகைச் செய்யுள்களைக் கோத்து 'இரட்டை மணிமாலை' புனையும் முறையையும் இவரே ஏற்படுத்தினார்.

திருவாலங்காட்டுத் திருப்பதிகம் படிக்கச் சற்று பயமாக இருக்கும். சுடுகாட்டு வர்ணனை, பேய்களின் ஆட்டம் என்று அச்சம் தோன்றப் பாடி



• காரைக்கால் அம்மையார்

ஆளும் அம்மை

ஆனந்தி

யிருக்கிறார். பிற்காலப் புலவர்களின் பரணி இலக்கியங்களுக்குக் கூட இவர் முன்னோடியாக இருந்திருக்கிறார்.

"கூளி பாடக் குழகனாடுமே" என்றும்

"பலபேய் இரிந்தோடப் பித்த வேடங்கொண்டு
நட்டம் பெருமானாடுமே"

என்றும் பாடியவர், நகைச்சுவையுடன் அற்புதத் திருவந்தாதி பாடியிருப்பது ஒரு அற்புதந்தான்.

மிடற்றில் விட முடையீர் உம்மிடற்றைநக்கி
மிடற்றில் விடங்கொண்டவாறோ - மிடற்றகத்து
மைத்தா மிருள் போலும் வண்ணம் கரிதாலோ
பைத்தாடும் மார்பில் பாம்பு.


பாம்பை அணிந்துள்ள ஈசனை எப்படிப் பார்க்கிறார்?

"கழுத்தில் விஷத்தை வைத்துக் கொண்டிருக்கிறீரே, அதை நக்கியதால் தான் பாம்புக்கு விஷம் கிடைத்ததோ? அந்தக் கரிய நிறம் தான் அதன் மேனியைக் கறுப்பாக்கியதோ" என்று நகைக்கிறார்.

அழகிய திருவடியில் கிலுகிலுவென்று ஒலிக்கும் சிலம்பைப் பற்றிய பாடல். இதற்குப் பொருளே சொல்ல வேண்டியதில்லை.

பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம் பயின்று தாழருவி தாங்குதலால் - ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியில் மேய சிலம்பு.

பாம்பையும், பிறைச்சந்திரனையும், முனிவர்கள் ஏவிவிட்ட மானையும், பயங்கரமான புலியையும் அணிந்திருக்கிறாரே, போதாதற்குச் சடை மீது அருவியாக ஆகாயத்திலிருந்து விழுந்த கங்கை வேறு. இத்தனையையும், நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானையும் இந்தச் சிலம்பல்லவா தாங்குகிறது?" என்று வியக்கிறார். தாளத்தில் அவருக்கு இருந்த ஆசை சிலம்பொலி கேட்டு ஊக்குவிக்கப்பட்டிருக்கிறது என்றே தோன்றுகிறது.



• கைலாயநாதர் திருக்கோயில்

நடராஜப் பெருமானின் திருக்கூத்துக்குத் தாளம் போடுவது, எப்படிப்பட்ட அற்புதம்!

(தொடரும்)

அந்தச் சிறுவனுக்கு ஆறு, ஏழு வயதிருக்கலாம். அப்பா கோவிலில் நாகஸ்வர கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்தார். கூடவே தவில் வாசித்தவர் அந்தச் சிறுவனின் பெரியப்பா மகன். ஒருநாள் அவன் தவில் வாசிக்க வர முடியாமல் போனது.



• ஹரித்துவார மங்கலம் ஏ.கே.பழனிவேல்

ஏ.கே.பி!


அண்ணனுக்குப் பதிலாகப் பாதாள ஈசுவரர் அலங்காரவல்லி சந்நிதியில், முதன் முதலாகத் தவிலில் 'டொம்' என்று தட்ட வாய்ப்புக் கிடைத்தது. வாத்தியத்தைத் தூக்கக் கூட முடியாத பருவம் அது. சுவாமி சந்நிதியில், தவில் வாசிப்பு அரங்கேற்றம் ஆகிவிட்டது என்றே வைத்துக் கொள்ளலாம்!

ஆனால் மகன் இதில் ஈடுபடுவதில் அப்பாவுக்கு விருப்பமில்லை. வண்டி வாகன வசதி இல்லாத அந்தக் கிராமத்தில், இந்தப் பிள்ளையும் நம்மைப் போல் சங்கடப்பட வேண்டுமா என்கிற நியாயமான ஆதங்கம்தான் அது.

ஆனால் தெய்வத்தின் நினைப்பு வேறு விதமாக இருந்தது. தன்னுடைய சந்நிதியில் முதன் முதலாக 'டொம்' தட்டிய குழந்தையைக் கைதூக்கி விட வேண்டாமோ? பூரண அருளைப் பொழிந்து, அந்தச் சிறுவனை ஒரு முழுமையான தவில் வித்வானாக உருவாக்கி, சர்வதேச அளவில் புகழ்பெற வைத்து விட்டார் அந்தப் பாதாள ஈசுவரஸ்வாமி.

அந்தச் சிறுவன்தான் இன்றைக்கு 'ஏ.கே.பி' என்று கலைஞர்கள் கூட்டத்தில் புகழ்பெற்று விளங்குகிற ஹரித்துவாரமங்கலம் ஏ.கே.

> “தவிலும் நாகஸ்வரமும் சேர்ந்தால்தான், அது மங்கலவாத்யம். கல்யாணத்தில் கெட்டிமேளம் என்று முழங்குகிறார்களே அதற்குச் சகல வாத்யம் என்று பெயர்.”





பழனிவேல்!

தந்தை குமாரசாமிப் பிள்ளையிடமே முதன் முதலாகப் பாடம் கற்றுக் கொள்ள நேர்ந்தது பழனிவேலுவுக்கு. இவனை எப்படியாவது தவிலை விட்டு விட்டு ஓடப் பண்ண வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்ட மாதிரி, அப்பா பாடம் சொல்லிக் கொடுப்பாராம். வேண்டுமென்றே, அந்தச் சிறுவனுக்குப் பிடிபடக் கஷ்டமான தாளங்களைச் சொல்லிக் கொடுத்து வதைப்பாராம். அறைக்குள் தள்ளிக் கதவைத் தாழிட்டுச் சரியாக வாசித்தால்தான் சோறு என்று மிரட்டுவாராம். சரியாக வாசிக்க வராவிட்டால், கட்டையாலேயே மண்டையில் அடிப்பாராம்.

''அடிபட்ட அந்த முட்டு ஒண்ணு இன்னும் இருக்கு'' என்று சொல்லிக் கொண்டே தலையில் தொட்டுக் காட்டுகிறார் ஏ.கே.பி.

''நாகசுரத்தில் ராஜரத்தினம் பிள்ளைக்கு முன், பிள்ளைக்குப் பின் என்று காலவரையறை செய்வதுண்டு. அதே போல் தவில் வாத்தியத்தில் நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு முன், பிள்ளைக்குப் பின் என்று சொல்ல வேண்டும்'' என்கிறார் ஏ.கே.பி.



தவில் வாத்தியத்தைப் பற்றி ஆராய்ச்சி நோக்கிலான பல விஷயங்களைச் சொல்ல இவர் ஒருவர் போதும்.

சின்ன மேளம் என்று மிருதங்கத்துக்குப் பெயர் உண்டு. நாகஸ்வரத்துக்கு வாசிக்கப் படுகிற தவிலுக்குப் பெரிய மேளம் என்று பெயர்.

அந்த நாட்களில் சுவாமி திருவீதியுலா வருகிற போதும், கோயில் அரங்குகளிலும், சதிர் என்ற பெயரில் நாட்டியம் நடக்கும். அதற்குத் தாள கதியை மத்தளத்தில் வாசிப்பார்கள். 'நட்டு-முத்து' என்று அதற்குப் பெயர்.

ஆடுகிறவர்களுக்கு மத்தள ஒலி நன்றாய்க் கேட்க வேண்டும் என்பதற்காக, நட்டு முத்துக்காரர்கள் ஆட்டக்காரர்களின் கூடவே நகர்ந்தபடி வாசிப்பார்களாம். 'ஆட்டக்காரர்களின் முகம் மறைக்குது- தள்ளி நில்லுய்யா' என்று பார்வையாளர்கள் கடிந்து கொள்வார்களாம்!

அந்தச் சதிர் இப்போது பரதநாட்டியம் என்ற வடிவில் மேடைக் கலையாகியிருக்கிறது. பக்கவாத்தியத்துக்கு மிருதங்கம் சேர்ந்து கொண்டு விட்டது. அதே நேரத்தில் பரதக் கலை, கோவில்களை விட்டும் விலகிப் போய் விட்டது.

மறந்து போய் விட்ட அந்தப் பண்டைய மரபுகளை மீட்டுக் கொண்டு வருகிற முயற்சியில் ஈடுபட்டவர், ஏ.கே. பழனிவேலுதான். பரத நாட்டியத்துக்கு மிருதங்கம் உள்ள இடத்தில் தவிலை

இணைத்து விட்டார். தவில்தான் பிரதானமாக இயங்கி ஜதிகள் சொல்லும்.

நாத லய நாட்டியம் என்று இதற்குப் பெயர் சூட்டினார். முதன் முதலில் வழுவூராரின் குமாரர் சாம்ராஜ் ஜதி சொல்ல, ஏ.கே.பி., தவிலோடு 1980ம் ஆண்டு ஒரு பரதக் கச்சேரியை நடத்திப் பார்த்தார்கள். ரசிக ரஞ்சனி சபாவில் நடைபெற்ற நிகழ்ச்சி அது. அத்தோடு விட்டு விட்டார்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால், கொடைக்கானலில் நடைபெற்ற ஒரு விழாவில்தான், முறைப்படி நாதலய நாட்டியம் என்று தொடங்கினார் ஏ.கே.பி. அப்போது பரதம் ஆடியவர்கள் சின்ன மனூர் சகோதரிகள்.

இப்போது, பரதநாட்டியத்தோடு திரைப் படங்களில் இடம்பெறும் நடனப் பாடல்களையும் சேர்த்து, மூன்று மணி நேரம் ஜனரஞ்சகமான நிகழ்ச்சிகளை வழங்குகிறார்கள்.

''தலைவர் கூட எப்பவும் ஒரு மேக்கப் மேன் போறாரே... என்ன விஷயம்..?''

''கட்சிக்காக நன்கொடை வாங்கும்போது வீடியோவிலே பதிவானாலும் விவகாரம் வராம தப்பிக்க, விதவிதமான மேக்கப்பை போடத்தான்...''

— வேணி ப்ரியன்



பாரம்பரியமான பரதநாட்டிய நிகழ்ச்சிகளை மல்லாரி என்ற மிடுக்கான மெட்டுக்கட்டோடுதான் தொடங்குவார்கள். இது பற்றிய பல சுவையான தகவல்களைச் சொல்கிறார் ஏ.கே.பி.

கோவில் திருவிழாக்களில் இறைவனின் திருமேனியை வீதியுலாக் கொண்டு வருகிற போது, அதைச் சுமந்து வருகிறவர்களுக்கு என்ன பெயர் தெரியுமா? மல்லர்கள்! அவர்களுக்குப் புத்துணர்ச்சியூட்டுகிற மெட்டு மல்லாரி.

சுவாமி ஆலயத்தை விட்டு வெளியே புறப்படுகிற போது, முதலில் கேட்பது 'டக், டக்' என்ற தவில் சப்தம்தான். இது ஒலித்த பின்னர்தான் நாகஸ்வரக்காரர் வாசிக்க ஆரம்பிப்பார். ஆனால் கர்நாடக சங்கீதக் கச்சேரிகளில் பயன்படுகிற மிருதங்கம், பாடகர் பாட ஆரம்பித்த பிறகு அல்லது வீணை, வயலின் போன்ற முதன்மையான இசைக் கருவி மீட்டப்பட்ட பின்னர்தான் சேர்ந்து கொண்டு ஒலியெழுப்பும்.

கோவில்களில் துவஜாரோகணம் என்னும் கொடியேற்ற வைபவத்தின் போது, முதலில் தவிலுக்குப் பூஜை செய்கிற வழக்கம் கூட உண்டாம். தவிலும் நாகஸ்வரமும் சேர்ந்தால்தான், அது மங்கலவாத்யம் என்று பெயர் பெறுகிறது. கல்யாணத்தில் கெட்டி மேளம் என்று முழங்குகிறார்களே அதற்குச் சகல வாத்யம் என்று பெயர்.

பொதுவாகத் தவில் கலைஞர்கள், மேல் சட்டை இல்லாமல் வெறும் உடம்போடு தான் வாசிப்பார்கள். அந்த வழக்கத்தை மாற்றியவர் ஹரித்வாரமங்கலம் ஏ.கே.பி.

முதன் முதலாக இவர் மேல் சட்டை அணிந்து தவில் வாசிக்க வந்த போது, சக கலைஞர்கள் கேட்டார்களாம். "என்ன... ஒண்ணொண்ணா மாத்திக்கிட்டிருக்கியே" என்று. ஏ.கே.பி. ஒன்றும் பேசாமல் சிரித்துக் கொண்டே போய் விட்டார். அடுத்த மூன்று மாதங்களில் நிறையப் பேர் ஏ.கே.பி. மாதிரி மேல் சட்டையோடு வாசிக்க வந்து விட்டார்களாம்.

— சுப்ர.பாலன்

படங்கள் : யோகா

சிவகாமியின் சபதம்

நாற்பத்து ஐந்தாம் அத்தியாயம்

சிம்மக் கொடி

உயிர்க்களை இழந்து மரணத்தின் அமைதி குடி கொண்டிருந்த கண்ணபிரானுடைய முகத்தைப் பார்த்த வண்ணம் சிவகாமி கண்ணீர் விட்டுத் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.


"அம்மா! எத்தனை நேரம் அழுது புலம்பினாலும் கண்ணனுடைய உயிர் திரும்பி வரப் போவதில்லை. யுத்தம் என்றால் அப்படித்தான். கண்ணபிரான் ஒருவன்தானா இறந்தான்? இவனைப் போல் பதினாயிரக்கணக்கான வீரர்கள் பலியானார்கள். தயவு செய்து புறப்படுங்கள். இந்த வீட்டுக்குப் பக்கத்தில் தீ வந்து விட்டது" என்று பரஞ்சோதி கூறினார்.

கண்ணீர் ததும்பிய கண்களினால் சிவகாமி அவரைப் பரிதாபமாகப் பார்த்து, "தளபதி! யுத்தம் வேண்டாம் என்று தங்களுக்கு ஓலை எழுதி அனுப்பினேனே!" என்று விம்மினாள்.

"ஆம், அம்மா! யுத்தத்தைத் தடுப்பதற்கு நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன். என் முயற்சி பலிதமாகும் சமயத்தில் அந்தக் கள்ள பிக்ஷு வந்து எல்லாக் காரியத்தையும் கெடுத்து விட்டான். வாதாபி நகரம் அழிய வேண்டும் என்று விதி இருக்கும்போது யார் என்ன செய்ய முடியும்?"

"ஐயா! விதியின் பேரில் ஏன் குற்றம் சுமத்துகிறீர்கள்? எல்லாவற்றிற்கும் காரணம் இந்தப் பாதகிதான். அன்றைக்குத் தாங்களும் அவரும் வந்து எவ்வளவோ பிடிவாதமாக என்னை அழைத்தீர்கள். மூர்க்கத்தனத்தினால், 'வர மாட்டேன்'

அமரர் கல்கி





என்று சொன்னேன்...''

"அம்மா, எவ்வளவோ காரியங்கள் வேறு விதமாக நடந்திருக்கலாம். அதையெல்லாம் பற்றி இப்போது யோசித்து என்ன பயன்? தயவு செய்து புறப்படுங்கள். மாமல்லரும் தங்கள் தந்தையும் தங்களைப் பார்க்க ஆவலுடன் காத்துக் கொண்டிருப்பார்கள்."

"தளபதி! அவருடைய முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? என்னால் முடியாது. நான் இங்கேயே இருந்து உயிரை விடுகிறேன். ஆயிரந் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாக அவரிடம் சொல்லுங்கள்!'' என்று சிவகாமி சொல்லிக் கொண்டிருக்கும்போது வாசலில் பெருஞ் சத்தம் கேட்டது.

சற்று நேரத்துக்கெல்லாம் மாமல்லர் உள்ளே பிரவேசித்தார்; அவருக்குப் பின்னால் ஆயனரும் வந்தார்.

"ஆ! இதோ அவரே வந்துவிட்டார்'' என்று பரஞ்சோதி வாய்விட்டுக் கூறி, மனத்திற்குள், "இத்துடன் என் பொறுப்பும் தீர்ந்தது!'' என்று சொல்லிக் கொண்டார்.

"அவரே வந்துவிட்டார்!'' என்ற வார்த்தைகள் காதில் விழுந்ததும் சிவகாமியின் தேகம் புல்லரித்தது. குனிந்திருந்த தலையை நிமிர்த்தி வாசற் பக்கம் பார்த்தாள். கண நேரத்திலும் மிகச் சிறிய நேரம் மாமல்லருடைய கண்களும் சிவகாமியின் கண்களும் சந்தித்தன.

அடக்க முடியாத உணர்ச்சி பொங்கச் சிவகாமி மறுபடியும் தலை குனிந்தாள். அவளுடைய அடி வயிற்றிலிருந்து ஏதோ கிளம்பி மேலே வந்து மார்பையும் தொண்டையும் அடைத்துக் கொண்டு மூச்சுவிட முடியாமலும் தேம்பி அழுவதற்கு முடியாமலும் செய்தது.

அப்புறம் சிறிது நேரம் அங்கு என்ன நடந்ததென்றே தெரியாமல் சிவகாமி உணர்வற்றிருந்தாள்.

"ஆ! கண்ணபிரானா? ஐயோ!'' என்று அவளுடைய தந்தையின் குரல் அலறுவது காதில் விழுந்ததும் உணர்வு பெற்றாள்.

"ஆமாம் கண்ணன்தான்! கமலியின் சிநேகிதியைச் சிறை மீட்டு ரதத்தில் வைத்து அழைத்து வர வந்த கண்ணன் தான் மார்பில் விஷக்கத்தி பாய்ந்து செத்துக் கிடக்கிறான். ஆயனரே! உம்முடைய மகளைக் கேளும்: அவளுடைய சபதம் நிறைவேறிவிட்டதல்லவா? அவளுடைய உள்ளம் குளிர்ந்து விட்டதல்லவா? கேளும், ஆயனரே! கேளும்!''

மாமல்லரின் மேற்படி வார்த்தைகள் சிவகாமியின் காதில் உருக்கிய ஈயத் துளிகள் விழுவது போல் விழுந்தன. ஆஹா! இந்தக் குரல் எத்தனை அன்பு ததும்பும் மொழிகளை இன்பத் தேன் ஒழுகும் வார்த்தைகளை ஒரு காலத்தில் சொல்லியிருக்கிறது? அதே குரலில் இப்போது எவ்வளவு கர்ண கடூரமான சொற்கள் வருகின்றன? ஆஹா! இதற்குத்தானா இந்த ஒன்பது வருஷ காலமும் பொறுமையுடன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தோம்?

மாமல்லரின் கொடுமையான வார்த்தைகள் பரஞ்சோதிக்கும் பெருந் துன்பத்தை உண்டாக்கின. "சக்கரவர்த்தி! சிவகாமி அம்மை ரொம்பவும் மனம் நொந்து போயிருக்கிறார்...'' என்று அவர் சொல்லுவதற்குள் மாமல்லர் குறுக்கிட்டு, "சிவகாமி எதற்காக மனம் நோக வேண்டும்? இன்னும் என்ன மனக்குறை? சபதந்தான் நிறைவேறி விட்டதே? சந்தேகமிருந்தால் வீதி வழியே போகும்போது பார்த்து நிச்சயப்படுத்திக் கொள்ளட்டும். வீடுகள் பற்றி எரிவதையும், வீதிகளில் பிணங்கள் கிடப்பதையும் ஜனங்கள் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடுவதையும் பார்த்துக் களிக்கட்டும். ஆயனச் சிற்பியாரே! உம்முடைய குமாரியை அழைத்துக் கொண்டு உடனே கிளம்பும்!''

சிவகாமியின் மார்பு ஆயிரம் சுக்கலாக உடைந்தது. அவளுடைய தலை சுழன்றது. அச்சமயம் ஆயனர் அவளுக்கு அருகில் சென்று இரக்கம் நிறைந்த

குரலில், "அம்மா, குழந்தாய்! என்னை உனக்குத் தெரியவில்லையா?" என்றார்.

"அப்பா!" என்று கதறிக் கொண்டே சிவகாமி தன் தந்தையைக் கட்டிக் கொண்டு விம்மினாள்.

அன்று அதிகாலையில் சேனாதிபதி பரஞ்சோதி வாதாபிக்குள் பிரவேசித்ததிலிருந்து மாமல்லருடைய உள்ளப் பரபரப்பு நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டிருந்தது. சிவகாமிக்கு ஏதோ விபரீதமான அபாயம் நேரப் போகிறதென்றும் தாம் இங்கே வெறுமனேயிருப்பது பெரிய பிசகு என்றும் அவருக்குத் தோன்றி வந்தது. புலிகேசிச் சக்கரவர்த்தி அரண்மனையில் அகப்படவில்லையென்று மானவன்மரிடமிருந்து செய்தி வந்த பிறகு கோட்டைக்கு வெளியே அவருக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஆயனரையும் அழைத்துக் கொண்டு வாதாபி நகருக்குள் பிரவேசித்தார்.

சிவகாமியைச் சந்தித்தவுடனே அவளிடம் அன்பான மொழிகளைக் கூற வேண்டும் என்பதாகத்தான் யோசனை செய்து கொண்டு சென்றார். ஆனால் அவருடைய அன்புக்கும் அபிமானத்துக்கும் பெரிதும் பாத்திரமாயிருந்த கண்ணபிரான் செத்துக் கிடந்ததைக் கண்டதும் மாமல்லரின் மனம் கடினமாகிவிட்டது. அதனாலேதான் அத்தகைய கடுமொழிகளைக் கூறினார்.

ரதத்தில் ஆயனரும் சிவகாமியும் முன்னால் செல்ல, பின்னால் சற்று தூரத்தில் மாமல்லரும் பரஞ்சோதியும் குதிரைகளின் மீது ஆரோகணித்துச் சென்றார்கள். மாமல்லரின் விருப்பத்தின்படி பரஞ்சோதி தாம் சிவகாமியின் வீட்டு வாசலை அடைந்ததிலிருந்து நடந்த சம்பவங்களையெல்லாம் விவரமாகச் சொன்னார். அதையெல்லாம் கேட்கக் கேட்கச் சக்கரவர்த்தியின் நெஞ்சில் குரோதாக்கினி சுடர்விட்டு எரியத் தொடங்கியது. முக்கியமாக நாகநந்தியை பரஞ்சோதி கொல்லாமல் உயிரோடு விட்டு விட்டார் என்பது மாமல்லருக்குப் பெருங் கோபத்தை உண்டாக்கியது. சிவகாமியைப் பெருந் துன்பத்திலிருந்து பாதுகாப்பதற்காகவே அவளைக் கொல்ல எத்தனித்ததாக நாகநந்தி சொன்னாரல்லவா? அதைக் கேட்டபோது, அந்தக் கூற்றில் அடங்கியிருந்த உண்மையை மாமல்லரின் அந்தராத்மா உடனே உணர்ந்தது. அது காரணமாக அவருடைய குரோதம் பன்மடங்கு அதிகமாகிக் கொழுந்து விட்டெரிந்தது.

சிவகாமி தன் அருமைத் தந்தையின் மீது சாய்ந்த வண்ணம் வாதாபி நகரின் பயங்கர வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சென்றாள். அந்தக கோரங்களைப் பார்க்கச் சகிக்காமல் சில சமயம் கண்களை மூடிக் கொண்ட போதிலும் காதுகளை மூடிக் கொள்ள முடியவில்லை. ஜுவாலை விட்டுப் பரவிய பெருந் தீயிலே வீடுகள் பற்றி எரியும் சட சடச் சத்தமும், காற்றின் 'விர்'ரென்ற சத்தமும், குழந்தைகளின் கூக்குரலும் ஸ்திரீகளின் ஓலமும், சளுக்க வீரர்களைப் பல்லவ வீரர்கள் துரத்தி ஓடும் சத்தமும், ஜயகோஷமும், ஹாஹாகாரமும் அவளுடைய செவிகளை நிரப்பி அடிக்கடி கண்களைத் திறந்து பார்க்கச் செய்தன.

அந்த நிலையில் ஒருமுறை மாமல்லர் சிறிது முன்னேறி வந்து ரதத்தின் ஓரமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தபோது சிவகாமி ஆவலுடன் அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

ஆனால், மாமல்லரோ அவள் பக்கம் தம் பார்வையைத் திருப்பவேயில்லை. ஆயனர் முகத்தை நோக்கிய வண்ணம், "சிற்பியாரே! நாங்கள் எல்லாரும் இங்கிருந்து புறப்பட்டு வர இன்னும் ஒரு மாதம் ஆகலாம். உங்களுக்கு இஷ்டமிருந்தால் உம்மையும் உமது மகளையும் முன்னதாகத் தக்க பாதுகாப்புடன் காஞ்சிக்கு அனுப்பி வைக்கிறேன். அல்லது நாகநந்தி பிக்ஷு உம்மையும் உமது குமாரியையும் அஜந்தாவுக்கு அழைத்துப் போக விரும்புவதாகச் சொன்னாராம். அது உங்களுக்கு இஷ்டமானால் அப்படியும் செய்யலாம்!" என்றார்.

அத்தனை கஷ்டங்களுக்கும் யுத்த





அருள்வாக்கு

அந்தப் பரதேவதையையே சங்கீத தேவதையாகச் சொல்லும்போது ராஜ மாதங்கி, ராஜ ச்யாமளா என்று பெயர் சொல்கிறார்கள். 'மீநாக்ஷி மே முதம் தேஹி... ராஜ மாதங்கி' என்று தீக்ஷிதர் பாடியிருக்கிறபடி மதுரையிலே நித்யவாஸம் பண்ணுகிற மீநாக்ஷியானவள், பராசக்தி சங்கீதத்தின் அதிதெய்வமாக இருக்கப்பட்ட அவஸரம் (கோலம்) தான். காஞ்சீபுரத்தில் காமாக்ஷி கோயிலிலும் இவளுக்குத் தனி ஸந்நிதி இருக்கிறது. "ச்யாமளா தண்டகம்" இப்படி ஸங்கீத மூர்த்தியாக இருக்கப்பட்ட பராசக்தியைப் பற்றியதே. 'நவரத்னமாலா' என்பதாக 'ஓம்கார பஞ்ஜ சுகீம்' என்று ஆரம்பிக்கிற ஸ்துதி ஒன்றைக் காளிதாஸன் செய்திருக்கிறான். அதுவும் இந்த ச்யாமளா தேவியைப் பற்றியதுதான். அதிலே இவளும் ஸரஸ்வதியைப் போலவே கையில் வீணை வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறது. 'வீணா ஸங்க்ராந்த காந்த ஹஸ்தாம்'. நிறத்தில் மட்டும் அவளுக்கும் இவளுக்கும் நேர் வித்தியாசம். ஸரஸ்வதி நல்ல வெளுப்பு. இவளோ கறுப்பு. அதனால்தான் 'ச்யாமளா' என்று பெயர். இவளுடைய லாவண்யம் நிறைந்த கையின் நுனி விரல், வீணையின் தந்திகளில் எப்போதும் ஸஞ்சாரம் பண்ணிக் கொண்டிருக்கிறது. அவள் இப்படி இருக்கிறாளென்றால் நாமும் சங்கீத உபாஸனையால் அவளைப் பிடித்துவிடலாம் என்று அர்த்தம். நிறைய சாஸ்த்ராப்யாஸம் பண்ணி, யோகாதிகளால் சித்தத்தை நிறுத்தி, வசப்படுத்த முடியாத நாமும் ஸ்வரங்களில் லயிப்பதால் சரணாரவிந்தத்தில் அதைக் கிடத்திவிடலாம். ஸுலபமாக அவள் கடாக்ஷத்தைப் பெற்று விடலாம்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

பயங்கரங்களுக்கும் இடையிலேயும் ஆயனருக்கு "அஜந்தா" என்றதும் சபலம் தட்டியது. அஜந்தா வர்ண இரகசியத்தைப் பரஞ்சோதி நாகநந்தியிடம் கேட்டுத் தெரிந்துகொண்ட விவரம் இன்னமும் ஆயனருக்குத் தெரியாது. எனவே, அவர் சிவகாமியைப் பார்த்து, "அம்மா! உனக்கு என்ன பிரியம்? காஞ்சிக்குப் போகலாமா? அல்லது அஜந்தாவுக்குப் போகலாமா?" என்றார்.

சிவகாமியின் உள்ளம் அந்த நிமிஷத்தில் வயிரத்தை விடக் கடினமாயிருந்தது. "அப்பா! நான் காஞ்சிக்குப் போகவில்லை! அஜந்தாவுக்கும் போகவில்லை. பல்லவ குமாரரை என் பேரில் கருணை கூர்ந்து அவர் கையிலுள்ள வாளை என் மார்பிலே பாய்ச்சி என்னை யமபுரிக்கு அனுப்பிவிடச் சொல்லுங்கள். பழைய அபிமானத்துக்காக எனக்கு இந்த உதவி செய்யச் சொல்லுங்கள்!" என்றாள்.

இவ்விதம் சொல்லிவிட்டு ஆயனரின் மடியின் மீது சிவகாமி மறுபடியும் ஸ்மரணையிழந்து வீழ்ந்தாள்.

மாமல்லர் திரும்பிச் சென்று பரஞ்சோதியின் பக்கத்தை அடைந்தார். சிவகாமியின் மீது அத்தகைய குரூரமான சொல்லம்புகளைச் செலுத்திய பிறகு அவருடைய மனம் சிறிது அமைதி அடைந்திருந்தது. "நண்பரே, அதோ புலிகேசியின் பொய்யான ஜயஸ்தம்பத்தைப் பார்த்தீரல்லவா? ஒன்பது வருஷத்துக்கு முன்பு ஒருநாள் நாம் அந்த ஸ்தம்பத்தின் அடியில் நின்று, செய்துகொண்ட சங்கல்பத்தை இன்று நிறைவேற்றிவிட்டோம். அந்தப் பொய்த் தூணை உடனே தகர்த்தெறிந்துவிட்டுப் பல்லவ சைனியத்தின் ஜயஸ்தம்பத்தை நாட்டச் செய்யுங்கள். புதிய ஜயஸ்தம்பத்திலே பல்லவ சேனையின் வெற்றிக் கொடி வானளாவப் பறக்கட்டும்! மகத்தான இந்த வெற்றிக்கு அறிகுறியாக நமது கொடியிலும் விருதுகளிலும் உள்ள ரிஷபச் சின்னத்தை மாற்றிச் சிம்மச் சித்திரத்தைப் பொறிக்கச் செய்யுங்கள்.

(தொடரும்)

விட்டல் புகழ் பாடும் விவசாயி!

டோலக், தபேலாவின் கும், குமுக்குகிற ஒலி அழகு... கூடவே ஜல் ஜல், என்று ஜால்ரா சப்தம். இவர் பாடும்போது, மக்கள் கட்டுண்டது போல் அமைதியாக இருக்கிறார்கள்.



• கச்சேரியில் ...

கை கூப்பித் தொழுகிறார்கள்: உருகிப் போகிறார்கள்_ பார்வையாளர்கள் என்றால் ஏதோ நூறு - இருநூறு பேர் அல்ல... மயிலாப்பூரானாலும் சரி, மாம்பலமானாலும் சரி, அரங்கம் நிரம்பி வழிந்தோடுகிறது. நின்று கொண்டே கேட்கவும் பலர் தயாராய் இருக்கிறார்கள்! கோயில் மணி போன்ற குரலிருந்தால் மக்கள் கேட்க ஓடி வர மாட்டார்களா? பாடகரும் பார்க்க கம்பீரமாக இருக்கிறார்.

மஞ்சள் துணியால் இறுகக் கட்டிய தலைப் பாகை. துளிர் விட்டிருக்கும் தாடி. தடித்த மீசை. நெற்றியில் மெலிதான சந்தனக்கீற்று. ஆனால் துக்காராம் கணபதி மகராஜின் தோற்றத்துக்காகவோ, குரல் வளத்துக்காகவோ கூட்டம் வருவதில்லை. மராட்டிய அபங் பாடல்களிடையே அவர் சொல்லும் விட்டல புராணங்களின் வசீகரம், மக்கள் வெள்ளத்தைத் திரளச் செய்கிறது. மிரட்டும் நிபந்தனைகள் கிடையாது, கைக்கு எட்டாத வேதாந்தம் கிடையாது... பாண்டுரங்க விட்டலனை நாமதேவ், துக்காராம் போன்ற மகான்கள் எவ்வாறு அன்பின் வடிவமாகக் கண்டார்கள் என்பதை, சிறு சிறு விவரணைகளாகச் சொல்கிறார் துக்காராம் கணபதி மகராஜ். மராட்டிய மணம் வீசும், சற்றே அன்னிய தமிழ் உச்சரிப்புதான்... ஆனால் மொழியின் எளிமையும், உள்ளத்தின் பக்தியும், ஸ்படிகம் போல் கூட்டத்தின் கடைசி வரிசை வரை பிரகாசமாகப் பரவி, அவ்வளவு பேரையும் விட்டலதாசர்களாக்கி விடுகிறது.


துக்காராம் கணபதி மகராஜ் என்றால் ஏதோ ஷோலாபூர் அல்லது பண்டர்பூர்கார்காரர் என்று நினைக்கத் தோன்றும். மகராஜுக்குக் கடையநல்லூர். (நெல்லை மாவட்டம்). சென்னைக்கு வந்திருப்பவரைச் சந்தித்து, அவர் நிகழ்ச்சிக்குத் திரளான கூட்டம் வருவது பற்றிக் குறிப்பிடுகிறோம்.

"நான் ஒன்றும் பெரிதாகச் செய்துவிடவில்லையே" என்கிறார் சிரித்தபடி. தெற்கத்திய பஜனை சம்பிரதாயப்படி பாடுகிறேன். மருதாநல்லூர் சத்குரு ஸ்வாமிகள், ஸ்ரீதர ஐயாவாள், போதேந்திராள் போன்ற மகான்கள் ஏற்படுத்திக் கொடுத்த வழக்கப்படி பாடி வருகிறேன். சத்குரு ஸ்வாமிகள்

பாதசாரியாகவே பாரத தேசம் முழுதும் போய், ஒரு சம்பிரதாயத்தை உருவாக்கினார். முக்கியமாக நம் தேசத்தின் மொழிகளை தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி, சம்ஸ்கிருதம் எல்லாம் கற்று, தமது இசையால் எல்லோரையும் ஈர்த்தார்.

"மராத்தியில் நாமதேவர், துக்காராம், ஞானேசுவர் போன்ற ஞானிகள் எழுதிய 'அபங்' பாடல்கள் ஏராளம். அவற்றைப் பாடி அர்த்தம் சொன்னாலே போதும் என்று நினைத்தேன். அந்தக் கீர்த்தனைகளில் உள்ள பாவம், பாடும்போது தானாக வருகிறது. அப்படி வருகிறபோது, அந்தப் பாட்டுக்கு என்ன அர்த்தம் என்று ஆராயத் தோன்றியது. பண்டரிபுரத்துக்கு அடிக்கடி போகிற சாதுக்கள் மூலமாக, சாகித்தியங்களைத் தெரிந்து கொண்டேன். இதை 'வாரகரி சம்பிரதாயம்' என்பார்கள். வாரகரி என்றால் திரும்பத் திரும்பச் செய்தல் என்று அர்த்தம். மறுபடி மறுபடி பாண்டுரங்க விட்டலைத் தரிசனம் செய்யும் மகான்கள் எழுதிய பாடல்கள் இவை. வாரகரி முறையில், அர்த்தம் சொல்லித்தான் பாடணும். என் குரு, கிருஷ்ண பிரேமி சுவாமிகள்தான் எனக்குத் தூண்டுகோலாக இருக்கிறார். அவரிடம் தான் பாடுவதற்குப் பயிற்சி எடுத்துக் கொண்டேன்'' என்கிறார் துக்காராம் கணபதி மகராஜ்.





• துக்காராம் கணபதி மகராஜ்

"பஜனைக்கு வருவது பொழுது போக்க அல்ல என்று உணர்ந்திருக்கிறார்கள். அதனால்தான் கூட்டம் வருகிறது. எங்கள் ஊரிலேயே நாற்பது பேருக்குச் சொல்லிக் கொடுத்து பயிற்சி அளித்திருக்கிறேன். என்னுடன் பாடுகிறவர்கள், பக்க வாத்தியம் வாசிப்பவர்கள் எல்லாரும் என் ஊர்க்காரர்கள்தாம். ஊரில் தினசரி அவரவர் வீட்டிலேயே மாலை ஒரு மணி நேரம் பஜனை நடக்கும்!"

"மராத்திய சந்நியாசி போல் ஏன் இந்தத் தலைப்பாகை?"

"குருவிடம் தீட்சை எடுத்துக் கொண்டபோது, தலைப்பாகை, ஜபமாலை எல்லாம் பெற்றுக் கொண்டேன். பிரவசனம் (சொற்பொழிவு) பண்ணுவதற்கு அதிகாரம் வழங்குகிற அடையாளங்கள், இந்தச் சின்னங்கள்."

அபங் பாடல்களை விளக்கிச் சொல்லிப் பரப்பவும், மகாராஷ்டிர மகான்களைப் பற்றி மக்களிடையே பேசவும், 'விட்டல் விஹார்' என்று கடையநல்லூரில் ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறார் துக்காராம் கணபதி. கொச்சியில் உள்ள வெங்கடேஷ் நாயக்,

விட்டோபா நாயக் என்பவர்களுடைய வழி காட்டல் கிடைத்து, மராத்தி மொழியையும் கற்றிருக்கிறார்.


'மராத்தியரைவிடச் சுத்தமாக மராத்தியில் அபங் பாடுகிறார்' என்று டைம்ஸ் அஃப் இந்தியா பத்திரிகை உட்பட, பல பத்திரிகைகள் இவரைப் பாராட்டியிருக்கின்றன! பூனா பல்கலைக் கழகத்தில் இவரை வரவழைத்து, இவர் பாட்டில் உச்சரிப்பு சரியாக இருக்கிறதா என்று உன்னிப்பாகக் கவனித்து, சான்றிதழ் கொடுத்துப் பாராட்டி இருக்கிறார்கள். சென்ற நவம்பரில் யு.கே., யு.எஸ். எல்லாம் போய் வர, பூனா யூனிவர்சிடிதான் காரணமாம். துபாய், மஸ்கட், ஷார்ஜா என்று பல இடங்களில் பாடி மகிழ்வித்திருக்கிறார். அமெரிக்காவில் ஏழு மராத்தி மண்டலிகளில் இவ

ரிசல்ட் பற்றிக் கவலைப்படாமல், டிகிரி சர்ட்டிபிகேட்டைக்கூட வாங்காமலே இருந்து விட்டவர்.

விவசாயம்தான் முக்கியத் தொழில். நேரம் கிடைக்கும்போது, தகப்பனாரின் ரைஸ்மில்லைப் பார்த்துக் கொள்கிறார்.

"பிரசாரம் செய்துதான் வாழ்ந்து வருகிறேன். மகாராஷ்டிர சாதுக்களின் மகிமையை எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதே என் குறிக்கோள். இதற்கும் குருவின் கருணைதான் காரணம். அவர் ஆணையிட்டால்தான் வழிகள் திறக்கும். நம் சாமர்த்தியத்தில் ஒன்றும் இல்லை!" என்கிறார் தீவிர நம்பிக்கையுடன்.

நாற்பத்தேழு வயது ஆகிறது இவருக்கு. ஒரே மகன் ரகுநாததாஸ். பதினெட்டு வயது. மகள் ஜானாபாய். பத்து வயது. "அவள் சம்ஸ்கிருதத்தில் பேசுவாள்!" என்கிறார்.



"இந்த வருஷம், அந்தப் பாகவதர் சபாக்களில் எப்படி சான்ஸ் வாங்கினாராம்?"

"வழக்கம் போல, ஆரோஹணத்தில் அழுதுதான்!"

- யமுனா ரெங்கநாதன்

ரைப் பாடச் சொல்லி கௌரவித்திருக்கிறார்கள். வருகிற ஏப்ரலில் மறுபடி யு.எஸ். பயணம்!

"வெளி விஷயங்கள் எதுவும் பேசக் கூடாது. துக்காராமோ, ஞானேசுவரோ சொன்னதைத்தான் செய்தியாக நான் சொல்லுகிறேன். அநாவசியம் பேசினால், பிரவசனத்தின் மதிப்பே குறைந்து விடும்!" என்கிறார் துக்காராம் கணபதி.

'துக்காராம்' என்பது குருநாதர் கொடுத்த பட்டமாம். திருநெல்வேலி ஹிந்து கல்லூரியில் பி.ஏ படித்து விட்டு, ஜாதி வித்தியாசம் பார்க்காமல், எல்லாக் குழந்தைகளுக்கும் சம்ஸ்கிருதம் சொல்லிக் கொடுக்கிறார்.

"வெண்ணெய் போல் திரட்டி மனத்தைத் தூய்மையாக விட்டலனிடம் ஒப்படைத்து விடுங்கள்... அப்புறம் நீங்கள் எப்படிப் பாடினால் என்ன.... யாருக்குப் பிடித்தால் என்ன... பிடிக்காவிட்டால் என்ன... அந்த விட்டலன் - கிருஷ்ணன் - அதைக் கேட்டு 'களுக்'கென்று சிரிப்பான்... அது போதுமே..."

- மேடையில் பிரசங்கம் செய்துவிட்டு துக்காராம் கணபதி "விட்டல விட்டல விட்டல" என்று பாடுகையில், அவர் பின்னால் இடுப்பில் கை வைத்துக் கொண்டு நிற்கும் விட்டலனும் ரகுமாயித் தாயாரும் 'களுக்'கென்று சிரிப்பதாகவே நாம் உணர்கிறோம்.

பேட்டி: சித்தார்த்

படங்கள்: வெங்கடேஷ்



இருநூற்றில் ஒருவரா நீங்கள்?



அழகான, அளவான,
ஈகிள் டைரி ஒன்று
இலவசமாகப் பெற வேண்டுமா?

இன்றே உங்கள் கல்கி சந்தாவை ஓராண்டுக் காலத்துக்குப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்;

அல்லது

உங்கள் நண்பருக்காக, உறவினருக்காக ஓராண்டுச் சந்தா செலுத்தி, டைரியை நீங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்;

அல்லது

ஓராண்டுக் கல்கியுடன் டைரியையும் உங்கள் அபிமான நண்பருக்கோ, உறவினருக்கோ கிடைக்கச் செய்யுங்கள்.

ஓராண்டுச் சந்தா ரூ.330/- செலுத்தும் முதல் இருநூறு பேருக்கு மட்டுமே, **ஈகிள் டைரி** இலவசம்!

முந்துங்கள்! உடனடியாக...!

கடைசித் தேதி : **10.01.2004**

இந்த அறிவிப்புக்குப் பிறகு அனுப்பப்படும் ஓராண்டுச் சந்தாக்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை. உங்கள் முழு விலாசம்; நண்பர், உறவினரின் விலாசம்; புதுப்பிப்பதாக இருந்தால் தற்போதைய சந்தா எண் முதலியன குறிப்பிட மறவாதீர்கள்.

சந்தாத் தொகையை டி.டி., எம்.ஓ., செக் மூலமாக அனுப்பலாம்.
(வெளியூர் செக் ஏற்கப்படமாட்டாது)

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர்,
கல்கி,
கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097

ஸ்ருதி சேர்ந்து போச்சு டோய்!

• வெட்கப்படுதுக தாயீ...!



இருபதில் பிரபலமானவர் இசைப் பேரொளி நித்யஸ்ரீ மகாதேவன். இந்த கம்பீரத்வனியை அறுபதில் பிஸியாகி அசத்தும் கிராமத்து கணீர், பரவை முனியம்மா சந்தித்தால் எப்படி இருக்கும்?



கோடம்பாக்கத்தை ஒட்டிய ரங்கராஜபுரத்தில் அழைப்பு மணி இல்லாத வாடகை வீடு. கதவு திறந்தே இருக்க, "பரவை முனியம்மா மேடம் இருக்காங்களா?" என்று பவ்யமாகக் குரல் கொடுத்தோம்.

"அட! யாரப்பா அது? 'மேடம் கீடம்'னு கூப்புடுறீக?"

உள்ளேயிருந்து தனது பிராண்டெட் செப்புக் குரலோடு வெளிப்பட்டார், பரவை முனியம்மா.

மஞ்சள் தேய்த்துக் குளித்த பளீர் முகத்தில், நெற்றி நிறையக் குங்குமம், கர்ப்பக் கிரகத்திலிருந்து கிராமத்து 'ஆத்தா' எழுந்து நடந்து வருவது போலிருக்கிறது...

"விக்ரம், விவேக் என்று பெரிய நடிகர்களோடு கைகோத்து நடிக்கறீங்க! நீங்க பாடினாத்தான் விக்ரமுக்கே வீரம் வருது! அப்படி இருக்கும்போது உங்களை மேடம்னு கூப்பிட்டாத்தானே மரியாதை" என்று வலதுகையின் நான்கு விரல்களை வாயில் பொத்தி, பவ்யத்தின் பர்சென்டேஜை மேலும் அதிகரித்தோம்.

"அட போப்பு! அதெல்லாம் சினிமா கதைக! நீ ஆத்தான்னு கூப்புடு! இல்லே அப்பத்தான்னு சொல்லு! அதுவும் சரிப்படலேனா கெடக்குது கழுதைன்னு வாய் நெறைய அம்மான்னு சொல்லு" என்றதும், "நீங்க நித்யஸ்ரீயை பார்க்கணும்" என்று 'பிட்'டைப் போட்டோம்.

"ராசா! சாயங்காலம் ஆறு மணிக்குச் 'சாதகப் பறவை' கச்சேரி இருக்கு! கைநீட்டிகாசு வாங்கிட்டேன். அஞ்சு மணிக்குள்ளே என்னைய இங்கென கொண்டாந்து வுட்டுரு" என்ற நிபந்தனையோடு, கம்பீரமாக நடந்து வந்து காரில் ஏறினார்.

கோட்டூர்புரத்துக்கு அழைத்துப்

போனோம். வழியில் வாய் திறந்த பரவை, "ஆமாப்பு! யாரைப் பாக்கப் போறோம்ன்னு சொன்னே?" என்று கேட்க, "நம்ம நித்யஸ்ரீ மகாதேவன். கர்நாடக சங்கீதத்துலே கொடி கட்டிப் பறக்கறாங்களே...! அவங்க குரலெடுத்துப் பாடினா, பலநாள் அடைஞ்சு கிடந்த காதுங்க பட்டுன்னு தொறந்துக்கும்" என்று விவரித்தோம்.

"என்ன மாதிரின்னு சொல்லு!" என்றவரிடம் 'நீங்க கிராமத்து சங்கீதம்ன்னா அவங்க நகரத்து சங்கீதம்! 'கண்ணோடு காண்பதெல்லாம்...'ல ஆம்பிச்சு சினிமாப் பாட்டுக்கூட நிறைய பாடி இருக்காங்க என்றதுதான் தாமதம்.

"என்னப்பு இத மொதல்லியே சொல்றதில்லியா? ஊரெல்லாம் கேட்டுச்சே அந்தப் பாட்டு! ஆத்தி? அந்தப் புள்ளையவா பார்க்கப் போறோம்!" என்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

பிற்பகல் மூன்று மணிக்கு நித்யஸ்ரீயின் முன்பு போய் நின்றதும், "அடடே, நீங்க பரவை முனியம்மால்ல. உள்ளே வாங்க" என்று வரவேற்க, நித்யஸ்ரீயின் வீட்டில், அவரது அப்பா, அம்மா, அக்கா, பெரியம்மா என்று எல்லோரும் ஆர்வமாய்க் கூடி விட்டார்கள்.

ஃப்ரூட் சாலட், பில்டர் காஃபி என்று உபசரிப்புகள் தூள் பறக்க, எல்லோரும் பரவையோடு ஒன்றிவிட்டார்கள். வேடிக்கை பார்த்தபடி வரவேற்பறையின் ஓர் ஓரத்தில் ஒண்டிக் கொண்டு, பாடும் பறவை, பரவை முனியம்மா உரையாடலைக் கவனித்தோம்.

ஆச்சர்யம்! வாடிக்கையான உரையாடல் அல்ல அது. முதலில் நித்யஸ்ரீதான் ஆரம்பித்தார்.

'நீங்க சன் டீ.வி ஸ்டார் சமையல் நிகழ்ச்சியிலேயே கலந்து கொண்டு, முடக்கத்தான் ரசம் வைக்கச் சொல்லிக் கொடுத்தீங்களா?

"ஆமா தாயி! நீங்களும் செஞ்சு சாப்பிட்டீங்களா?"

"என்னோட பெரிம்மா சமைச்சுக் கொடுத்தாங்க. ரொம்பப் பிரமாதமா இருந்தது!"

"பெரண்டை கொடி ரசம், பெருமருந்துக் கொடி ரசம்ன்னு ஏகப்பட்ட ரகமிருக்குத் தாயி."

"இந்த மாதிரி மூலிகை ரசமா சாப்பிட்டுத்தான் இப்படிக் கணீர் குரல்லே பாடுறீங்களா?

"நமக்குப் பழைய கஞ்சி இருந்தா போதும்மா! என்ன ஒண்ணு, ஊருக்கு ஊரு தண்ணியை மாத்திக் குடிச்சா ஒத்துக்க மாட்டேங்குது. அதனாலே பாட்டில் தண்ணிதான் குடிக்கிறேன்."

"நீங்க எப்போ பாட்டுக் கத்துக்க ஆரம்



• ரசத்துல ஏகப்பட்ட ரகமிருக்கு..!



ரெடியாயாச்சா?

பிச்சிங்க? உங்க குரு யாரு?"

"நமக்கு ஏது குரு! வீட்டுலே, நாட்டுலே, வயல்லே, வரப்புலே, பொறப்புலே, இறப்புலே, மொளைப்பாரி சுமக்கையிலே, கோலடிச்சு, கும்மியடிச்சு மக்கள் பாடுற தெம்மாங்குப் பாட்டுக தான் குரு. சின்ன வயசிலேர்ந்து கேட்டுக் கேட்டு, நானே பாட ஆரம்பிச்சேன். அப்படியே தொண்டை அகண்டுப் போச்சு. பாட்டுத்தான் பொளப்புன்னு ஆயிப் போச்சு! உன்னை மாதிரி எனக்குச் சங்கீதம் தெரியாதும்மா."

"அதனாலென்ன? எல்லாம் இசை, பாட்டுதானே! எங்கேயோ பிறந்து, வளர்ந்த நம்ம இரண்டு பேரும் சந்திக்கிறது இந்த இசையாலதானே."

"அம்மியிலே இஞ்சிக்கீத்தை நறுக்குன்னு வெச்சு அரைச்ச மாதிரி சொன்ன தாயி! நீ யாருகிட்டே பாட்டு கத்துகிட்டே! இங்கே இருக்கிற படத்தையெல்லாம் பாத்தா, தாத்தா பாட்டியெல்லாம் பாட்டுக் குடும்பம்ன்னு தெரியுது."

"ஆமா! டி.கே. பட்டம்மாள் என்னோட பாட்டி, பாலக்காடு மணி அய்யர் தாத்தா."

"அடடே! உங்க பாட்டி பேரை ரொம்ப கேள்விப் பட்டிருக்கேன்."

"'ஆடுவோமே; பள்ளு பாடுவோமே'ன்னு பாரதியார் பாடல் கேட்டிருக்கீங்களா? பாட்டி பாடினது தான்!"

"என்னம்மா இப்பிடிக் கேட்டுட்டே... பள்ளிக்கூடத்துல பாடியே இருக்கேனே" என்றபடி பரவை பல்லவியைப் பாடிக் காட்ட, அங்கேயிருந்த அத்தனை பேரும் கைதட்டிப் பாராட்டுகிறார்கள். நித்யஸ்ரீ தொடர்கிறார்.

"'வள்ளிக் கணவன் பேரை வழிப் போக்கர் சொன்னாலும்'னு கிராமத்து கிளிக்கண்ணி, காவடிச் சிந்தெல்லாம் பாடி இருக்காங்க பாட்டி. பொது இடத்துலே பெண்கள் பாடக் கூடாதுன்னு இருந்த கால கட்டத்துல அப்பா, அம்மா கொடுத்த தைரியத்துலே பாடி, பேர் வாங்கினவங்க. நீங்க எப்போ மேடையிலே பாட ஆரம்பிச்சீங்க?"

"கல்யாணத்துக்கு அப்புறம்தான் பாட ஆரம்பிச்சேன். பரவை முனியம்மா குழுன்னு தொடங்கினோம். கிராமத்து வாத்தியம் எல்லாம் இருக்கும். டெல்லி வரைக்கும் போயி பாடி இருக்கேன். கடல் கடந்து, சிங்கப்பூர், துபாய்ன்னு கூட்டிகிட்டுப் போயிருக்காக."

"எல்லோரும் உங்களை விரும்பி பாடச் சொல்ற பாட்டு எது?"

"நாடு சும்மா கெடந்தாலும் கெடக்கும் நாகரிகம் ஓடிவந்து கெடுக்கும்!'னு ரொம்ப பிரபலமான பாட்டு! ஒன்னைய எந்த ராகம் பாடச் சொல்லுவாக தாயி?"

"ராகத்தில் சிறந்த ராகம் எது?'ன்னு ஆரம்பிக்கிற பாட்டு எல்லோருக்கும் பிடிக்கும். கல்யாணியிலே ஆரம்பிச்சு, மத்தியமாவதியிலே முடியும். ஒவ்வொரு வரியும் ஒரு ராகம்."

"நீ சொல்றதைப் பார்த்தா, தமிழ்ல பாடுவேன்னு சொல்ற மாதிரி இருக்கே. கர்நாடக சங்கீதக்காரங்க புரியாத பாஷையிலே பாடுவாங்கன்னுதான் கேள்விப்பட்டிருக்கேன். ஆமா ஏன் தாயி தமிழ்ல பாட மாட்டேங்கிறீங்க?"

"அப்படியெல்லாம் இல்லியே. கர்நாடக சங்கீதப் பாடல்கள் இப்போ தமிழ்லயும் பாடுறோம். நான் நிறையப் பாடுறேன். ஒரு நாள் நீங்க என்னோட கச்சேரிக்கு வரணும்!"

“கட்டாயம் வர்றேன்! நீ நல்ல குரலெடுத்துப் பாடுற பொண்ணு; ஒங் கச்சேரியக் கேட்காமலியா? ஆமா தாயி, எத்தனை கட்டைக்குப் பாடுவே?”

“ஆறு கட்டைக்கு மேல் பாடுவேன். நீங்க?”

“எனக்கு மூணரை கட்டைக்குக் கீழே பாட வராது.”

“கேட்க மறந்துட்டேன்! உங்க பேருக்கு முன்னாடி இருக்கிறது உங்க ஊர் பேர் தானே?”

“ஆமா தாயி! மதுரையிலேர்ந்து பத்து கிலோ மீட்டர்லே இருக்கு! யாருக்குமே தெரியாத ஊரு. என்னால பிரபலமாகிப் போச்சுன்னு எனக்குப் பாராட்டு விழா எடுத்தாங்க. பல பாராட்டு, விருது கெடைச்சிருந்தாலும், ஊர்க்காரங்க பாராட்டுல பாவிமக அழுதுபுட்டேன். அப்படியொரு சந்தோஷம்.”

“சினிமாலே பாடினது உங்களுக்கு ரொம்ப உதவியா இருந்துச்சா?”

“நெஜந்தான்! ‘தூள்’ படத்துக்குப் பொறவு சினிமா நடிப்பு, கச்சேரின்னு ஓய்வே இல்லே. சினிமாவுலே, புருஷன், பொஞ்சாதியா நடிக்க மாட்டேன்னு சொல்லிட்டேன். இதுவரைக்கும் பதினாலு படத்துலே நடிச்சு முடிச்சிட்டேன்.”

“நீங்க கச்சேரின்னு கிளம்பிட்டா யாரு வீட்டைப் பார்த்துப்பா?”

“இப்போ மருமக இருக்கா. அதுக்கு முன்னாலே வீட்டுக்காரர், புள்ளைகளுக்குச் சமைச்சுப் போட்டு, கண்ணும் கருத்துமா பார்த்துக்குவார்.”

“உங்களுக்கு அப்புறம், உங்க தெம்மாங்குப் பாடல்களை யாருக்காவது கத்துக் கொடுத்திருக்கீங்களா?”

“எல்லாம் வெட்கப்படுதுக! சினிமாப் பாட்டுதான் பாடிக்கிட்டு திரியுதுக. என்னத்தை பண்ணச் சொல்றீக” - வருத்தம் தோய்ந்த குரலில் சொன்ன பரவை முனியம்மாவிடம்,

“எனக்காக குங்குமம் சீரியலுக்கு நீங்க பாடின அந்தப் பாட்டை பாடுங்களேன்” என்று நித்யஸ்ரீ சொல்ல, தமது கைகளை ஸ்டைலாக வெட்டியபடி, “குங்குமம், நெத்திக் குங்குமம், ஏ...ஏழு சரம் சங்கிலி, எட்டுக்கல்லு மோதிரம், பெட்டி நகையப் போட்டாலும் பொம்பளைக்குப் பிடிச்சது குங்குமம்... நெத்திக் குங்குமம்” என்று பாடி முடிக்க, நித்யஸ்ரீயின் வீடே கரவொலி எழுப்பிப் பாராட்டியது.

விடை பெறும்போது நித்யஸ்ரீ, வெள்ளிக் குங்குமச்சிமிழ் நிறைய குங்குமத்தோடு, வெற்றிலை, மஞ்சள் என்று பொருத்தமாக நினைவுப் பரிசு தர, நெகிழ்ந்த பரவை, நித்யஸ்ரீக்கு குங்குமத் திலகமிட்டுக் கிளம்புகிறார். ‘ஸ்ருதி சேர்ந்து போச்சுடோய்’ என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு, அவரது வேகவேகமான நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் பின்னாலேயே ஓடிப் போய் நாமும் ஏறிக் கொள்ள, “மதுரை வீரன் தானே... எம் பேராண்டி மதுரை வீரன் தானே” என்று நம்மைப் பார்த்துப் பாட, நமக்கும் உற்சாகம் தொற்றிக் கொண்டது.

- ஆர்.சி. ஜெயந்தன்

அட்டை, படங்கள்: ஸ்ரீஹரி



டீசல் புகை வாசத்துடன் தடதடக்கும் மோட்டார் சப்தம். சென்னை நகரின் ஜகத் பிரசித்த இசை விழாக் கச்சேரிகளைத் தோற்கடிக்கும் மதுர சங்கீதமாகிவிட்டது இந்த ஓசை – தெருவில் சின்டெக்ஸ் தொட்டிகளை நிரப்பும் தண்ணீர் லாரியின் உறுமல்! அது கேளாத நாட்களில் வாழ்வின் சுருதி கலைந்து ஏறுமாறாகி விடுகிறது.

பவானி தம்பூராவைக் கீழே வைத்தாள். அகார சாதகத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு இழுத்த மூச்சில், டீசல் நெடி நுரையீரலை நிரப்பி, தொண்டையைக் கமறச் செய்தது.

செய்தித்தாளில் மூழ்கியிருந்த சிவராமனிடம், "குழந்தையைப் பார்த்துக்குங்க" என்று குரல் கொடுத்துவிட்டு, பிளாஸ்டிக் குடங்களை விரல்களில் இடுக்கிக் கொண்டு படியிறங்க...

"தண்ணியைப் பிடிச்சு அங்கயே வைச்சுடு... நான் வந்து தூக்கிண்டு வரேன்..."

– ஆணையாகப் பின்தொடர்ந்தது அவன் குரல்.

சிறிய ஆசீர்வாதங்கள். 'வான்' பொய்ப்பினும் 'கொழுனன்' கை கொடுக்கிறான். எனினும் தண்ணீருக்கான நேர ஒதுக்கீடு, ஆளை வீழ்த்துகிறது.

'காலை நேரங்களைத் தண்ணீர் வேட்டையில் செலவிட்டுச் சோர்வுறுவதாலும், வீட்டில் வளைய வரும் ஒன்றரை வயதுக் குறும்பு மூட்டை உபரியாய் கவனம் கோருவதாலும், இன்றைய கச்சேரிக்கு முழுமையாய்த் தயார் செய்ய இயலவில்லை... ஆகவே ஒரு நாள் விருப்ப விடுப்பு அளிக்க வேண்டுகிறேன்...'

– கலைத் துறையில் காஷுவல் லீவ் எடுக்க முடியாது! தண்ணீர் என்ன... கண்ணீரே பிரச்னையானாலும் ஒப்புக் கொண்ட கச்சேரி பாடித்தான் ஆக வேண்டும். இப்போது தான் ஓரிரு சபாக்கள் மாலை நிகழ்ச்சிக்கு 'புரமோஷன்'

மழை



சீதா ரவி

அளித்துள்ளன. அனுசரணையான பக்க வாத்தியக் கலைஞர்களைத் தேர்வு செய்து கொள்ளும் வாய்ப்பு கூட அவ்வப்போது கிடைக்கிறது. இந்த நேரத்தில் அசந்தால், பிடித்த இடம் காலடியில் நழுவிப் போய் விடும்... திறமையை மட்டும் நம்பி முன்னேறும் கொள்கையும் கடமையுணர்வும் கவச குண்டலம்போல் கூடவே பிறந்து விட்டன. எனினும் உடல் சோர்ந்து போகும்போது மனமும் களைத்துப் போவதைத் தவிர்க்க முடியவில்லை...

யானைக்குட்டி உயரத்தில் சின்டெக்ஸ் தொட்டி. அதனருகே ஏற்கெனவே வரிசை கட்டியிருந்தது வீதி. மேலும் சிலர் ஓட்டமும் நடையுமாகக் குடங்களையும் வாளிகளையும் தூக்கி வந்து கொண்டிருந்தனர்.

மடித்துக் கட்டிய லுங்கி, முண்டா பனியன் சகிதம், பல் துலக்கியபடி நின்றிருந்தார் தேவனாதபுரம் நான்காவது தெருவின் தண்ணீர் வினியோக மேற்பார்வையாளர். கூட்டம் சேரச் சேர, மனங்களில் மூண்ட பரபரப்பு, சரளமான வசை மொழியாக வெளிப்பட்டது. நெருங்கி வாழும் நண்பர்கள் ஒருவரையொருவர் ஏசிக் கொண்டார்கள் – எல்லாம் ஒரு குடம் தண்ணீருக்காக.

வருண பகவான் வரைந்த குரூர கேலிச் சித்திரம்! சோர்ந்து நின்றாள் பவானி.

''என்ன, இன்னும் தண்ணி பிடிக்கலையா...?'' - சிவராமன்தான்.



"இந்தச் சண்டையிலே எப்படிப் புகுந்து புறப்படறது?"

"நீ போ, நான் பார்த்துக்கறேன்..."

நன்றியோடு அவனைப் பார்த்து விட்டு நகர்ந்தாள். தெருவை நிறைத்து விரவிக் கிடந்த வெற்றுக் குடங்களின் சுமை மனத்தை அழுத்தியது.

திரும்பிச் சென்று தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டால், கற்பனை களும் வறண்டுபோய் முரண்டு பிடிக் கும். வீதியில் கண்ட கசப்பும் அழுத் தமும் அகன்று, தன்னை மீட்டெடுக்க படாத பாடு படவேண்டும்.

கலைஞர்கள் விசை தட்டிவிட்டது போல் இயங்க முடியாது - யாருக்கும் இது புரிவதில்லை. சமயத்தில் சிவரா மனுக்குக் கூட விளங்குவதில்லை.

"வீடு அழுக்காயிருந்தா என்ன... நாளைக்குப் பார்த்துக்கலாம்... நீ ஏன் பாடறதை நிறுத்திட்டு எழுந்து வரே...?"

கலைஞனின் அழகுணர்ச்சி, வாழ்வின் ரம்மியத்திலிருந்து உதித்தெழுவதை எப்படி விளக் குவதாம்...? செருப்பைக் கழற்றிக் கழற்றி மாட்டுகிற மாதிரி, அதை அணிந்து அணிந்து களைவது சாத்தியமில்லை. அனைத்து இயக்கங்களிலும் அமைதி, நிதானம், துல்லியம் வேண்டியிருக்கிறது.

மழையற்றுப் போன மாநகரத்தில் அன்றாட வாழ்வு தண்ணீர்க் குடங்களை வலம் வரும்போது, அழகுணர்ச்சி அடியில் தங்கி நிற்கும் வண்டல் நீராகிவிடுகிறது.

பவானி வீட்டினுள் நுழையவும் போன் அடித்தது.

"நான் கிதா பேசறேன்..."

– கர்நாடக இசைக் கலைஞர்கள் சங் கத்தின் செயலாளர்.

"சௌக்கியமா...?"

"உன்னை மாதிரி ஒரு இணைச் செய லாளர் இருக்கறச்சே என் சௌக்கியத்துக்கு என்ன குறைச்சல்?..."

"சொல்லுங்க... என்ன பண்ணணும்...?"

"மழைக்காகப் பிரார்த்தனை..."

"அதான் தினமும் பண்றோமே..."

"இல்லை பவானி, புழலேரியில போய்ப் பாடப் போறோம்... எல்லாரும். தேவாரம், திருப்பாவை, அப்புறம் கடைசியா ஆனந் தாம்ருதகர்ஷிணி... டேப் அனுப்பியிருக் கேன்... நீதான் நொடேஷன் எழுதி எல்லா ருக்கும் சர்குலேட் பண்ணணும். அடுத்த ஞாயிற்றுக்கிழமை, விடியற்காலம் ஆறு மணிக்கு, எங்க வீட்டிலேயிருந்து பஸ் கிளம்பும்... எல்லாரும் அங்க வந்துடணும். கவர்ன்மெண்ட் பெர்மிஷன் வாங்கியாச்சு.. மத்த ஏற்பாடெல்லாம் பண்ணியாச்சு எல்லாரும் பாட்டைப் பாடம் பண்ணி டணும்... நாளைக்கே கொரியர் பண்ணிடு..."

"சரி..."

நள்ளிரவு தாண்டியும் வேலை செய்ய வேண்டியிருந்தது. கிதா ஒலிப்பதிவு செய்து அனுப்பிய பாடல்களை ஸ்வரப்படுத்தி எழுதி வைத்துவிட்டுத் தூங்கினாள். காலை ஏழு மணிக்கு ஜெராக்ஸ் கடை, எட்டு மணிக்கு புரஃபஷனல் கொரியர்... திரும்பி வந்துதான் மற்ற வேலைகள்... அதற்கப்புறம் தான் தம்பூராவைத் தொட முடியும்....

எதிர்கொண்ட வேலைகள், தூக்கத்தை விரட்டி விட்டன. அதிகாலையில்தான் கண்ணயர்ந்தாள்... விழித்துப் பார்த்தபோது பக்கத்தில் ஸ்வேதாவைக் காணோம்... நீண்ட



"இவரோட 'குரு' தானுங்க எனக்கும் சங்கீத குரு!"

"அட! அந்த 'குரு' பண்ணின 'ரெண்டாவது தப்பு' நீங்கதானா!"

– கிரிஜா மணாளன்



"இது பாட்டுக் கச்சேரி மாதிரியே தெரியலையா... பின்னே?"

"நகைக் கச்சேரி?"

— இடைப்பாடி ஜெ. மாணிக்கவாசகம்

அறையின் மறு ஓரத்தில், இரவு அப்படியே வைத்து விட்டு வந்த தம்பூரா வரை நகர்ந்து போய், மெள்ள அதைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது குழந்தை!

"ஸ்வேதா...!"

குழந்தை திரும்பிப் பார்த்துச் சிரித்தது.

'வா', இங்க! அம்மாகிட்டே வந்துடு..."

திரும்பி ஒரு பார்வை பார்த்து விட்டு அவசரமாக முன்னேறி, நொடேஷன் எழுதிய காகிதங்களை அள்ளியது.. சின்ன விரல்களில் அகப்பட்டு நின்ற ஒற்றைத் தாளைப் புரட்டிப் பார்த்தது... பவானி அவசரமாக எழுந்து ஓடுவதற்குள் அந்தத் தாளில் அரிசிப்பல் பதித்தது. மெள்ள விடுவித்து எடுத்தாள் – 'ஆனந்தாம்ருத கர்ஷிணி'க்கு எழுதிய நொடேஷன்!

"கொஞ்சமாவது அறிவிருக்கா...?"

- செல்லமாகக் குழந்தையின் கன்னத்தில் தட்டினாள்.

"இது என்ன தெரியுமா...? மழை பெய்ய வைச்ச பாட்டு... முத்துஸ்வாமி தீக்ஷிதர் இதைப் பாடினப்போ மழை கொட்டித்து... 'சோ'ன்னு போதும் போதும்ங்கற அளவுக்குப் பெய்ஞ்சுது... நீ பிறந்தப்புறம் அந்த மாதிரி மழை பார்க்கல்லை..."

குழந்தை அவள் முகத்தைப் பார்த்தது...

"ஆ...னந்தா...ம்ருத...கர்ஷிணி... அம்ருத வர்ஷிணி..." மெள்ளப் பாடிக் காட்டினாள். குழந்தை அவள் கன்னத்தைத் தடவிக் கொடுத்தது.

"எல்லோரும் புழலேரியில் போய்ப் பாடப்போறோம்..."

ஸ்வேதா 'களுக்'கென்று சிரித்தது.

வண்ணப்பந்தலிட்டு, அதன் கீழ் விரிப்பு விரித்து, வரிசைக்கு வரிசை மினரல் வாட்டர் பாட்டில் வைத்து... ஏற்பாடுகள் முன்யோசனையுடன் செய்யப்பட்டிருந்தன. முதல் வரிசையில் ஒலிபெருக்கியின் முன் அமர்வதற்கு நடந்த 'நாகரிக'த் தள்ளு முள்ளு, குழாயடியை நினைவூட்டியது பவானிக்கு.

தொலைக்காட்சி காமெராக்கள் வந்திறங்கியதும், பெண்கள் சேலைகளைத் திருத்திக் கொண்டு, ஜரிகை முந்தானைகளை மடியில் இழுத்துவிட்டுக் கொண்டார்கள். ஆண்கள் சிப்பெடுத்து சிகை திருத்தினார்கள். முன் வரிசை முகங்களில் பூரிப்பு படர்ந்தது. பாட ஆரம்பித்ததும் அவரவர் மனோதர்மம் சிறகுகட்டி விரும்பிய திசையில் பறந்தது... தேவாரமும் திருப்பாவையும் 'மேக் அப்' போட்டுக் கொண்டன. ஆனந்தாம்ருதகர்ஷிணி திசை திசையாய் இழுக்கப்பட்டு, அடையாளம் தெரியாமல் மாறிப் போயிற்று.

'நாம் கஷ்டப்பட்டு எழுதிய ஸ்வரக்

குறிப்பை ஒருத்தர் கூடவா பார்த்திருக்க மாட்டார்கள்..?' பவானி நொந்து போனாள்; அமிர்தவர்ஷிணியிடம் மனசுக்குள் மன்னிப்புக் கேட்டாள். புழலேரியின் வெடிப்புகள் பெருமூச்செறிவதாகத் தோன்றியது. மழை, எங்கோ ஒளிந்து கொண்டு 'களுக்'கென்று சிரித்தது.

சோர்ந்து வீடு திரும்பியபோது, ஒரு மணி வகுப்புக்கான குழந்தைகள் வந்து காத்திருந்தனர்.

பவானியைக் கண்டதும் மொட்டு விரல்கள் குவிந்து வணங்கின.

"ஸாரி... காக்க வைச்சுட்டேனா?" என்றாள் பவானி.

"நீங்க சாப்பிட்டாச்சா மிஸ்...?"

பவானிக்கு நெகிழ்ச்சியாய் இருந்தது.

"இல்லை..."

"நீங்க சாப்பிட்டுட்டு வர வரைக்கும் நாங்களே பாடிப் பார்க்கறோம்..."

ஓரத்தில் சுருட்டி வைத்திருந்த பாயை ஷில்பா எடுத்து விரித்தாள்.

"க்கா...!" ஸ்வேதா ஸ்ருதிப் பெட்டியைத் தட்டிக் காண்பித்தது.

"ஹை! ஸ்வேதா நமக்கு ஸ்ருதிப் பெட்டியை எடுத்துக் கொடுக்கிறது..." – கணேஷ், பெட்டியைத் தூக்கி வந்து பாயில் வைக்க, ஸ்வேதா அவன் பின்னாலேயே தளர் நடை நடந்து வந்து தானும் உட்கார்ந்து கொண்டது.

பவானி சாப்பிட்டு முடிக்கும்வரை ஐந்து குழந்தைகளும் கீதம் பாடினார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தவறுகள் விழுந்தபோது, அவசரமாய்த் தலையாட்டித் தாங்களே சரிசெய்து கொண்டார்கள். ஸ்வேதா பக்கவாட்டில் உட்கார்ந்து உன்னிப்பாய்க் கவனித்தது...

எடுப்புச் சாப்பாடு. சாப்பிட்டு முடித்து குழந்தைகளிடம் வந்தாள் பவானி. ஸ்வேதா அவள் மடியில் ஏறிப் படுத்து ஒருக்களித்துக் கொண்டது.

"உங்களுக்கு இன்னிக்குப் புதுப் பாட்டு கத்துத் தரப்போறேன்..." பவானி, குழந்தைகளைப் பார்த்துச் சொன்னாள்...

"ம்..."

"ஆனந்தாம்ருதகர்ஷிணி...முத்துஸ்வாமி தீக்ஷிதர் இதைப் பாடினப்போ மழை கொட்டித்தாம்... நமக்கும் இப்போ மழை வேணுமில்லையா..? அதுக்காக பிரார்த்தனை."

சின்னத் தலைகள் ஆவலோடு ஆடின. கைகள் தாளம் போடத் தயாராய் தொடைமேல் பொருந்தி நின்றன. மையிட்ட கண்களும் மான் விழிகளும் எதிர்பார்ப்புப் பொங்க பவானியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தன.

"ஆ...னந்தாம்ருத... கர்ஷிணி..." - பவானி முதல் வரியைப் பாட, கொஞ்சமும் தயக்கமின்றித் திரும்பப் பாடினர் குழந்தைகள். அந்த கூட்டு முயற்சியின் துல்லியம் பவானியின் உள்ளத்தை நிறைத்து, மழலையாய் வெளிப்பட்ட ஸ்வரஸ்தானங்களின் குறைபாடுகளைச் சமன்செய்து கொண்டே போயிற்று.

"வருஷய வருஷய..." என்று இறுதியில் துரிதமாகப் பாடியபோது, அர்த்தம் முழுதும் புரியாவிட்டாலும் சாரலில் நனைந்தது போல் மகிழ்ந்தனர் குழந்தைகள்.

மழையின் குளிர்ச்சியோடு மண் வாசனை கிளம்புவதாகத் தோன்றியது பவானிக்கு. உலகின் ஏதோவொரு மூலையில் கருமேகம் திரண்டிருக்கும், நிச்சயமாக...○



தும்மாத்துண்டு கேமரா

"பானாசோனிக்" நிறுவனம் இந்த வீடியோ காமிராவை விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது. உள்ளங்கையை விடச் சிறிதாக இருக்கும் இதனை இன்னமும் சிறிதாக மடித்து, பாக்கெட்டில் வைத்து கொள்ள முடியும்! உல்லாசப் பயணிகளுக்கு மிகவும் ஏற்றது.

– பாரீஸ் பார்த்தசாரதி



எனக்கு 20 உனக்கு 18

ஒவ்வொரு ரயில் பயணமும் இனிமையானது. அதிலும் த்ரிஷா போன்ற ஜன்னலோர தேவதைகளைச் சுமந்தபடி, வந்து போகும் ரயில்களில் பயணிப்பது மேலும் இனிது.

மும்பையிலிருந்து சென்னைக்குத் திரும்பும் நாயகன் தருணுக்கும் அதுபோன்றதொரு இனிய பயணம் வாய்க்கிறது. பயணத்தின் முடிவில் இருவரும் 'ஹலோ' சொல்லிக் கொண்டு இறங்கி விடுகிறார்கள். அப்புறமென்ன?! ரயில் சினேகம் காதலாய் உயிர்பெற, எதிரெதிர் வீடுகளில் குடியிருந்து கொண்டே, ஒருவரை ஒருவர் தேடி அலைகிறார்கள். முடிவு சுபமா? என்பதை அழுத்தமாகச் சொல்ல முயற்சித்திருக்கிறார் அறிமுக இயக்குனர் ஜோதி கிருஷ்ணா.

இளமையின் துடிப்பும், துணிச்சலும் தெரிய வேண்டும் என்ற தீர்மானத்தோடு காட்சிகளை அமைத்திருக்கும் இயக்குனர், வேகமெடுத்து விட்ட ரயிலுக்கு இணையாக ஓடி, கடைசிப் பெட்டியில் நாயகன் தாவி ஏறுவது போல் காட்டுவதெல்லாம் அசல் அட்ராசிட்டி. எனினும் படத்தின் முடிவில் அதே காட்சியை யதார்த்தமாகப் படமாக்கியிருப்பதற்காக (உபயம்: விஷுவல் எபெக்ட்ஸ்), முன்னதை மன்னித்து விடலாம். குடியிருப்புப் பகுதியின் வெவ்வேறு வீதிகளில் நாயகன், நாயகி இருவரும் செல்லும் காட்சியை, ஒரே நேரத்தில் ஒரே ஷாட்டில் காட்டும் ஒளிப்பதிவில் தொடங்கி (ஆர்.கணேஷ்), ஒவ்வொரு தொழில் நுட்பத்தையும் நேர்த்தியுடன் பயன்படுத்திக் கொண்டிருக்கும் இயக்குனர், தன்னை இன்னொரு ஷங்கராகக் காட்டிக் கொள்ள முனைந்து, அதில் ஓரளவு வெற்றியும் பெற்று விடுகிறார். மாநகரத்துக் கல்லூரி மாணவிகள் நவீனமாக உடை அணிவார்கள் என்றாலும், படத்தில் காட்டுவது போல் கவர்ச்சியின் எல்லையை மீறும் ஆடைகளை அணியத் துணிவார்களா என்பது சந்தேகமே! பெண்களை இழிவு படுத்துகிற இரட்டை அர்த்த வசனங்கள் தேவையா என்பதையும் இயக்குனர் யோசித்திருக்கலாம். இரைச்சலான இசையாக இருந்தாலும், புல்லாங்குழல் போன்ற இனிய வாத்தியங்களை எடுப்பாகப் பயன்படுத்தியிருக்கும் ஏ.ஆர். ரஹ்மான் படத்திற்குப் பெரிய பலம், 'செரான்டிபிட்டி' ஆங்கிலப் படத்தின் மூலக் கதையைப் போல.

– விஷுவல்தாசன்

• ஆவரேஜ்

உஷா தீபன்

பேரம்

அந்தச் செருப்பை ஊசியால் குத்திக் குத்தி ரணப்படுத்தித் தைக்க அவனுக்கே மனசில்லை போல் தோன்றியது. இன்னும் மெருகு குலையாத புத்தம் புதுச் செருப்பு.

எடுத்தான்- பார்த்தான் - வைத்தான்.

"என்னய்யா? பார்த்துக்கிட்டேயிருக்கே?"

"பத்து ரூபா ஆகும் சார்..."

"பத்து ரூபாயா? ஒரு வார் அறுந்திருக்குது... அதைத் தைக்க பத்து ரூபாயா?"

"ஆமா சார்... புதுச் செருப்புல்ல? சொலூஷன் தடவி - உள்ளே நுழைச்சு ஒட்டி - ரெண்டு தட்டுத் தட்டித் தந்திடுவேன் சார்... திரும்ப ஒரு வாரத்துல பிஞ்சிரும்... ஒட்டினதுக்கு மேலே ஒரு தையல் போட்டாத்தான் கிச்சின்னு நிக்கும்... அதுக்குத்தான் பத்து ரூபா..."

"அதிகம்யா... ஆளு பார்த்து காசு வாங்குவ போலிருக்கு... ஸ்கூட்டர்ல வந்தா அதுக்குத் தனிக் காசு போலிருக்கு? நடந்து வந்திருந்தா... அதுக்குத் தனி ரேட்டா? நல்ல ஆளுய்யா?"

"அதெல்லாமில்லை சார்! செய்யுற வேலைக்குதான் சார் கூலி... உங்கிட்டே வாங்கற பத்து ரூபாய்க்கு ஒருவேளை பசியாத்த முடியுமா சார்? சொல்லுங்க? மனசோட கொடுங்க சார்..."

"உன்னை மாதிரித்தானய்யா நாங்களும்... ஒரு நியாயம் வேணாம்? ஏழு ரூபா வாங்கிக்க... தையி... நேரமாச்சு... சீக்கிரம்..."

"பாலிஷ் அடிச்சு, புதுசு மாதிரித் தர்றேன் சார்... தொழில் சுத்தம் பார்த்துக் குடுங்க..."

"அதுவே புதுசுதானய்யா? நீ என்ன புதுசாக்குறது?"

எனது கேள்வியில் சற்றே அதிர்ந்தவனாய் - சற்றே என்னைக் கூர்ந்து பார்த்துவிட்டு வேலையை ஆரம்பித்தான்.

எவ்வளவு கூலியை ஏற்றுக் கொண்டு வேலையைத் துவக்கியிருக்கிறான்? - தெரியவில்லை.

"இந்தாங்க சார்..." - வேலையை முடித்து என் கால் முன்னே - செருப்புகளை அவன் தூக்கிப் போட்டபோது - என் சிந்தனை அறுந்தது. மற்றொரு செருப்பையும் துடைத்திருந்தான்.

பைக்குள் கையை விட்டு ஏழு ரூபாய் எடுத்து நீட்டினேன்.

வாங்க மறுத்தான்.

"என்ன சார் இது? பேசின கூலியைக் கொடுங்க..."

"நான்தான் சொன்னேன்ல... ஏழு தர்றேன்னு. கேட்டுட்டுத்தானே தைக்க ஆரம்பிச்சே? இப்போ கூடக் கேட்டேன்னா?"

நிமிர்ந்து என் கண்களையே பார்த்தான் அவன். "நீங்களெல்லாம் இம்புட்டுக் கறாராப் பேசலாமா சார்? குடுங்க சார்... மனசோட குடுங்க..." - மேலும் வற்புறுத்தினான்.

சரி, தொலைகிறது... என்று இன்னொரு ஒரு ரூபாயைச் சேர்த்து - அவன் விரித்திருந்த சாக்கில் போட்டுவிட்டுக் கிளம்பினேன்.

"சார்... சார்..." என்றவனின் குரல், எனது திரும்பிப் பார்க்காத நடையில், "சே...!" என்ற கடைசி அலுப்போடு ஒய்ந்து போனது.



ரெண்டு ரூபாயைப் பிடிவாதமாய், சாமர்த்தியமாய்க் குறைத்து விட்டதில் அலாதித் திருப்தி, ஒரு நிறைவு.

வீட்டுக்கு வந்ததும் டைரியை எடுத்தேன். அடித்த காற்றில் ஏதோவொன்று பறந்து கீழே விழுந்தது. பறந்து, பறந்து நகர்ந்த அந்தத் துண்டுப் பேப்பரை எட்டிப் பிடித்து, 'என்னது?' என்று பார்த்தேன்.

ஒரு மாதத்திற்கு முன் வாங்கிய ரூ.299.90 பைசா என்று போட்டிருந்த, பேரம் பேச முடியாத, கௌரவமான ஒரு புன்னகையோடு, வாங்கி வந்த... எனது கறார் விலைச் செருப்பின் பில்தான் அது! ○

லாரி மேலே ஊர்வலம்!

சாம்ராட் அசோகன் நாடகம் நடந்து கொண்டிருந்தபோது நாடகத்துக்குத் தலைமை வகித்த வீணை எஸ். பாலசந்தர், "யார் யாரெல்லாம் மேக்-அப் போட்டுக்கிட்டு நாடகம் போடுவது என்று விவஸ்தையே கிடையாதா?" என்று ஆரம்பித்து கடுமையாக விளாசினார்.

மேடைக்கு எதிரே 'மியூஸிக் பிட்'டில் உட்கார்ந்து மியூஸிக் போட்டுக் கொண்டிருந்த அருணுக்குக் கோபம் வந்து விட்டது. "ஒரு சரித்திர நாடகத்துக்கு என்று பிரத்யேகமாக, கஷ்டப்பட்டு 'பீம்பிளாஸ்' எல்லாம் டச் பண்ணி, எவ்வளவு பிரமாதமாக மியூஸிக் போட்டிருக்கேன். அதைப் பாராட்டி ஒரு வார்த்தை சொல்லலை; சாம்ராட் அசோகன் செருப்பைப் பத்தி பேசறீரே?" என்று குரல் கொடுத்தார்.

"சாம்ராட் அசோகன் வேஷத்துக்கு வேற ஆளா கிடைக்கலை?"

"அவர்தானய்யா ஃபைனான்சியர். சாம்ராட் அசோகனாக நடிக்க வேற ஆளு கிடைப்பான். நாடகம் போட ஃபைனான்சியர் கிடைப்பாரா?"

நாடகமே மேற்கொண்டு தொடராமல் நின்று போனது. மொத்தத்தில் அன்றைய நாடகத்தைவிட, அங்கே நடந்த வாக்குவாதத்தை மக்கள் ரொம்ப ரசித்தார்கள்.

எனக்கு சங்கீத ஞானம் கிடையாது. ஆனாலும் சில வித்வான்கள் மீது பெரும் மரியாதை உண்டு. அப்படிப்பட்டவர்களுள் பாலமுரளி கிருஷ்ணா ஒருவர்.

ஒரு நாள் பாலமுரளியின் வீட்டுக்குப் போனேன். "வாங்க நாகேஷ்" என்று வரவேற்று, "சொல்லுங்க, நான் உங்களுக்கு



• பாலமுரளி கிருஷ்ணா

என்ன பண்ணணும்?" என்று கேட்டார்.

"உங்க கச்சேரி கேக்கணும்னு ஆசைப்படறேன்."

"ஓ! பேஷா கேட்கலாமே!"

"நீங்க பப்ளிக் கச்சேரி பண்ணறதை

சிரித்து வாழவேண்டும் – 21



* நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

நிறுத்திட்டதா கேள்விப்பட்டேனே?''

"ஆமாம்! அது என்னோட முடிவு. என் முடிவை நான் எப்போ வேணும்னாலும் மாத்திக்கலாம். என் கச்சேரி நடக்கிறபோது உங்களுக்குத் தகவல் சொல்லறேன். அவ சியம் வந்து கேளுங்க."

"உங்க கச்சேரியை, என் மனைவியோட சகோதரி கல்யாண ரிசப்ஷனில் ஏற்பாடு செய்து, கேக்கணும்னு ஆசைப்படறோம்."

''அப்படியா? அதுக்கென்ன? யார் யாருக்கோ கச்சேரி பண்ணறேன். உங் களுக்கு மாட்டேன்னு சொல்லுவேனா? பண்ணிட்டாப் போச்சு!"

"ரொம்ப நன்றி! உங்களுக்கு நான் என்ன மரியாதை பண்ணணும்?"

''இது நம்ம வீட்டுக் கல் யாணம். தேதியைச் சொல் லுங்க'' என்று சொல்லிவிட, அதற்கு மேலும் அவருடன் பணம் பற்றிப் பேசுவது நாகரிக மில்லை என்று, கச்சேரிக் கான தேதியை மட்டும் சொல்லி விட்டுப் புறப் பட்டு விட்டேன்.

ரிசப்ஷன் அன்று சரியான நேரத்துக்கு வந்தார். கச்சேரி அற்புதமாக அமைந்தது. சாப்பிட்டு விட்டு பாலமுரளி புறப்பட, வழி அனுப்பி வைக்க கார் வரை சென்றேன்.

''கச்சேரி நல்லா இருந்ததா? உங் களுக்குத் திருப்தியா?'' என்றார்.

"நான் மட்டுமில்லை. எல்லாருமே கச்சேரி ரொம்பப் பிரமாதம்னு சொன் னாங்க."

"அப்போ, நீங்க சொன்னா மாதிரி எனக்கு கௌரவம் பண்ணிடுங்க'' என்றார்.

சற்றும் எதிர்பாராத அவரது இந்த வார்த்தைகளால் நான் கொஞ் சம் திணறிப் போனேன். 'உள்ளே அழைத்துக் கொண்டுபோய் பணத் தைக் கொடுப்பதா? இல்லை ரோட்டில் வைத்துக் கொடுப்பது சரியா?' என்று மனதுக்குள் கேள்வி மேல் கேள்வி. கொஞ்சம் குழம்பினேன்.

என் குழப்பத்தை சில விநாடிகள் ரசித்து விட்டு, புன்னகையுடன் சொன் னார், ''நாகேஷ்! கல்யாணத்துக்கு வந்திருக் கேன், தேங்காய், பழம் போட்டு, தாம் பூலப்பை கொடுத்து கௌரவிக்கலாமே!'' என்றார்.

அப்போதுதான் அவரது குறும்பு எனக் குப் புரிந்தது. ஓடிப்போய் தாம்பூலப் பையைக் கொண்டு வந்து கொடுத்து, என்னுடைய மறதிக்கு மன்னிப்புக் கேட் டுக் கொண்டு வழி அனுப்பி வைத்தேன்.

ஒருமுறை, உளுந்தூர்பேட்டைக்குப் பக்கத்தில் ஏதோ ஒரு குக்கிராமம். அங்கே எனக்கும், பிரபல நாகஸ்வர வித்வான் நாம கிரிப்பேட்டை கிருஷ்ணனுக்கும் பாராட்டு விழா. அந்த நிகழ்ச்சியை யார் நடத்தினார் கள்? எதற்காக அந்தக் கிராமத்தில் நடத் தினார்கள்? மற்ற பின்னணி விஷயங்கள் இப்போது நினைவில்லை. ஆனால், உளுந்தூர்பேட்டையிலிருந்து அந் தக் கிராமத்துக்குப் போனது மட்டும் இன்னமும் நன்றாக நினைவிருக்கிறது. காரணம், வித்தியாசமான அந்த



நாகேஷ்

* படம்: யோகா

குரல் நிர்வாகம்; கச்சேரி நிர்வாகம்; மனஅழுத்த நிர்வாகம்!

சென்னையில் மட்டும் எட்டு 'குருகுலம்' கிளைகள்... ஹைடெக் ஸ்டுடியோ, டிஜிடல் ரெகார்டிங் வசதி... பெங்களூர், கோவை அமெரிக்காவில் கிளைகள் - சின்ன புள்ளியாக ஆரம்பித்த கர்னாடிகா டாட் காம், சர்வதேச நிறுவனமாகிவிட்டது!

பெரிய நிறுவன அதிகாரிகளுக்கு இசை மூலம் 'ஸ்ட்ரெஸ் மானேஜ்மெண்ட்' (மன அழுத்தத்தைத் தாக்குப் பிடிக்க) பயிற்சி உண்டு!

இசைப் பயிற்சியில் கச்சேரிக்கான பயிற்சி (concert management), குரல் வளப் பயிற்சி (voice management), சும்மா பஜன் கிளாஸ் என்று வருவோர் விருப்பத்துக்கேற்ப பலவித வகுப்புகள். ஆறு மாத பாக்கேஜ், மூன்றிலிருந்து ஐந்து வருடப் பயிற்சி என்று வடிவடிமைக்கப்பட்டுள்ளன. பாட்டு கற்றுக் கொள்வோருக்கு 'காரியர்' சரியாக அமைவதில்லை என்ற அவப் பெயரைப் போக்க கர்னாடிகா நடத்தும் சசிகிரண் - சௌம்யா உறுதியாய் இருக்கிறார்கள்.

- எஸ்.வி.என்

படங்கள்: வெங்கடேஷ்



* சௌம்யா



* சசிகிரண்

லாரிப் பயணம்தான்.

ஆமாம்! உளுந்தூர் பேட்டையிலிருந்து எங்கள் இருவரையும் அந்தக் கிராமத்துக்கு ஒரு லாரியில் தான் அழைத்துக்கொண்டு போனார்கள். அதுவும் எப்படித் தெரியுமா? லாரியின் கேபினில், டிரைவர் சீட்டுக்குப் பக்கத்தில் எங்களை உட்கார வைக்கவில்லை. டிரைவர் கேபினுக்கு மேலே, டாப்பில் ஒரு தார்ப்பாலின் ஷீட்டை மடித்துப் போட்டு, அதன்மேல் இரண்டு நாற்காலிகளை வைத்து, இறுக்கமாய்க் கட்டி, அங்கே போய் அமருவதற்காக ஏணி போல ஒரு ஏற்பாடும் செய்திருந்தார்கள். லாரி மேலே ஊர்வலம்!

கிடுகிடுவென்று நான் மேலே ஏறிவிட்டேன். நாமகிரிப்பேட்டை, இது புது விதமான அனுபவம் என்பதால் கொஞ்சம் தயங்கினார். எப்படியோ, சிலர் கைகொடுத்துத் தூக்கி, அவரையும் லாரியின் டாப்பில் ஏற்றி, உட்கார வைத்து விட்டார்கள். கழுத்தில் மாலை, கையில் பூச்செண்டு, என்று ஒரே அமர்க்களம்.

சுமார் பத்து, பதினைந்து கிலோ மீட்டர் லாரிப் பயணத்துக்குப் பின், அந்தக் கிராமத்தை அடைந்தோம். ஊரே திரண்டிருந்தது. நான் சட்டென்று, லாரியின் முன்புறம் இறங்கி, டிரைவர் சீட் பக்கம் கால் வைத்து இறங்கிவிட, அடுத்த நிமிடம், என்னை மேடைவரை அப்படியே தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்.

என் உடன் வந்த நாமகிரிப்பேட்டையை மேடையில் காணவில்லை. லாரியின் மேலே பார்த்தால், அவர் இறங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார். அப்புறம் யாரோ ஒருவர் ஏணி ஒன்றைக் கொண்டுவர, அவரும் ஒரு வழியாக இறங்கி மேடைக்கு வந்தார். பாராட்டு விழா நடந்து முடிந்தது.

"மறுபடி லாரி மேலே ஏறணுமா?" என்று பயந்த குரலில் அவர் கேட்டார். நல்ல காலம், லாரியின் பின் பகுதியில் நாற்காலியில் உட்கார்ந்தபடி பயணம் செய்தோம். வித்தியாசமான பாராட்டு விழா. மறக்க முடியாத அனுபவம்தானே!

(சிரிப்பு தொடரும்)

கலவரப் பகுதி!

''அடடே! என்கிட்ட 'ஆட்டோகிராப்' கேக்கறேளே! பேஷ்... பேஷ்!''

''இல்லே சார்... இந்தக் கச்சேரிக்குத் தான் நான் வந்தேன்'னு ஒய்ஃபுக்கு நிரூபிக்கத்தான்... சினிமாவுக்குப் போயிருப்பேன்னு சந்தேகப்படுவா!''

— கிரிஜா





''என்ன டி.ஐ.ஜி. சார்... நேத்து என் கச்சேரிக்கு வராம இருந்துட்டீங்க?''

''திடீர்னு இன்னொரு 'கஷ்டம்' வந்துடுச்சுங்க!... இதை விட்டுட்டு வேறொரு 'கலவரப்பகுதி'க்குப் போக வேண்டி ஆயிடுச்சு!''

— மணாளன்

''நம்ம சபாவிலே என் கச்சேரிக்கு கேட் கலெக்ஷன் பிரமாதமாமே, கேட்க ரொம்ப சந்தோஷமாயிருந்தது—''

''ஆமாய்யா, 'பாதி டிக்கெட்டைக் காண்பிச்சா காண்டீன்ல பொங்கல் வடை இலவசம்'னு விளம்பரத்துல ஒரு வரி சேர்த்தேன்; பிச்சுண்டுப் போயிடுத்து!''

— சு. அருணாசலம்



நம்ம சிங்கபுரம் ஜமீன்தார் கூட சாகறத்துக்கு முந்தின நாள் என்னைக் கூப்பிட்டுப் பாடச் சொல்லிக் கேட்டாருங்க!''

''பாவம்! அவருக்கு இப்படி ஒரு 'தற்கொலை முயற்சி' தோன்றியிருக்கக் கூடாதுங்க!

— கிரிஜா மணாளன்



"

இப்போதைய வித்வான்களுக்கு
நிகழ்ச்சியில் இன்வால்வ்மெண்ட் இல்லை

"

பொன்விழா கொண்டாடும் கிருஷ்ண கான சபாவின் செயலர் யக்ஞராமனை, 'ஹம்சத்வனி' செயலர் ராமச்சந்திரன் சந்திக்கிறார். ராமச்சந்திரனின் எண்பதாவது பிறந்தநாளையொட்டி ஜனவரி மாதம் 'ஹம்சத்வனி'யில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியுள்ளன.

ராம: பொன்விழா வாழ்த்துக்கள்! நீங்கள் ஐம்பது வருடங்களாக சபா நடத்தி வருகிறீர்கள். நாங்கள் பதிமூன்று வருடங்களாக 'ஹம்சத்வனி' நடத்தி வருகிறோம். சபா நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக அமைய, பாடகர் - ரசிகர் - சபா என்கிற மூன்று தூண்கள் மட்டுமே போதும் என்று சில வருடங்களுக்கு முன்பு வரை இருந்தது. இப்போது நாலாவது தூணாக ஸ்பான்ஸர் இருந்தால்தான் நிகழ்ச்சி நடத்த முடியும் என்று ஆகிவிட்டது. ஆனால் பத்துப் பதினைந்து கலைஞர்களுக்கு மட்டும்தான் கூட்டம் வருகிறது. எல்லாரும் அவர்களையே தான் திரும்பத் திரும்பப் போட வேண்டியிருக்கிறது. மற்றவர்களை நாம் நிஜமாக, சரியாக பிரமோட் செய்கிறோமா? முன் பின் தெரியாத கலைஞர்களை பிரமோட் பண்ண ஆசைப்பட்டாலும் கூட்டம் விடுவதில்லை. உங்கள் கருத்து என்ன?

யக்ஞ: ஸ்பான்ஸர்ஷிப் எல்லாம் இந்தப் பதினைந்து வருடங்களாகத்தான் இருந்து வருகிறது. அதற்கு முன்பு பெரிய சப்போர்ட் எதுவும் இல்லா


* யக்ஞராமன் - ராமச்சந்திரன்

"ஒன்மேன் ஷோதான் ஒழுங்காக நடக்கும்!"

மலேதான் சபா நடத்திக் கொண்டு வந்திருக்கிறேன். இது சத்தியம். உறுப்பினர் சந்தா, சூவனீர் விளம்பரப் பணத்தில் மிச்சம் பிடித்து சேமித்து, யாராவது நன்கொடை கொடுத்தால் அதையும் சேர்த்துக் கொண்டு, சபா நடத்தி வந்தேன். என்னோட அதிர்ஷ்டம் என்னவென்றால், நான் கொடுப்பதைப் பாடகர்கள் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். அது கிருஷ்ண கான சபாவின் பெயருக்கும், தகுதிக்கும் கிடைத்த பலன் என்று நினைக்கிறேன்.

ராம: சரி, இப்போதைய வித்துவான்களுக்கு, நிகழ்ச்சியில் இன்வால்வ்மெண்ட் எந்த அளவுக்கு இருக்கிறது?

யக்ஞ: அப்போதெல்லாம் இருந்த இன்வால்வ்மெண்ட் இப்போது

—சபா செயலாளர்கள் சந்திப்பு





* 'ஹம்சத்வனி'யில் பாராட்டுப் பெற்ற கிரிக்கெட் வீரர்கள் ரமேஷ், ராபின்சிங் (1999)



* கிருஷ்ண கான சபா

இல்லைதான். செம்மங்குடி கச்சேரிக்கு அரை மணி முன்னதாகவே வந்து ஒரு சேரில் அமர்ந்து விடுவார். ஆலத்தூர் சகோதரர்கள், குட்டி போட்ட பூனை மாதிரி மேடையில் நடந்து கொண்டே இருப்பார்கள். அப்போது ஒவ்வொரு கச்சேரியும் அவர்களுக்கு ஒரு பரீட்சை மாதிரி. அவர்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறை அசாத்தியமாக இருக்கும். ஒருதடவை ஆலத்தூர் சகோதரர்களின் கச்சேரி; பாலக்காடு மணி மிருதங்கம். லால்குடி வயலின். துரதிர்ஷ்டவசமாக, பாலக்காடு மணி வர முடியவில்லை. ஒரே நாள்தான் இருந்தது. மணி இருக்கிற மாதிரியே கச்சேரியைப் பிரமாதமாக நடத்தி விட வேண்டும், என்று ஆலத்தூர் பிரதர்ஸ்க்கு ஆசை. உமையாள்புரம் சிவராமனையும், பாலக்காடு ரகுவையும் இரட்டை மிருதங்கமாகப் போட, என் கூடவே வந்து கேட்டுக் கொண்டார்கள் ஆலத்தூர் சகோதரர்கள். இரவு மணி பன்னிரெண்டுக்கு மேல் 'ஹிந்து' ஆபீசுக்கு என் கூடவே வந்து, லேட் நைட் எடிட்டரைப் பார்த்து விளம்பரத்தைத் திருத்திக் கொடுத்தார்கள். எத்தனை அக்கறை பாருங்கள்! இது மாதிரி நிறைய சம்பவங்கள்...

ராம: ஸ்பான்ஸர் ஷிப்பால் நன்மையா தீமையா என்றே சொல்ல முடியவில்லை. தங்களிடம் வருகிறவர்களின் பேச்சைக் கேட்டு. பணத்தைக் கொடுத்து விடுகிறார்களே தவிர. அது சரியான இடத்துக்கு, சரியான கைகளுக்குப் போய்ச் சேருகிறதா என்ற கவலையே அவர்களுக்கு இல்லை.

யக்ஞ: தங்களுக்கு அதீத மதிப்பும் மரியாதையும் ஒரு சபாவில் கிடைக்குமானால், அது போதும் சில ஸ்பான்ஸர்களுக்கு.

ராம: ஸ்பான்ஸர்ஷிப் நிறையவே கிடைக்கிற சபாவிலேயே கொட்டோ கொட்டென்று லட்சக்கணக்கான ரூபாய் கொட்டுகிறார்கள். ஒரு டிஸ்க்ரிஷன் வேண்டாமா?

யக்ஞ: பாடகர்களின் பெயரைக்கூட ஒழுங்காகப் போடத் தெரியவில்லை. சங்கீதம் பற்றியும் எதுவும் தெரியாது. அப்படிப்பட்டவர்களுக்கும் ஸ்பான்ஸர்ஷிப் நிறையவே கிடைத்து விடுகிறது! ஸ்பான்ஸர்ஷிப் பணம் முழுவதையும் தங்களுக்கே கொடுத்து விட வேண்டும் என்று பாடகர்

கள் எதிர்பார்க்கிறார்கள். இன்றைக்கு சபா நடத்துகிற செலவுகளைப் பற்றிக் கவலையே இல்லை அவர்களுக்கு!

ராம: நிகழ்ச்சியின் தரம் பற்றிக் கூட, பல அமைப்பாளர்களுக்கும் ரசனை இருப்பதில்லை. புரோக்ராம் கொடுத்தால் அத்தோடு ஆயிற்று என்று நினைக்கிறார்கள். கூட்டம் வருகிறதா இல்லையா என்ற கவலை எல்லாம் இல்லை. சரி, ஸ்பான்ஸர்கள் இல்லாமல் நிகழ்ச்சி நடத்த முடியாதா?

யக்ஞ: நானே நடத்தியிருக்கிறேன். வெளியே பந்தல் போட்டு 30-35 கச்சேரிகள். கூரையிலுள்ள துவாரம் வழியாக சூரியனின் கிரணம் வட்ட வட்டமாக விழுந்திருக்கும். பெஞ்சில் உட்கார்ந்து செம்மங்குடி போன்ற பெரிய வித்துவான்களே கேட்டிருக்கிறார்கள்... எங்கள் சபாவில் மெம்பர்ஷிப் அப்பா-பிள்ளை - பேரன் என்று தலைமுறை வரிசையில் தொடங்குகிறது. சீசனில் டிக்கட்டுகளுக்கு நிறைய டிமாண்ட். ஸ்பான்ஸர்களைவிட, ரசிகர்களையே நான் அதிகம் நம்புகிறேன்.

ராம: டிக்கட் போடாமல் 'ஆல் ஆர் வெல்கம்' கச்சேரிகளால் ரசிகர்கள் பெருக முடியுமா?

யக்ஞ: காபிப் பொடி, கறிகாய் எல்லாம் வாங்கிக் கொண்டு போகிறவர்கள்தாம் இந்த மாதிரி கச்சேரிகளுக்கு வந்து, அரைமணி உட்கார்ந்து விட்டுப் போய் விடுகிறார்கள். இதனால் என்ன ரசனை பெருகிவிடும்? கச்சேரி டிஸிப்ளின் கெட்டுப் போய் விடுகிறது, இந்த 'அனுமதி இலவசம்' கச்சேரிகளால். இருபது அல்லது முப்பது சதவிகிதங்கள் தான் உண்மையான ரசிகர்கள் இருப்பார்கள்.

ராம: பாடுகிறவர் சிரத்தையாகப் பாட வேண்டும். ரசிகர்கள் உண்மையான ரசனையுடன் கேட்க வர வேண்டும். சபாக்காரர்கள் பொறுப்போடு நடந்து கொள்ள வேண்டும். போதாதா?

யக்ஞ: கலாசார அமைப்பு என்றால் அதில் ஜனநாயகம் பார்க்கக் கூடாது. பார்த்தால் உருப்படியாகக் காரியம் எதுவும் நடக்காது. சபா நடத்துகிறவர் விஷயம் தெரிந்தவர் என்பதை ஏற்றுக் கொண்டு, எல்லாரும் ஆதரவு தந்தால் போதும். ஒன்-மேன் ஷோவாக இருந்தால்தான் ஒழுங்காக நடத்த முடியும்!

தொகுப்பு: **சாருகேசி**
படங்கள்: **வெங்கடேஷ்**


ஓய்வெடுக்கும் வேளை
PEACEFUL
Pondicherry
Give time a break.
அமைதியான பாண்டிச்சேரியை அனுபவியுங்கள். துயரமில்லாமல் சுலபமாக ஓய்வெடுப்பது எப்படி என்று புரிந்து கொள்ளுங்கள்.
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: பாண்டிச்சேரி சுற்றுலா: தொலைபேசி: 91-413-2334575/2333590/2330532. :பேக்ஸ்: 91-413-2330532. இ-மெயில்: e_ptdc@sify.com இணைய தளம்: www.tourisminpondicherry.com
McCANN/PT/11-03

நான் வேண்டுமா?

"மூணு மணி நேரமா படியிலயே உக்காந்திருக்கேன்" என்று பெட்டியை அள்ளிக் கொண்டு ரவி எழுந்தான்.

திடீரென்று எங்கேயிருந்து இவன் முளைத்தான்? இவனை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்?

நிவேதனா கதவைத் திறந்ததும், பெட்டியைத் தரையில் போட்டு விட்டு, கதவை சாத்தி, அப்படியே அவளை அணைத்துத் தூக்கினான்.

குப்பென்ற சிகரெட் வாசம். ஒரு காலத்தில் அவனிடம் அவள் மிகவும் ரசித்த வாசம்.

"எப்படி உன்னை மிஸ் பண்ணேன்." அவள் காதுகளை உரசி அதே கிளர்ச்சியூட்டும் கிசுகிசுப்பான குரல்.

ரவியின் உறுதியான உடம்பு அவள் மீது அழுத்தியதில் ஏற்பட்ட படபடப்பு ஒருகணம். ஒரே கணம்தான்.

நிவேதனாவின் மனது அதற்குள் இறுகிவிட்டது.

"ரவி, கீழ எறக்கு." குரலில் கடுமை இருந்தது.

இறக்கியதும், அவள் முதுகில் கையை அப்பி நெருக்கமாக இழுத்து உதடுகளைத் தேடினான்.


மார்பில் பிடித்துத் தள்ளினாள்.

"தொடாமப் பேசு" என்றாள்.

"எப்படி, எப்படித் தொடாமப் பேச முடியும், ஹனி? எத்தனை மாசம்... என் உதடெல்லாம் ஏங்கிக் கிடக்கு."

விளக்குகளைப் போட்டாள்.

"தள்ளி உக்காந்து பேசறதா இருந்தா வீட்டுல பேசலாம்... இல்லேன்னா ஆபீஸ்ல வந்து பாரு."




நம்பாமல் பார்த்தான். "ரவி, உன்னோட பழைய ரவி வந்திருக்கேன்..."

"நான் பழைய நிவேதனா இல்ல..." விலகிப் போய் அமர்ந்தாள். "எப்ப வந்தே?"

"இன்னிக்கு சாயந்திரம்தான்."

"எப்பப் போவே."

"எப்படி இரக்கமில்லாமக் கேக்கறே? ஃப்ளோரிடா, ஃப்ரான்ஸ் எல்லாத்தையும் மூட்டை கட்டிட்டு உன்னைப் பார்க்கணும்னு ஓடி வந்திருக்கேன், நிவி... திரும்பிப் போகப் போறதில்ல... இன்னும் எம்மேல கோபமா."



சட்டென்று மண்டியிட்டான்.


"நீ என்னை மன்னிச்சு ஏத்துக்கற வரைக்கும் எழுந்திருக்கப் போறதில்ல..."

"சாப்ட்டியா."

"சேர்ந்து ஷவர்ல குளிப்போம். அப்புறம், டின்னருக்கு வெளியே போவோம்" கையை அடக்க முடியாமல் அவள் இடுப்புப் பக்கம் கொண்டு வந்தான்.

"நான் சாப்டாச்சு. பிரெட் இருக்கு. டோஸ்ட் பண்ணித் தரேன். சாப்பிட்டுக் கிளம்பு."

"நிவி, ஆர் யூ ஜோக்கிங்?"



சுபா 10

உன் வீடு இருக்கும்போது நான் வேற எங்கே போய்த் தங்கணும்."

"என் வீட்டுல எனக்கு மட்டும்தான் இடமிருக்கு."

எழுந்தான். "புரியுது. உன் வாழ்க்கைல இன்னொரு ஆம்பிளை வந்திட்டான்..."

பிரெட் துண்டங்களை மின் இயந்திரத்தில் செலுத்தினாள். பிரவுன் நிறமாக்கி வெளியே தள்ளியதும், கத்தியால் ஜாம் தடவி, பாலேடுப் பட்டையைப் பொருத்தி, குறுக்கில் வெட்டி தட்டில் வைத்து நீட்டினாள்.

ரவி பெட்டியைப் பரபரவென்று திறந்தான்.

"உனக்காக என்ன வாங்கிட்டு வந்திருக்கேன் பாரு..."

"அலங்காரமான வலைப் பையிலிருந்த ஜின் பாட்டிலை அவள் முன் வைத்தான்.

"உள்ளே எடுத்து வையி. எனக்குப் பயன் படாது..."

"ஏய், ஆசிரமம் எதுலயாவது சேர்ந்துட்டியா?"

"உன் மார்கரெட் என்ன ஆனா?"

"அதான் கோபமா? அவ உன் கால் தூசுக்கு

வர மாட்டா. எட்டு மாசம் வாழ்ந்து பார்த்தோம். அவளுக்கும் பிடிக்கல. எனக்கும் பிடிக்கல. நோ கமிட்மெண்ட். வேற வேற அபார்ட்மெண்ட்டுக்கு மாறி நாலு மாசமாச்சு. உனக்கு மெயில் அனுப்பி யிருந்தேனே"

"இப்ப என்ன திடீர்னு இந்தியா?"

"இண்டியன்ஸ்க்கு அங்கே மரியாதை போச்சு... சம்பளத்தைக் குறைச்சிட்டான். பாம்பே கம்பெனிக்கு அப்ளை பண்ணி யிருந்தேன். உடனே வான்னான்."

"பாம்பே போற வழியில இங்க ஹால்ட்டா?"

"இல்ல உன்னையும் தூக்கிட்டுப் போலாம்னு வந்தேன்... பாம்பேல உன் திறமைக்கு நூறு வேலை கிடைக்கும், நிவி"

"உன் திறமைக்கு நூறு பொண் ணுங்க கிடைப்பாங்க. அதுல ஒருத் தியை லவ் பண்ண ஆரம்பி."

ஜின் பாட்டிலை எடுத்து அவன் பெட்டியிலேயே வைத்து மூடினாள்.

"ஆர் யூ சீரியஸ்? எனக்கு இட மில்லியா?"

"வெரி சீரியஸ்" என்றாள்.

அவனை ஒரு வழியாகப் பொட்டலம் கட்டி பக்கத்து ஏரியா ஹோட்டலில் கொண்டு தள்ளிவிட்டு வருவதற்குள் நள்ளிரவு தாண்டி விட்டது.

தவற விட்ட போன் பதி வாகியிருந்தது.

ராஜ்குமார். "உன்கிட்ட அவசரமாப் பேசணும், நிவேதனா."

நரகத்துக்குப் போ.

மனநிலையை மாற்ற ஊட்டியில் எடுத்த போட் டோக்களை புரட்டிக் கொண்டிருந்தாள். கண்கள் செருகின.

அம்மாவின் நோட் புத்தகத்தை அணைத்துக் கொண்டு, விளக்கைக்கூட அணைக்காமல் படுத்தாள்.

அதிகாலையில் அழைப்பு மணி ஒலி[illegible]த்தது.

பழைய நிவேதனாவாக இருந்தால் சலித்துத் திரும் பட்டும் என்று போர் வையை இழுத்துக் கொண் டிருப்பாள். இப்போது அந்த ஆவேசம் இல்லை.

ஜன்னல்களைத் திறந்தாள். சோம்பலாக நடந்து கதவுகளைத் திறந்தாள்.

"மார்னிங்" என்று ரவி தடக்கென்று நுழைந் தான். பருத்திச் சட்டையின் பிளவினூடே சுருண்ட மார்பு முடிகள் வேடிக்கை பார்த்தன. முந்தின இரவு குடித்த மதுவின் சிவப்பு வரிகள் கண்களில் தெரிந்தன.

"ரவி..." என்றாள், சலிப்பாக. "இன்னும் கொஞ்ச நேரம் நான் தூங்குவேன்."

"தூங்கேன். மடி தரட்டுமா?"

பதில் சொல்லாமல், வாசலில் வீசப்பட்ட தினசரியைப் பொறுக்கிக் கொண்டு பாத்ரூமில் நுழைந்தாள்.

வெளியே வந்தபோது, கேக்கை மென்று கொண்டு, பெரிய கண்ணாடிக் கோப்பையில் பாலை உறிஞ்சிக் கொண்டு, கட்டிலில் உரிமையோடு உட்கார்ந்திருந்தான்.

"குட்டில நீ ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கே" என்றான், அவள் புகைப்படங்களை அரை வட்டமாகப் பரப்பி.

"எங்கப்பா கடைசியா எடுத்தது."

'கண்ணாடிக்கெதிரில் அமர்ந்தாள்.

"இது?"

"இப்ப நான் ஊட்டில எடுத்துக்கிட்டது."

கூந்தலை ஒழுங்குபடுத்தினாள்.

"இவன்தான் புது ஆளா? நல்ல உசரமா இருக்கான்."

போட்டோக்களை எடுத்து வைக்காமல் குளிக்கப் போனது தப்பு.

"நான் இன்னிக்கு சீக்கிரம் ஆபீஸ் போகணும், ரவி."

நடுநெற்றியில் சின்னப் பொட்டு ஒட்டி னாள்.

"துரத்தறியா?"

"பிரேக்ஃபாஸ்ட் சேர்ந்து சாப்பிடுவோம்" என்று மடித்த புடைவையை எடுத்துக் கொண்டு, அடுத்த அறைக்குள் நுழைந்தாள். உடுத்தித் திரும்பிய போதும் கட்டிலில்தான் இருந்தான்.

"இது?"

"எங்கம்மா எழுதின டைரி..." என்று நோட் புத்தகத்தை வாங்கி மேஜையில் பத்திரப் படுத்தினாள்.

"நீ எப்ப வேப்பிலை கட்டற கோயிலுக்

"நான் அடிக்கடித் தனிமைல பாட்டுப் பாடுவேன்...!"

"ஆமாம். அதுதான் 'உடம்புக்கு' நல்லது?"

- இடைப்பாடி ஜெ. மாணிக்கவாசகம்

கெல்லாம் போக ஆரம்பிச்சே?" என்று புகைப் படத்தை ஆட்டினான்.

அலுவலகத்திற்குத் தேவையானவற்றை எடுத்து அடுக்கிக் கொண்டான்.

"எங்கம்மா நேர்ந்துக்கிட்ட கோயில்."

"அப்படின்னா?"

"அங்கே தொட்டில் கட்ட வேண்டிக்கிட்டாங்களாம். அப்புறம்தான் நான் பொறந்தேன்."

"இந்தக் கோயில்லயா?"

"ஆமா... டைரில எழுதியிருக்காங்க."

"நீ பொறக்கறதுக்கு வேண்டிக்கிட்டாங்களா? இந்தக் கோயில் கட்டியே பதினஞ்சு வருஷம்தான் ஆகுது... உனக்கென்ன பதினாறு வயசா?"

அதிர்ந்தாள். அவனிடமிருந்து புகைப்படங்களைக் கிட்டத்தட்டப் பறித்து இழுப்பறையில் போட்டாள்.

"போலாமா?"



"ஏய், நிஜம்மாத்தான். திடீர்னுதான் அந்த மரத்துக்கு மஞ்சள் பூசிக் கோயிலாக்கிட்டாங்க. நான் அந்த ஏரியாலதான் வளர்ந்தேன், நிவி."

சாவியை எடுத்துக் கொண்டாள். "போலாம்" என்றாள்.

"புலி மாதிரி சுவாரசியமா இருந்தே. இப்ப அவுத்து விட்டாக்கூட ஓடத் தெரியாத பசுக்குட்டி போல ஆயிட்டே. இந்தக் கேரக்டர்ல பவரே இல்லடா, நிவி."

"பிய்ச்சுக்கிட்டு தரைச் சக்கரம் போல பரபரன்னு சுத்திட்டு அடங்கிப் போகணும் சுறியா? கரியானதும் காலால நகர்த்திட்டுப் போயிடுவாங்க."

"இன்னிக்கு ஆபீஸுக்கு லீவு போடக் கூடாதா? மகாபலிபுரம் வரைக்கும் போயிட்டு வரலாமே" என்று அவன் கன்னத்தை வருடினான்.

தட்டி விட்டாள். வெளியே போய் நின்று கொண்டான்.

"பாறைப்பா" என்று செருப்புகளை மாட்டிக் கொண்டான்.

மதிய உணவுக்கெல்லாம் சந்திக்க முடியாது என்று சொல்லி ஒரு வழியாக அவனிடமிருந்து விடுபட்ட போது, அவள் மனத்தில் ஒரே கேள்வி குடைந்து கொண்டிருந்தது.

அந்தக் கோயிலைப் பற்றி அம்மா எழுதினது தப்பாயிருக்க முடியுமா? அவனுடைய சி.டிக்களை அம்மா கொண்டு கொடுத்ததையும் ரவியிடம் சொல்லியிருந்தால், அவளைப் பைத்தியம் என்றே முடிவு கட்டியிருப்பானா?

செத்துப் போன அம்மா எப்படித் திரும்பி வந்தாள்? எங்கோ விடை ஒளிந்திருக்கிறது. கண்டுபிடி.

அலுவலகத்தில் பொருந்தி உட்கார முடியவில்லை. தீபக்கிடம் சொல்லிவிட்டு மதியமே திரும்பி விட்டாள்.

அம்மாவின் டைரியை வரி வரியாக அலசினாள்.

அத்தனை புகைப்படங்களையும், புள்ளிப் புள்ளியாக கவனித்தாள்.

சின்னக் குன்று கோயிலில் எடுத்த புகைப்படத்தில் பின்னணியில் பிரதான மண்டபத்தில் 'ஸ்தாபிதம்' என்று போட்டிருந்த வருட எண்ணில் ஆர்வமானாள். பூதக் கண்ணாடி வைத்து உன்னிப்பாகக் கவனித்தாள்.

ரவி சொன்னதுதான் சரி. பதினைந்து வருடங்களுக்கு முந்தைய வருடம்தான் போட்டிருந்தது.

அப்படியானால்... அப்படியானால்...

ராஜ்குமார் கொண்டு வந்து கொடுத்த அம்மாவின் டைரி?

மூளை ஸ்தம்பித்து ஸ்தம்பித்து இயங்கியது.

போனில் தொடர்பு கொண்டால் வேகம் இருக்காது. நேரில் சட்டையைக் கொத்தாகப் பற்றி, 'இதற்கெல்லாம் என்னடா அர்த்தம்?' என்று பிடரியில் அடிக்க வேண்டும்.

சடாரென்று முடிவெடுத்து அத்தனையையும் அள்ளிக் கொண்டு புறப்பட்டாள்.

ராஜ்குமாரின் வீடு இருந்த தெருவிற்குள் நுழையும்போதே, ஏதோ அசந்தர்ப்பம் நிகழ்ந்திருப்பதை யூகிக்க முடிந்தது.

வீட்டு வாசலில் கறுப்பு நிறத்தில் அமரர் ஊர்தி நின்றிருந்தது. துணிக் கூடாரம் அமைப்பதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. மாடியிலிருந்து பெண்களின் அழுகுரல்கள் கேட்டன. பரபரவென்று போகிறவர்களும், வருகிறவர்களுமாக...

பேக்கரி வாசலில் வண்டியை நிறுத்தினாள்.

"அந்த வீட்டுல என்ன அழுகைச் சத்தம்?" என்றாள்.

"வளர்ந்த ஆம்பிளை திடீர்னு செத்தா அழாம என்ன பண்ணுவாங்கம்மா?"

"எ...எப்படி?"

"தண்ணி லாரிதான். நசுக்கிட்டுப் போயிருச்சி..."

(தொடரும்)



மதுரை மாணவர்கள் இப்போது பரீட்சையில் பாஸ் செய்ய ஸ்பெஷல் பிரார்த்தனை நடக்கிறது - மீனாக்ஷி கோயிலில் சரஸ்வதி சன்னிதியில் வீணை வழிபாடு.

வெள்ளிக்கிழமை

வீணை வேண்டுதல்!



தோறும் இந்தச் சன்னதி எதிரே வீணைக் கச்சேரி மாலை ஆறரை மணிக்கு நடக்கும். பிரார்த்தனை செலுத்த விரும்பும் மாணவ - மாணவியர் தங்கள் பெயர் - நட்சத்திரத்தை எழுதிக் கொடுத்தால், கச்சேரி நேரத்தில் சன்னதி அருகே, கரும் பலகையில் எழுதி வைத்து விடுகிறார்கள். கட்டணம் எதுவும் கிடையாது.

கோயிலின் இணை கமிஷனர் பாஸ்கரன், அவரது நண்பர் டாக்டர் சின்னதுரை ஆகியோர் இணைந்து, கடந்த ஒன்றரை ஆண்டுகளாகச் செயல்படுத்தி வரும் நிகழ்ச்சி இது. "டாக்டர் சின்னதுரைதான் ஒருங்கிணைப்பாளர்" என்கிறார் பாஸ்கரன். "நமது நாடிகளில் மேதா நாடி என்று ஒரு நாடி இருக்கிறது. இது நம் அறிவுக்கான நாடி. இசை கேட்கும்போது இந்த நாடி தூண்டப்படுகிறது. அதற்காகவே வீணை வழிபாட்டை ஆரம்பித்தோம்" என்கிறார் டாக்டர் சின்னதுரை.



• டாக்டர் சின்னதுரை



• பாஸ்கரன்

"கோயிலுக்கு வரும் பக்தர்களும் நின்று சற்று வீணை இசையைக் கேட்பார்கள், கரும்பலகையில் எழுதியுள்ள பெயரைப் படித்துப் பார்ப்பார்கள். இதன் மூலம் தோன்றும் நல்லதிர்வுகள், மாணவர்களிடத்தில் நம்பிக்கையை உண்டாக்கும்..." என்கிறார். எலும்பு சிகிச்சை நிபுணரான டாக்டர் சின்னதுரை, பி.ஏ. மியூசிக்கில் தேர்ச்சியுற்று வாய்ப்பாட்டும் கற்றுக் கொண்டவர்!

செய்தி, படம் : சத்யா வெங்கட்



நெருப்பில் தோன்றிய நடனம்!

"தத்தெய்தாம்... திந்தெய்தாம்..."

தீவிரமான முனைப்போடு நாட்டியப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார் அந்தப் பெண் மணி.

தொலைபேசி அலறுகிறது! பேரிடியான செய்தி!

லதா பாதா என்ற அந்த நடனமணியின் கணவரும், இரு டீன் ஏஜ் மகள்களும் கனடாவிலிருந்து இந்தியாவுக்கு வரும்போது, அவர்கள் வந்த விமானம் வன்முறையாளர்களின் குண்டு வெடிப்புக்கு இரையாகிக் கடலில் வீழ்ந்து விட்டதாம்!

வாழ்வே இருண்டு போன அந்த நெருப்பு நொடி முதல், அந்தத் தாய், அந்த மனைவி, துடித்த துடிப்பு மாபெரும் நாட்டிய நாடகமாக அடுத்த ஒன்றரை மணி நேரம் நம் கண்முன் விரிகிறது. தன் துயரக் கதையைத் தானே ஆடுகிறார் லதா!



• லதாபாதா

இளம்பெண்கள் ஐந்தாறு பேர் ஓடி வருகிறார்கள். அவர்களும் லதாவும் பின்னணியில் அரக்கும் மஞ்சளுமாக, மங்கல வண்ணங்களில் தொங்கும் சேலைகளை உருவி வீழ்த்துகிறார்கள். பின்பு அவற்றையே போர்வையாகவும், சிறகாகவும், முக்காடாகவும் மாற்றி மாற்றிக் காட்டி, நெஞ்சை முறுக்கிப் பிழியும் துயரின் இறுக்கத்தைச் சேலையில் முறுக்கிப் புரிய வைக்கிறார்கள்.

லதாவின் வாழ்க்கை முழுதும் அவரது மனக் கண்ணில் காட்சிகளாக ஊர்வலம் வருகின்றன.


இதில் கையாளப்பட்ட நாட்டிய அசைவுகள், அபிநயம் பெரும்பாலும் சம்பிரதாயமான பரதநாட்டியத்தைச் சார்ந்தவை என்றாலும், சமகால நாட்டியம், நாடக உத்திகள், வசனம், உடற் பயிற்சி என்று, எல்லாமே பொருத்தமாக இடம் பெற்றிருக்கின்றன. பெண்கள் உற்சாகமாகத் தானம் தப்பாமல் மேடையில் குட்டிக் கரணம் அடிக்கிறார்கள், ஓடிச் சாடுகிறார்கள்.

கனடாவில் கடந்த முப்பத்தொன்பது ஆண்டுகளாக வசித்து வரும் லதா பாதாவும், அங்குள்ள மேற்கத்தியக் கலைஞர்கள், தொழில் வல்லுனர்கள் அடங்கிய குழுவும் இணைந்து, ஒவ்வொரு நொடியையும் வடிவமைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவிலும் கனடாவிலும் ரசிகர்களைப் பிரமிப்பில் ஆழ்த்திய இந்த நிகழ்ச்சி, இந்தியாவின் முக்கிய நகரங்களிலும் பார்வையாளர்களை அசர வைத்திருக்கிறது. லதாவின் "சம்பிரதாய நாட்டியப் படைப்பு" அமைப்பும், சென்னை டச்சஸ் க்ளப் அமைப்பும் இணைந்து சென்னை மியூசிக் அகாடமி அரங்கில் நவம்பர் 29ம் தேதி இந்நிகழ்ச்சியை வழங்கினார்கள்.

1985ம் ஆண்டு "கனிஷ்கா" விமானத்தில் உயிரிழந்த 329 பயணிகளின் நினைவுக்கு அஞ்சலி இந்த நாட்டிய நாடகம்!

- ஸுஜாதா விஜயராகவன்



அக்னிசர்மா பக்கம்

மேஷம்

- தெளிவான மனநிலை.
- சரளமான பணவசதி.
- உத்தியோகத்தில் அனுகூலம்.
- புதிய தொழில் முயற்சி.
- ஆரோக்கிய மேன்மை.

ரிஷபம்

- குடும்பத்தில் மகிழ்ச்சி.
- புதிய பொருள் சேர்க்கை.
- மாணவர்கள் முன்னேற்றம்.
- சுயதொழில் மேன்மை.
- வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும்.

மிதுனம்

- பழைய கடன் தொல்லை தீரும்.
- கூட்டுத் தொழிலில் ஆதாயம்.
- தெய்வபலம் அதிகரிக்கும்.
- சுப காரிய முயற்சி கூடி வரும்.
- கிரக வழிபாடு நலம் தரும்.

கடகம்

- மக்களால் மகிழ்ச்சி.
- உற்சாகமான மனநிலை.
- புனித யாத்திரை அமையும்.
- கலைத் துறைக்காரர்கள் சாதிப்பார்கள்.
- பெண்களின் நோக்கம் நிறைவேறும்.

சிம்மம்

- எதிர்பார்த்த செய்தி வந்து சேரும்.
- உத்தியோகத்தில் சிறு தடைகள், அலைச்சல்.
- பொருளாதார நெருக்கடி தீரும்.
- தெய்வப் பிரார்த்தனை பலன் தரும்.
- கணவன் - மனைவி அன்பு பலப்படும்.

கன்னி

- வாழ்க்கைத் துணையின் நலத்தில் கவனம் தேவை.
- அரசுப் பணியாளர்கள் மேன்மை அடைவார்கள்.
- வெளிநாட்டுப் பயணம் அமையும்.
- சுய தொழிலில் திருப்தி தரும் திருப்பம்.

நடக்குமென்பார்

நடக்கும்!

டிசம்பர் 17 முதல் 23 வரை

- உல்லாசமான மனநிலை.

துலாம்

- அதிர்ஷ்டமான வாரம்.
- உத்தியோகத்தில் உயர்வான சூழ்நிலை.
- பிரபு தனவான்களின் ஆதரவு.
- தாராளமான பண நடமாட்டம்.
- சுபமங்கள நிகழ்வுகள்.

விருச்சிகம்

- உத்தியோகத்தில் திறமை.
- அனுகூலமான பயணம்.
- ஆதாயமான கூட்டுத் தொழில்.
- எடுத்த காரியத்தில் வெற்றி.
- எதிர்ப்புகள் மறையும்.

தனுசு

- மங்களக் காரியங்கள் நிறைவேறும்.
- தெய்வீக ஈடுபாடு.
- குடும்பத்தில் மகிழ்ச்சி.
- உணவு சம்பந்தப்பட்ட தொழில் முன்னேறும்.
- சாமர்த்தியம் கூடும்.

மகரம்

- மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.
- எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.
- துணிவு, தன்னம்பிக்கை கூடும்.
- குல தெய்வப் பிரார்த்தனை நிறைவேறும்.
- கணவன் - மனைவி உறவில் மகிழ்ச்சி.

கும்பம்

- மக்கள் நலன் சந்தோஷம் தரும்.
- ஞான மார்க்கத்தில் நாட்டம்.
- ரியல் எஸ்டேட் லாபம் தரும்.
- பதவி உயர்வு ஏற்படும்.
- தான தருமம் நலம் தரும்.

'கோலங்கள்' இயக்குநர் திருச்செல்வத்துக்கு (விருச்சிகம்) எடுத்த காரியத்தில் வெற்றியாமே!



மீனம்

- சொத்து விவகாரம் தாமதமாகும்.
- எதிர்பாராத செலவுகள் காத்திருக்கின்றன.
- உடல் நலனில் அக்கறை தேவை.
- புதிய முயற்சியைத் தவிர்க்கவும்.
- பயணத்தில் கவனம் தேவை.

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

கலியுகத்திலே ரத்தினம், மணி, பொன் இவற்றில் யாருக்கும் ஆசை இராதாம்... ஏனடா என்று கேட்டால், இவையெல்லாம் ஒருவரிடம் இருந்தால் தானே! வாங்குவதற்குண்டான சக்தி இருக்க வேண்டும் அல்லவா! அப்போது தானே அந்தப் பொருளுக்கு நாம் ஆசைப்படலாம்! பின்னே, கலியுகத்தில் எல்லோரும் என்ன பண்ணுவார்கள், என்று கேட்டால், சிகை அலங்காரப் பிரியர்களாக இருப்பார்களாம்! இவர்களிடத்தில் இருக்கக் கூடியது கேசம்! அதை விதவிதமாக அலங் காரம் பண்ணிக் கொண்டிருப் பார்களாம்!

– இதை பராசர மஹரிஷி, விஷ்ணுபுராணத்திலே மிக அழ காகச் சொல்லியிருக்கிறார்; அடி யேன் சொல்லவில்லை!

சாஸ்திரம் இதை எடுத்துச் சொல்கிற அழகை நாம் கவனிக்க வேண்டும். சிகை அலங்காரம் எப்படி இருக்க வேண்டும் என்று விவரமாக எடுத்துச் சொல்கிறது. ஸ்த்ரீகள் நேர் வகிடு எடுத்துக் கொள்ள வேண்டும். கோணல் வகிடு எடுக்கக் கூடாது. கூந்தலை இரண்டாகப் பிரிக்கக் கூடாது. இரட்டைப் பின்னல் கூடாது என்கிறது! அவ்வாறு பிரித் தால், கிருஹமும் இரண்டு படும்! கேசத்தை எப்போதுமே அவிழ்த்து விடக் கூடாது; ஸ்நானம் செய்த பிறகு, கீழே ஜலம் விழும் படி முடிந்து கொள்ளக் கூடாது. – இப்படி பல நியமங்கள் சாஸ்தி ரங்களில் – அவற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஸ்நான அறையிலிருந்து கூந்தல் சொட் டச் சொட்ட கிருஹத்துக்குள் வரலாகாது... ஏனென்றால், இறந்து போனவர்களுக்குப் பத்து நாள் கர்மா பண்ணுகிறபோது, வஸ்தி ரத்தில்தான் பிரேதத்துக்குத் தீர்த்தம் கொடுக்க வேண்டும். ஆகவே, ஒருத்தர் நன்றாயிருக்கும்போதே ஜலம் சொட்டிக் கொண்டு வரலாகாது. நன்றாகத் துடைத்து, துவட்டிக் கொண்டுதான் வரவேண்டும். – இப்படியெல்லாம் சாஸ்திரம் வலியுறுத்து கிறது.

இதையெல்லாம் கடைப்பிடித்துக் கொண்டிருக்க முடியுமா? என்று கேட்டால், அவ்வாறு கேட்பவர்களைத்தான் பாஷாண்டிகள் என்று கூறுகிறது சாஸ்திரம்! இவ்வாறு பாஷாண்டிகளாக இருப்பவர்கள் உலகத்துக்கே அதிபதியாக இருக்கும் எம்பெருமானை வணங்கமாட்டார்கள் என்கிறார் பராசர மஹரிஷி.


'எப்போது இப்படியெல்லாம் நடக்கும்?' என்று மைத்ரேயர் பராசர மஹரிஷியிடம் கேட்கிறார்.

"கலியுகம் வந்துவிட் டது என்று தெரிந்து கொள்ள வேண் டும் - இந்த மாதிரி பாஷாண்டிகள் கேள்வி கேட்பது கலியுகத்திலேதான் நடக்கும்..." என்று சொல்கிறார் பராசர மஹரிஷி.

'ந விஷ்ணு: கீர்த்தயேத் விஷ்ணும்' என்று சொல்ல வந்த பராசர மஹரிஷிதான் இத்தனையும் சொல்கிறார்.

விஷ்ணுவினுடைய அனுக்கிரஹம் இல்லாமல் அவனைக் கீர்த்தனம் பண்ண முடியாது.

'ந விஷ்ணு: அர்ச்சயேத் விஷ்ணும்–' அந்த பகவானுடைய திருவடியில் புஷ்பத் தால் அர்ச்சனை பண்ணவேண்டுமானால்,



20

அவனுடைய அனுக்கிரஹம் இருந்தால்தான் அதுவும் சாத்தியமாகும்.

அதே மாதிரி ஸ்மரணம்... எப்போதும் அவனை தியானம் பண்ணுதல் - ஸந்தத தாரையாக - அறுபடாமல் அவன் நினைவு நம்முன்னே இருக்க வேண்டுமானால், அதற்கும் அவனுடைய அனுக்கிரஹம்தான்

சிந்திக்க வேண்டும்.

ஆழ்வார் சொல்கிறார்: எனக்கு ஞானமாகிற சிறந்த கையைக் கொடு... ஞானமாகிற சிறந்த கை என்னிடத்திலே இருந்துவிடுமானால், என் மனது நாலா விதத்திலே ஓடுமோ? சலிக்குமோ? நீதான் அதற்கு அனுக்கிரஹம் பண்ண வேண்டும் என்று பகவானிடத்திலே அசையாத பக்தி ஏற்படவும் அவனையே வேண்டிக் கொள்கிறோம்.

'ரக்த: பரமாத்மனி விரக்த: அபரமாத்மனி'. அந்த எம்பெருமானைத் தவிர மற்ற விஷயங்களிலே புத்தியானது செல்லாத நிலை... அந்த நிலையிலே தோய்ந்து, அவன் திருவடியிலே அர்ச்சனை பண்ணினால், பரம சந்தோஷத்தை அவன் அடைகிறான்.

இப்படியாக பரமாத்ம சப்தத்துக்கு ஏற்றம்.

முக்தானாம் பரமா கதி: - ஒரே பரம சப்தம்தான் சஹஸ்ரநாமத்திலே.

முக்தானாம் பரமா கதி: உயர் கதியாய் இருக்கக் கூடியவன், உயர்கதியைத் தரக்கூடியவன் பரமாத்மா.

யாருக்கு...? யாருக்கு உயர் கதி?..

நாமெல்லாம் சம்ஸாரிகள் என்று பெயர், உலகத்திலே. நித்ய சம்ஸாரிகளாக அலைந்து கொண்டேயிருக்கிறோம். ஆதலால், பகவத் விஷயத்திலே விசேஷமாக ஈடுபட முடிவதே இல்லை. பலவிதமான கஷ்டங்கள்; பலவித சிரமங்கள்.

அப்படிப் பல கஷ்டங்கள் சிரமங்கள் நாம் படும்போதும், அவன் பெயரை நாம் சொல்ல முடிந்ததென்றால், அவன் அனுக்கிரஹம் இருப்பதால்தான் நடக்கிறது.

இந்த மாதிரி சாயங்கால வேளையிலே இரண்டு மணி நேரம் நாம் சத்ஸங்கமாகக் கூடுகிறோம் என்றால், அது பசுவுக்குத் தடி கட்டிவிட்டதுபோல் என்றார்கள்!

ஒரு மந்தையிலே நூறு பசுக்கள் இருக்கின்றன. நூறு பசுவிலே ஒரு பசு திருட்டுப் பசு! அது புல்லை மேயாது; பயிரைத்தான் மேயும். அதன் புத்தி அப்படி...! சடாலென்று கோஷ்டியை விட்டுவிட்டுப் போய்விடும் அந்தப் பசு. போய், யார் வயலிலாவது பயிரை மேயும். அந்த விவசாயி அந்தப் பசுவைப் போட்டு நன்றாக அடிப்பான். அடிபட்டுக் கொண்டு வீடு வந்து சேரும் அது!

இது ஏன் இப்படி அடிபடுகிறது என்று வருத்தப்படுவான் பசுவை உடையவன். புல்லைப் போய் மேயாமல் அநியாயமாகப் பயிரைப் போய் மேய்கிறதே என்று பார்த்தான்... ஆனால் இது இப்படியே தான் பயிர் மேயப் போகும்.

> ''ரசிகர்களெல்லாம் எந்திரிச்சுப் போறாங்க. அவங்களைத் தடுத்து நிறுத்தணும்னா ஒரே ஒரு வழிதான் இருக்குது. செய்வீங்களா..?''
>
> ''சொல்லுங்க செய்யறேன்...!''
>
> '' 'மன்மதராசா...' பாடணும்..?''
>
> — இடைப்பாடி ஜெ. மாணிக்கவாசகம்

அந்தப் பசு, கோஷ்டியை விட்டுப் போகக் கூடாது என்பதற்காக ஒரு நாள் அவன் என்ன பண்ணினான்... அதன் காலில் ஒரு கயிற்றைக் கட்டி, அதிலே பெரிய மரக்கட்டையைக் கட்டித் தொங்க விட்டு விட்டான்! அது எங்கேயாவது வேகமாகப் போயிற்று என்றால், கட்டை வேகமாக ஆடும். ஆடினால், அதன் பின்னங்கால் இரண்டிலும் முட்டியிலும் அடிக்கும்! அடித்தால் ரொம்ப வலிக்கும் அல்லவா...? அப்புறம் அது வயலுக்கு ஓடிப் போகவே போகாது.


அந்த மாதிரி, நம் இந்த்ரியங்கள் இருக்கின்றனவே... அவை வீணான காரியங்களில் ஓடுகின்றன. இப்போது சஹஸ்ரநாமம் என்கிற தடி கட்டிவிட்டிருக்கிறது நமக்கு...

இப்போது நாம் வேறு விஷயங்களில் போகாமல் சத் விஷயத்தில் ஈடுபட வேண்டுமென்றால், அதற்கும் அவன் சங்கல்பம் வேண்டும். அவன் சங்கல்பித்து, 'இவன் இதைக் கேட்க வேண்டும், இவன் இதைச் சொல்ல வேண்டும்' என்று நிர்ணயித்தால் நடக்கும். இதைத்தான் மகான்கள்

அனுபவ பூர்வமாக நமக்கு எடுத்துக் காட்டுகிறார்கள்.

நாமெல்லாம் சம்சாரிகள் என்று சொன்னேன். நம்மைக்காட்டிலும் விலக்ஷணமானவர்கள், சம்சாரிகளாக இருந்து கொண்டே, இந்த லோகத்திலே இருந்து கொண்டே, எம்பெருமானை அடைவதற்கான அந்த உயர்ந்த காரியத்தைப் பண்ணுகிறார்கள். இவர்களுக்கு முமுக்ஷுக்கள் என்று பெயர். முமுக்ஷுக்கள் என்றால் மோக்ஷத்தை விரும்புபவர்கள்.

தர்ம - அர்த - காம - மோக்ஷம் - இதிலே தர்ம - அர்தம் இரண்டையும் ஒன்றாகக் காட்ட வேண்டும். காமம் - மோக்ஷம் என்று தனிப்படுத்தணும்.



அர்தம் என்பது பொருள். இந்தப் பொருள் இருக்கிறதே... இதை நாம் தர்ம மார்க்கத்தில் ஈட்ட வேண்டும். தர்ம மார்க்கத்திலே அது செலவிடப்பட வேண்டும். தர்மத்தைப் பற்றியே பொருள் இருந்ததானால், பொருளுக்கு ஏற்றம்.

தர்மம் என்பது குடும்பத்தில் முதல் பிள்ளை மாதிரி. மூத்தவனுக்குக் கேடு ஏற்பட்டால், குடும்பத்தில் மற்ற சகோதரர்களால் பயனில்லை. தர்மத்துக்குக் குறைவு ஏற்பட்டால் அர்தம் - பொருள் - அழியும்! ஆகவே அர்தம், எப்போதும் தர்மத்தோடு சேர்ந்தே இருக்க வேண்டும்.

நமது காமம் இருக்கிறது பாருங்கள்... இச்சை... அது மோக்ஷத்திலே குறியாக இருக்க வேண்டும். அதற்குண்டான காரியத்தை நாம் இந்த உலகிலே பண்ணிக் கொண்டேயிருக்க வேண்டும். இவ்வாறு பண்ணிக் கொண்டேயிருப்பவர்களுக்குத் தான் முமுக்ஷுக்கள் என்று பெயர் - பிரபன்னாள் என்போம். பிரபன்னர்கள் என்றால், அத்தகையவர்களை பகவான் தானே அழைத்துக் கொண்டு போய் முக்தியைக் கொடுக்கிறான் வைகுண்டத்திலே.

இதைத்தான் 'முக்தானாம் பரமாகதி! என்கிறது சஹஸ்ரநாமம்.

கதி சிந்தனம் என்று இதற்குப் பெயர். சுவாமி தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் இது குறித்து ஓர் அதிகாரமே எழுதியிருக்கிறார். கதிக்கான வழியை நினை என்கிறார். அந்த வழியை நினைப்பதே ஓர் அழகு.

திருவேங்கட யாத்திரை போலே, அர்ச்சிராதி மார்க்கம் போலே, அக்ரூரர் பயணம் போலே... என்று ஆசார்யர் எழுதுகிறார்...

திருவேங்கட யாத்திரை போகிறவர்கள் அதையே யோசனை பண்ணிக் கொண்டிருப்பார்களாம். எல்லோரும் "கோவிந்தா! கோவிந்தா" என்று சொல்லிக் கொண்டு போவார்களே... பாதை வளைந்து வளைந்து உயர ஏறிச் செல்லுமே, அதிலே ஏறி நாம் போக வேண்டுமே' என்று நினைக்கும் போதே ரொம்ப இன்பம் ஏற்படும்.

அதே மாதிரி அர்ச்சிராதி மார்க்கம் - மோக்ஷ வழியை நினைக்கவேண்டும்.

அக்ரூரர், கம்ஸனையும் பலராமனையும் மதுராபுரிக்கு அழைத்துக் கொண்டு வருகிறார்... கம்ஸனுடைய ஆக்ஞையின் பேரில் ரதத்தில் ஏற்றி அழைத்து வருகிறார்... அப்போது அவர் வழி நெடுக சிந்தனை பண்ணிக் கொண்டு வருகிறார்: அந்த எம்பெருமானை எப்போது பார்க்கப் போகிறேன்... அவன் திருமுக மண்டலத்தைப் பார்க்கும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்ததே! அவனோடு பேசி உரையாடுவேனோ...' என்றெல்லாம் நினைத்து நினைத்து உருகியபடி வருகிறாராம்.

சற்று நேரம் பலராமனையும் கம்ஸனையும் ரதத்திலே உட்கார வைத்துவிட்டு இவர் போய் மாத்யானிகம் பண்ணிவிட்டு வருகிறேன் என்று போகிறார்... போனால், அங்கே நதியின் ஜலத்துக்குள்ளே ஆச்சர்யமான காட்சியைக் காண்கிறார்...

(வளரும்)

'மனோகரமான' மாலைப் பொழுது!



"கல்கியின் சிவகாமியின் சபதத்தைப் படித்தால் அதிலே நாம் தோயலாம்; பொன்னியின் செல்வனை வாசித்தால் அந்தப் பெருங் கதையைச் சுவைக்கலாம்; அலை ஓசையைப் படிக்கும்போது அதை மகிழ்ந்து ரசிக்கலாம்... ஆனால் இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது கல்கியின் பல நாவல்களையும் படித்த அனுபவத்தை நாம் ஒரு சேரப் பெற முடியும்...'' – திருப்பூர் கிருஷ்ணன் இவ்வாறு குறிப்பிட்டது 'அமரர் கல்கி பாடல்கள்' புத்தகம் பற்றி...

சொற்சித்திரங்களான முப்பத்தைந்து கவிதைகளும், சித்திரக் கவிதைகளாக அவற்றுக்கு ஓவியர் வேதாவின் படங்களும் அடங்கிய அந்நூல், டிசம்பர் 5, கல்கி நினைவு நாளன்று வெளியிடப்பட்டது.



• நூல் வெளியீடு

அகவத் நாராயணன் (இவர் கே.வி. நாராயணசாமி - பத்மா நாராயணசாமியின் சிஷ்யர்) வினாயகர் துதிபாட, ஆனந்தி வரவேற்புரை வழங்க, நிகழ்ச்சி தொடங்கியது.

பாடல்கள் சிலவற்றில், எழுத்தாளர் கல்கி சிறுகதை யுக்தியைக் கையாண்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார், சிறப்புரை ஆற்றிய திருப்பூர் கிருஷ்ணன். "பல்வேறு பணிகளுக்கிடையே கல்கி எழுதிய பாடல்கள் எண்ணிக்கையில் குறைவாயிருந்தாலும், கவிநயத்தில் உயர்வாய் இருக்கின்றன. எளிமையான சொற்கள் அவர் கற்பனை வீச்சினால் பொலிவு பெறுகின்றன... கவிதை எழுதுவதை முழுநேரப் பணியாகக் கொண்டிருந்தால், கல்கி ஒரு மிகச் சிறந்த கவிஞராக உருவாகியிருக்கக் கூடும் என்பதற்கான சான்று, 'அமரர் கல்கி பாடல்கள்' புத்தகம்...'' என்றவர், பதிப்பாளர் வானதி திருநாவுக்கரசையும்



• திருப்பூர் கிருஷ்ணன் - வேதா

யின் பிற படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டு வெற்றி அடைந்துள்ளன. ஆனால் இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்க முடியாது... மொழியும் உணர்வும் பின்னிக் கிடக்கிற கவிதைகளை வேற்று மொழியில் வழங்கினால், அவற்றின் அழகும், உணர்ச்சியும் மாறிவிடும்" என்றவர், அங்கும் இங்கும் சிதறியிருந்த பாடல்களைத் தொகுத்து நூலாக்கிய முயற்சியை வாழ்த்தினார். கல்கியின் பாடல்களைப் பாடிய மாபெரும் கலைஞர்களான எம்.எஸ்.ஸையும், டி.கே. பட்டம்மாளையும், எம்.எல். வசந்த குமாரியையும் நினைவு கூர்ந்தார்.



• வானதி திருநாவுக்கரசு

ஓவியர் வேதாவையும் மனமார வாழ்த்தினார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய நல்லி குப்புசுவாமி ஒரு படி மேலே சென்று, பக்க எண்களைக் குறிப்பிட்டு வேதாவின் ஓவியங்களை வியந்தார். அமரர் கல்கியின் தேச பக்தியும், தெய்வ பக்தியும் பாடல்களில் வெளிப்படுவதையும், அனைத்துப் பாடல்களும் இசைக்கத் தகுந்தவையாக அமைந்திருப்பதையும் குறிப்பிட்டார். "இவற்றைக் கவிதைகள் என்று சொல்வதைக் காட்டிலும், கீதங்கள் என்று சொல்வது பொருந்தும். அரவிந்தரின் கவிதைகள் போல் கல்கியின் கீதங்களும் ஞான முதிர்ச்சியில் வெளிப்படும் ஆன்ம அனுபவங்கள். கல்கி



• நல்லி குப்புசுவாமி



• இறை வணக்கம் பாடிய அகவத் நாராயணன்



• கமலா மூர்த்தி

நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட சுதா ரகுநாதன், 'மாலைப் பொழுதினிலே ஒரு நாள்...' என்று பாட ஆரம்பித்த போது, ஏற்புரையாக அந்தப் பாட்டைத்தான் பாடப் போகிறார் என்று அனைவரும் எதிர்பார்த்திருக்க, முதல் வரியோடு நிறுத்தி விட்டு, 'மனம் நிறைந்து உணர்ச்சி மேலிடுகிறது...' என்று சிற்றுரை ஆற்றினார். இறுதியாக, 'பொன் மயில் ஏறி வருவான்...' என்று காபி ராகத்தில் முழுப் பாடலையும் அவர் உணர்ச்சியோடு பாடியது, பார்வையாளர்களுக்குத் திருப்தியும் பெரு மகிழ்ச்சியும் ஏற்படுத்தியது.

நூல்வெளியீட்டு விழாவை நடத்திய கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை, பதிப்பாளர், ஓவியர், பதிப்பில்

உதவிய சுப்ர.பாலன் ஆகிய மூவரையும் மேடைக்கு அழைத்துக் கௌரவித்தது.

தமிழ்க் கடவுள் முருகன், அவனது மாமன் திருமால் ஆகிய இருவரையும் தான் கல்கி அதிகமாகப் பாடியிருக்கிறார் என்பதைச் சொன்னவர் கமலா மூர்த்தி.



நூல் வெளியீட்டு விழாவைத் தொடர்ந்து, 'வள்ளி கல்யாணம்' ஹரிகதை வழங்கிய தஞ்சாவூர் கமலா மூர்த்தி, அன்றைய நிகழ்ச்சியில் அமரர் கல்கியின் இரண்டு பாடல்களைப் பொருத்தமான இரு இடங்களில் அழகாகக் கோத்து வழங்கியபோது, ரசிகர்கள் ஆனந்தப் பட்டார்கள். 'பூங்குயில் கூவும் பூஞ்சோலையில் ஒரு நாள்...' பாடலை அவர் முழுதும் பாடவும், அந்த ஹரிகதைக்கென்றே எழுதப்பட்டது போல் அது பொருத்தமாக அமைந்தது.

அமரர் கல்கியே சிறு வயதில், கால்களில் சதங்கை கட்டிக் கொண்டு ஹரிகதை செய்தவர்தான். பழங்கலைகளையும், பாரம்பரியத்தையும் போற்றிய அவரது நினைவாகவே, "வள்ளி கல்யாணம்" ஹரிகதை நிகழ்ச்சியை அறக்கட்டளையினர் பருப்புத் தேங்காய், பழம், பாக்கு வெற்றிலை முதலிய சீர்களுடன் ஏற்பாடு செய்திருந்தனர்.

தஞ்சை ஹரிகதை பரம்பரையைச் சேர்ந்த கமலா மூர்த்தி, இனிய குரலில் பாடி, பக்தியோடு விவரித்த வள்ளி திருமணத்தில், நவரஸங்களும் பொதிந்திருந்தன. அருட்பிரகாச வள்ளலார், அருணகிரிநாதர் பாடல்கள், தவிர வடமொழி சுலோகங்களையும் அன்று கேட்க முடிந்தது.

''வள்ளிக் கிழங்குகளிடையே கண்டெடுக்கப்பட்ட குழந்தை என்பதால் வள்ளி... _ இது ஒரு விளக்கம். முருகன், நாம் கேட்ட வரம் தரும் வள்ளல்... அவன் தேவி என்பதால் அவள் வள்ளி!'' என்பது போன்ற மகிழ்ச்சியான கற்பனை.

''முருகன் அழைத்ததும் அண்ணா விக்னேசுவரன் பல யானைகளாக உருக்கொண்டு வந்து விட்டான் _ இப்போது தான் யானையெல்லாம் ஹனி மூன் போயிருக்கு... அந்தக் காலத்தில் அது கிடையாது...'' என்பது போன்ற மெல்லிய நகைச்சுவை.

நிறைய வர்ணனை, கொஞ்சமாக தத்துவம் என்று வள்ளி கல்யாணம் நடந்து முடிந்தது. ஆழ்வார்பேட்டை, ஆஸ்திக சமாஜம் அரங்கில் மிகப் பொருத்தமாக, இலக்கியமும் பக்தியும் இணைந்த இந்நிகழ்ச்சி நடந்தது.

வீடு திரும்பு கையில், கல்யாண 'பட்சணமாக' மனோகரம் தந்து அனுப்பி வைத்தனர் கல்கி அறக்கட்டளையினர். மனோகரம் கல்கிக்கு மிகவும் பிடித்த இனிப்பு வகையாம்!

— தேவி

படங்கள்: ஸ்ரீஹரி

அமரர் கல்கி பாடல்கள் -
வானதி பதிப்பகம்,
சென்னை - 600 017.
விலை ரூ. 35/-





• ஸ்டீவ் பக்னர்

வேண்டு இன்னொரு அம்பயர்!

சச்சின் டெண்டுல்கர் மீண்டும் ஒருமுறை புகழுச்சிக்கு ஏற, சந்தேக மேகங்களில் தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறார் அம்பயரான ஸ்டீவ் பக்னார். சமீபத்தில் கப்பாவில் நடைபெற்று ட்ராவில் முடிந்த போட்டியில், சச்சினுக்கு எல்.பி.டபிள்யூ என்று இவர் அளித்த தீர்ப்பு கடும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது.

மறுபேச்சுப் பேசாமல் சச்சின் வெளியேற, "டெக்னிக்கில் மட்டுமல்ல, ஒரு கனவானாக நடந்து கொள்வதிலும், சச்சின் டான் ப்ராட்மெனுக்கு ஒப்பானவர்" என்று விமர்சகர்கள் புகழ்ந்து தள்ளுகிறார்கள்.

தவறான தீர்ப்பளித்தாகக் கருதப்படும் பக்னாரின் வயது நாற்பத்தேழு. கடந்த உலகக் கோப்பைப் போட்டிகளிலும் நடுவராகப் பணிபுரிந்தவர். சச்சின் அவுட்டானதைப் பற்றி விவாதிக்க மறுக்கும் அவர், 'எனது திறமைமீது வீணாகக் களங்கம் சுமத்தப்படுகிறது. கடந்த உலகக் கோப்பையின்போது என் அம்பயரிங் குறித்து யாராவது ஒரு வார்த்தை தவறாகப் பேசினார்களா? இதிலிருந்தே என் நடுநிலைமை புரியவில்லையா?" என்று கேட்கிறார்.

யாரும் தவறாகப் பேசவில்லை என்றாலும் தன் முடிவுகளை அறிவிக்க இவர் அதிக நேரம் எடுத்துக் கொள்வது உண்மை. அதுவும் எல்.பி.டபுள்யூ. என்றால், அந்த முடிவை அறிவிக்க இவர் எடுத்துக் கொள்ளும் அதிகப்படி நொடிகள், விளையாடும் இரு தரப்பினருக்குமே ரத்தக்கொதிப்பை அதிகமாக்கக் கூடியவை.

"இதற்காக என் மூளை மெதுவாக வேலை செய்கிறது என்று பொருளல்ல. உடனடியாக மனத்தில் ஒரு தீர்மானம் தோன்றிவிடும். என்றாலும் வேறு என்ன நடந்திருக்கக்கூடும் என்று யோசித்துப் பார்த்துவிட்டு, முடிவை அறிவிக்கிறேன். இதிலென்ன தப்பு?" என்பது இவரது கேள்வி.

எல்.பி.டபிள்யூக்கள் தொடர்பாக சந்தேகம் எழுந்தால்கூட, ஏன் மூன்றாவது அம்பயரின் உதவியை நாடக்கூடாது என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

மைதானத்திலேயே இன்னொரு அம்பயரை நியமிக்கும் யோசனையையும் சர்வதேச கிரிக்கெட் வாரியம் யோசித்துக் கொண்டிருக்கிறது. இந்த அதிகப்படி அம்பயர், 'நோ பால்'களை உன்னிப்பாகக் கவனித்து முடிவு கூறுவார். எனவே வழக்கமான அம்பயர், பேட்ஸ்மேனிடம் மட்டுமே முழுக் கவனத்தைச் செலுத்த முடியும்.

கடுமையான விமர்சனத்தைத் தொடர்ந்து, பக்னார் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறப் போகிறாரா? "அந்த மாதிரி எந்த எண்ணமும் எனக்கு இல்லை" என்கிறார்.

• குல்லூ

அரசியல் தலைவலி!

ஐயாயிரம் ஆண்டுகள். இந்தியா என்பது ஒரு கலாசாரத்தைக் குறித்தது. இந்தக் கலாசார ஒற்றுமைக்கு ஒரு முக்கியக் காரணம் இந்து மதம் என்பதை மறுக்க முடியாது. ஆனால் மற்றக் காரணங்களும் இருந்தன. உதாரணமாக நதிகள், இசை, பண்பாடு, மரபு, பழக்க வழக்கங்கள், கிராமியக் கலைகள் ஆகியவையும் காரணங்களாக இருந்தன. இந்தியாவின் பல பகுதிகளில் தனி நாகரிகங்கள் தோன்றி, பல நூறு ஆண்டுகள் ஓங்கி உயர்ந்திருந்தன. இவற்றுள் மிகப் புகழ் பெற்றது சிந்து சமவெளி நாகரிகம். சிந்து நதிக் கரையில் தோன்றிய நாகரிகம் போல, மற்ற நதிக் கரைகளிலும் நாகரிகங்கள் தோன்றி, உயர்ந்து, பிறகு மறைந்திருக்க வேண்டும்.

இந்தியாவில் பல அரசர்கள் இருந்தார்கள். எந்த ஓர் அரசனும் இந்தியாவை முழுமையாகத் தன்னுடைய அரசின் கீழ் கொண்டு வர இயலவில்லை. அசோகர், அக்பர் ஆகிய இருவரை மட்டுமே வரலாற்று ஆசிரியர்கள் 'சக்கரவர்த்தி' என்று வர்ணிக்கிறார்கள். ஆனால் இந்தச் சக்கரவர்த்திகள் கூட, முழு இந்திய நிலப் பரப்பைத் தங்கள் குடையின் கீழ் கொண்டு வர முடியவில்லை. தமிழ் இனம் செல்வாக்குடன் இருந்த காலத்தில் சேர, சோழ, பாண்டியர் என்று மூன்று அரசுகள் இருந்தன. பிற்காலத்தில் சாளுக்கிய, பல்லவர், நாயக்கர் என்று பல அரசுகள் அமைந்த போதிலும், தென்னிந்தியாவோ - அல்லது தமிழ்நாடோ - ஓர் அரசனின் ஆட்சிக்குள் அடங்கவில்லை.

ஆங்கிலேயர்கள் வணிகர்களாக இந்தியாவில் காலெடுத்து வைத்தபோது, இந்திய நிலப் பரப்பு பல நூறு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, பல நூறு மன்னர்களின் ஆட்சியில் இருந்தது. இந்தியாவின் சக்கரவர்த்தினி என்று பிரகடனப் படுத்தப்பட்ட முதல் அரசி விக்டோரியா மகாராணி. அப்போது கூட சில நிலப்பகுதிகள் பிரெஞ்ச் ஆதிக்கத்திலும், சில நிலப் பகுதிகள் போர்ச்சுக்கல் நாட்டின் ஆதிக்கத்திலும், சில நிலப் பகுதிகள் ஹாலந்து நாட்டின் ஆதிக்கத்திலும் இருந்தன.

1947ல் இந்தியா சுதந்திர நாடாக மலர்ந்தது. ஆயினும் 1948, 1956, 1960 என்று பல மைல் கற்களைக் கடந்த பிறகுதான் - 1960க்குப் பிறகுதான் - இந்திய நிலப்பரப்பு முழுவதும் ஓர் அரசின் கீழ் வந்தது. இந்த நாடு, இந்த நிலப் பரப்பு, இதன் நாகரிகம், இதன் வரலாறு, இதன் மரபுகள் அனைத்தும் நமக்குச் சொந்தம். இந்த நிலத்தில் வாழும் அனைவரும் இந்த நாட்டுக்கும், இதன் செல்வத்திற்கும், இந்த நாடு அளிக்கும் வாய்ப்புகளுக்கும் சொந்தம் கொண்டாட உரிமை பெற்றவர்கள். இவர்களில் யாரையும் நம்மவர் என்றோ, அந்நியர் என்றோ பிரிக்க முடியாது.

இந்திய நாட்டுக்கு உகந்த அரசியல் அமைப்பு எது என்று ஆய்ந்து, அறிந்து நம்முடைய மூதாதையர்கள் நமக்கு ஓர் அரிய ஆவணத்தை உருவாக்கித் தந்தார்கள். அதுவே இந்திய அரசியல் சாசனம். இந்த அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான துறைகளையும், ஜனநாயகத்தின் தூண்களையும், விதிகளையும், மரபுகளையும் இதுவரை ஆராய்ந்தோம்.

ஆனால், ஒரு விஷயத்தைப் பொறுத்தவரை, அதனை விதிகளுக்குள் கட்டுப்படுத்த முடியாது. அதுதான் அரசியல் கட்சிகள். அரசியல் கட்சிகளின் தோற்றத்தையோ, வளர்ச்சியையோ, எண்ணிக்கையையோ விதிகளைக் கொண்டு கட்டிப் போட முடியாது. ஒரு வாசல் அடைக்கப்படும்போது, இன்னொரு வாசல்



ப.சிதம்பரம்

நமக்கே உரிமையாம் 9



திறக்கப்படுவது இயற்கை. நிலப்பிரபுக்கள், பிராமணர்கள் மற்றும் உயர் சாதியினரின் கைகளில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி சிக்கிக் கொண்டபோது, திராவிடர் கழகம் (பிறகு திராவிட முன்னேற்றக் கழகம்) தோன்றியது. எந்த ஓர் அரசியல் கட்சிக்கும் 'ஏகபோகம்' என்ற நிலை ஏற்படும் போது, அதனை எதிர்த்து இன்னொரு அரசியல் கட்சி தோன்றுவதைத் தடுக்க முடியாது. சமுதாயத்தின் ஒரு சில பிரிவினர், அரசியல் அதிகாரத்தைத் தங்களுடைய 'ஏகபோகமாக' மாற்றிக் கொள்ள முயன்றால், அதனை எதிர்த்து மற்ற சமுதாயத்தினர் திரளுவார்கள் என்பதும் இயற்கையின் நியதியே. பின் தங்கிய சமுதாயத்தினரும், தலித் மக்களும் தங்கள் அரசியல் உரிமைகளை வலியுறுத்துவதற்காக, அரசியல் கட்சிகளைத் தொடங்குகிறார்கள்.

பல அரசியல் கட்சிகள் உள்ள நாட்டில், அரசியல் அதிகாரம் பகிர்ந்து கொள்ளப் படலாம். ஆனால், அந்தகைய அதிகாரப் பகிர்வு, நிலையான ஆட்சிக்கு – செயல்படும் ஆட்சிக்கு - குந்தகமாக அமைந்து விடும் அபாயம் இருக்கிறது. கடந்த ஐம்பது ஆண்டுகளில், குறிப்பிட்ட சில நாடுகளில் தான் அபரிமிதமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. அவை, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளும், இன்னும் சில நாடுகளும். இந்த நாடுகளுக்கிடையே வியப்பளிக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது. அது, இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும், இரண்டு பெரிய அரசியல் கட்சிகளே உள்ளன. மூன்றாவது, நான்காவது அரசியல் கட்சிகளுக்கு இடமேயில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால், தம் நாட்டை ஆளும் பொறுப்பை இரண்டு பெரிய அரசியல் கட்சிகளுக்குள் ஒன்றுக்கு மட்டுமே அந்த நாட்டு மக்கள் அளிக்கிறார்கள்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் நான்கு அல்லது ஐந்து முக்கிய அரசியல் கட்சிகள் உள்ளன. அவை மக்களின் வாக்குகளையும், அரசியல் அதிகாரத்தையும் பகிர்ந்து கொள்



அடிக்கடி ஏப்பம் வர ஆரம்பிச்சிருக்கு டாக்டர்...?"

"அரசியல் தகுதி இப்பத்தான் உங்களுக்கு வந்திருக்கு!"

- சீர்காழி வி.ரேவதி

கின்றன. ஆனால் இந்த அதிகாரப் பகிர்வின் விளைவாக நிலையான, செயல்படும் ஆட்சி அமைப்பதற்குப் பங்கம் ஏற்பட்டு விடாமல், அவர்கள் கூட்டணி ஆட்சியை அமைத்துக் கொள்கிறார்கள். ஓர் இனம், ஒரு மொழி, பெரும்பாலோர் ஒரு மதம் என்பது கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு உதவியான அம்சங்களாக இருந்து விடுகின்றன.

இந்தியாவில் இரண்டு பெரிய கட்சிகள் இருப்பது - இரண்டு பெரிய கட்சிகள் மட்டுமே ஆளும் தகுதியுடன் இருந்தால் - நன்மை என்பது என்னுடைய கருத்து. அத்தகைய இரண்டு கட்சிகளாக காங்கிரஸ் கட்சியும், பாரதிய ஜனதா கட்சியும் உருவாக எல்லோரும் விழைய வேண்டும். இந்தியா போன்ற ஒரு நாட்டை ஒரு தாராள குணமுடைய ஜனநாயகக் கட்சியே (Liberal Democratic Party) ஆள முடியும் என்று நான் நினைக்கிறேன். காங்கிரஸ் கட்சியில் இன்னும் நிறைய ஜனநாயகம் வேண்டும்; ஜனநாயக முறையில் கட்சித் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பாரதிய ஜனதா கட்சியில் இன்னும் நிறைய தாராள குணம் வேண்டும்; மதம், மொழி என்ற கூண்டுகளுக்குள்ளேயே அக்கட்சி அடைபட்டு விடக் கூடாது. இவற்றுள், ஒரு கட்சி கொஞ்சம் இடதுசாரியாகவும், (காங்கிரஸ்) மற்றொரு கட்சி கொஞ்சம் வலது சாரியாகவும் (பா.ஜ.க.) இருந்து விட்டால், இன்னமும் நன்மை பயக்கும். நான் விரும்பும் இரண்டு தாராள குணமுடைய ஜனநாயகக் கட்சிகள் இந்தியாவில் வேரூன்றி நிலைத்து விட்டால், இந்திய அரசுகளின் தன்மையும், தரமும், செயல்பாடும், வேகமும், பிரமிக்கத் தக்க மாற்றத்தை அடைந்துவிடும். அதற்குப் பிறகு, இந்தியாவின் வெற்றி நடைக்கு எந்தத் தடையும் இருக்காது.

அதைப் போலவே, ஒவ்வொரு மாநிலத்திலும் இரண்டு பெரிய கட்சிகள் இருந்தால் போதும். மூன்று முக்கியக் கட்சிகள் இருப்பதுதான் தமிழ் நாட்டுக்குத் தொடர்ந்து அரசியல் தலைவலியைத் தருகிறது. நான்கு முக்கியக் கட்சிகள் இருப்பதுதான், உத்தரப் பிரதேசத்தில் மோசமான ஆட்சிகள் தொடர்ந்து அமைவதற்குக் காரணம்.

இரண்டு முக்கிய அரசியல் கட்சிகள் இருக்கும் நாட்டில் - அல்லது மாநிலத்தில் - ஒன்று ஆளும் கட்சியென்றால், மற்றது எதிர்க்கட்சியாக இருக்கும். இருவருக்கும் அரசியல் பொறுப்பிருக்கிறது. இருவருக்கும் அரசியலில் வாய்ப்புகள் கிடைக்கும். ஆளும் கட்சி கிரியா சக்தி. எதிர்க்கட்சி இச்சா சக்தி. இரண்டு முக்கிய அரசியல் கட்சிகள் இருந்தால் ஆரோக்கியமான உறவுகளும், ஜனநாயக மரபுகளும் உருவாவதற்கு வாய்ப்புகள் உண்டு.

சிறிய கட்சிகளுக்கும் இடமிருக்கிறது. ஜெர்மனி போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் சுற்றுச் சூழல் பாதுகாப்பை முக்கியக் கொள்கையாக ஏற்று 'பச்சை கட்சிகள்' (Green Party) தோன்றி வளர்ச்சியடைந்துள்ளன. இவை அரசியலில் ஞான சக்தி.

ஜனநாயகத்தின் தூண்கள் - சட்டமன்றம், அமைச்சரவை, நீதித்துறை, தொலைத் தொடர்பு ஊடகங்கள் - நிலைத்து, உறுதியாக நிற்க வேண்டுமென்றால், இரு கட்சி அரசியல் முறை மிக அவசியம். இந்திய அரசியலில் இந்த மாற்றத்தைக் காண முடிகிறது. தமிழ் நாட்டில்?

(தொடரும்)



"இசைக் கருவிகளைத் தயாரிப்பது மற்றும் ரிப்பேர் செய்து வரும் எனக்கு, இசை உலகத்திற்கு ஏதேனும் செய்ய வேண்டுமென்று ஆசை. அதன் விளைவுதான் 'மகா சார்வபௌம வீணை'"

மகா சார்வபௌமம்..!



• வீணையுடன் நடராஜன்

என்கிறார் பெங்களூரைச் சேர்ந்த சின்னப்பா நடராஜன்.

இந்த வீணையின் எடை சுமார் எழுபது கிலோ. பத்தடி உயரம். இரண்டரை அடி அகலம். ஒரே மரத்தினாலான வீணை. இதைத் தூக்குவதற்கே எட்டுப் பேர் தேவைப்படுமாம். இதில் நடராஜன் யோசித்து யோசித்து ஒவ்வொன்றையும் செதுக்கியிருக்கிறார். "நம் சப்தஸ்வரங்களான ஸரிகம...விற்கு முறையே அக்னி, பிரம்மா, சரஸ்வதி... என தேவதைகள் இருக்கிறார்கள். ஒவ்வொரு 'நோட்'டிற்கும் மிருகங்கள் கூட உண்டு. அதைத் தான் தந்தியின் இருபுறத்திலும் 'கார்விங்' செய்துள்ளேன். நம் மும்மூர்த்திகளான தியாகராஜர், சியாமா சாஸ்திரி, தீட்சிதர், மூவரின் திருவுருவங்கள், லட்சுமி, விநாயகர், சரஸ்வதி, திருவள்ளுவர், அண்ணல் காந்தி, இந்திய வரை படம், மூவர்ணக் கொடி... என வீணையில் பொறித்திருக்கிறேன்" என்றுச் சொல்லும் நடராஜன், வீணை செய்யும்போது, பல ஆய்வுகளைச் செய்திருக்கிறார். இந்த மகா வீணையை எங்கே வைப்பது என்று ஆளாளுக்கு அட்வைஸ் கொடுத்திருக்கிறார்கள். இப்போது சிருங்கேரி மடத்தில் கண்ணாடிப் பேழையில் சாரதாம்பாளுக்குக் காணிக்கையாக, பார்ப்போரை வியக்க வைத்துக் கொண்டிருக்கிறது இந்த வீணை.

சங்கீதம் படிக்கும் மாணவர்களுக்கென்றே 'சங்கீத போதினி' என்ற புத்தகமும் எழுதியுள்ள நடராஜனுக்கு, சிறு வருத்தம். 'நாங்களும் இசை தெரிந்தவர்கள்தான்! ஆனால் பல கலைஞர்கள் எங்களுக்கு உரிய கௌரவம் கொடுப்பதில்லை. ரிப்பேர் செய்யும் வேலைக்காரர்களாகப் பார்க்கிறார்கள். அதிலும் தமிழ் நாட்டில் என் நண்பர்கள் பலருக்கு வித்வான்களால் அவமானம்! இந்த நிலைமை மாற வேண்டும்" என்கிறார்.

— லதா சேகர்



ஜொல்லு மல்லு

—கதிர்



என்னடா இது இன்விடேஷன்?
இசை விழாவில என்னோட கச்சேரி இருக்கு...
அப்படியா?
பெரிய கம்பெனியெல்லாம் என் கச்சேரிக்கு ஸ்பான்சர் பண்றாங்க...
வெரிகுட்.
நீ வேணுன்னா பாரு... கூட்டம் ஜேஜேன்னு வரப் போகுது.
ஏன் வரவங்களுக்கெல்லாம் ஜே.ஜே டிக்கெட் ஃப்ரீயா தராங்களா?
ம்... போன வருஷம் இசை விழாவுல நடந்ததைச் சொன்னா, நீயே ஆச்சரியப்படுவே.
என்ன நடந்தது?
நான் பாடின கல்யாணி ராகத்தைக் கேட்டுட்டு சுப்புடுவே மேடை ஏறி, நீ பாடின ராகத்துக்காகத்தான் இந்த மாலைன்னு சொல்லி கண் கலங்கிட்டாரு தெரியுமா?
சரியாத்தான் செஞ்சிருக்காரு. நீ கல்யாணி ராகத்தையே கொலை பண்ணியிருக்க. அதனாலதான் இறந்து போன ராகத்துக்கு மாலை போட்டுக் கண்ணீர் வடிச்சிருக்காரு...


"SEASON's BONANZA"
Kosmic Music's Proud Releases on 'Cassettes & CDs'
MASTER PIECE SERIES
and many more 'ARTISTES'
Semmangudi R. Srinivasa Iyer
Lalgudi G. Jayaraman
K. V. Narayanaswamy
Nedanuri Krishnamurthy
M. D. Ramanathan
Ranganayaki Rajagopalan
T. V. Sankaranarayanan
Maharajapuram Santhanam
CONCERT SERIES
and many more 'ARTISTES'
Live at Paris
Kunnakkudi Vaidhyanathan
Nithyasree Mahadhevan
Rama Ika Nannu
Kunnakkudi Vaidhyanathan
Entharomahanubhavulu
Kadri Gopalnath
Raghuvamsa Sudha
Kunnakkudi Vaidhyanathan
SUPER HIT COMPILATIONS
" VARIOUS ARTISTES"
Sri Raghuvara Vol. 1 & 2
Sambho Mahadeva Vol. 1 & 2
Sree Kanthimathim Vol. 1 & 2
Vaa Muruga Vaa Vol. 1 & 2
No.33, Shaffee Mohammed Road, Chennai - 600 006. India.
Tele : (+91-44) 5214 2500 (Multi Lines) web: www. kosmicmusic.com
Available on Cassettes & CDs. At all leading Music Shops

கல்கி அவர்களின் காலத்தால் அழியாத நாவல்கள்!!
கையடக்கப் பதிப்பாக மிகக் குறைந்த விலையில்!!!

பொன்னியின் செல்வன்

6 தொகுதிகள் 2728 பக்கங்கள் விலை ரூ. 390.00 **சலுகை விலை ரூ.195.00**

சிவகாமியின் சபதம்

4 தொகுதிகள் 1242 பக்கங்கள்
விலை ரூ. 200.00
சலுகை விலை ரூ. **135.00**

பார்த்திபன் கனவு

424 பக்கங்கள்
விலை ரூ. 49.00
சலுகை விலை ரூ. **45.00**

அலை ஓசை

4 தொகுதிகள்
1064 பக்கங்கள்
விலை ரூ. 175.00
சலுகை விலை
ரூ. **120.00**

தனித்தனியாகத் தபால் மூலம் பெற பொன்னியின் செல்வன்; சிவகாமியின் சபதம்; அலை ஓசை; பார்த்திபன் கனவு நூல்களுக்கான தபால் மற்றும் கட்டுச் செலவு முறையே ரூ.35, ரூ.25, ரூ.25, ரூ.10 ஆகும்.

நான்கு நூல்களையும் ஒரே சமயத்தில் தபால் மூலம் பெறுவது மிகச் சிக்கனமானது. அதாவது நான்கு நூல்களின் சலுகை விலை ரூ. 495.00, தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.65.00 சேர்த்து ரூ.**560.00** மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூல்களைப் பெறலாம்.

தபாலில் பெற கடிதம் எழுத வேண்டிய முகவரி
வர்த்தமானன் பதிப்பகம்
40, சரோஜினி தெரு,
தியாகராய நகர், சென்னை 17.
(உஸ்மான் ரோடு கீதாஞ்சலி ஹோட்டல் அருகில்)



நேரில்,
சென்னை வர்த்தமானன் (✆ : 24350561):
கோவை விஜயா (✆ : 2382614 / 2394614):
சேலம் சந்திரா (✆ : 2265635):
தருமபுரி திருவள்ளுவர் (✆ : 268769):
திருச்சி புக் ஹவுஸ் (✆ : 2705098 /2764198):
மதுரை செல்வி (✆ : 2343510 / 2345169):
நெல்லை அருள் நந்தி சிவம் (✆ : 2339692 / 3100710)
ஆகிய இடங்களில் சலுகை விலையினை மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உடனே பெற்றுக் கொள்ளலாம்.
நேரம் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை (உணவு இடைவேளையின்றி) ஞாயிறு விடுமுறை

இச்சலுகை 31.12.2003 வரை மட்டுமே!